பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 25 வெள்ளிக்கிழமை (11.12.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 015

# தமிழ் வேட்பாளரை நிறுத்தும் திட்டத்தை கைவிட்டது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு

## வேட்பு மனுத் தாக்கலின் பின்னரே தேர்தல் நிலைப்பாடு முடிவு

கொழும்பு, டிசெம்பர் 11

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தலாம் என்று யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும், அத்தகைய நடவடிக்கை எதையும் முன்னெடுப்பதில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துவிட்டது.

எனினும், நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி என்ன முடிவு எடுப்பது என்பது குறித்து பின்னர் கூடி ஆராய்வது என்றும் அது தீர்மானித்துள்ளது.

ஆனாலும், எதிர்வரும் 17 ஆம் திகதி வேட்புமனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் தமிழ்க் கூட்டமைப்பின் முழுமையான நாடாளுமன்றக் குழுவின் கூட்டம் நடைபெறுவதற்கு வாய்ப்புகள் இல்லை என்று கருதப்படுவதால், அதன் பின்னரே கூட்டமைப்பின் முடிவு தொடர்பான தீர்மானம் எட்டப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(19ஆம் பக்கம் பார்க்க)

### அன்புசேர் மாணவ மணிகளே!

இன்று ஆரம்பமாகும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள், இடம்பெயர்ந்த மாணவர்கள் அனைவரும், பரீட்சையில் சிறப்பாகத் தேறி சாதனைகள் பல படைத்து கல்வியில் மேலும் மேன்மையுற உதயன் வாழ்த்துகிறான். உங்களின் கல்வித்துறை உயர்ச்சியே எங்கள் சமூகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணை. அதற்கு உதயன் உங்களுக்கு எப்போதும் கைகொடுக்கும் உயிர்த் தோழன்.

## சுகாதார அமைச்சர் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்

சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்றார்.

முற்பகல் 10 மணிக்கு யாழ். தாதியர் கலாசாலையில் நடைபெறும் கலந்துரையாடலில் அவர் கலந்துகொள்வார்.

யாழ். ஆஸ்பத்திரி மற்றும் பிரதேச வைத்தியசாலைகளின் அபிவிருத்தி குறித்து சுகாதார அதிகாரிகள், வைத்திய அதிகாரிகளுடன் அவர் விரிவாக ஆராய்வார் என்று தெரிவிக்கப்படுகிறது. அமைச்சருடன் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். அஜித் மென்டிஸ் மற்றும் உயர் அதிகாரிகளும் யாழ்.வருகின்றனர். (ஒ-1-51)

## மனோவின் கைகளைப் பற்றிக் கதறியழுத காணாமற்போனோரின் பெற்றோர்கள்



சுலோக அட்டையுடன் நிற்கும் ஒருவர்

யாழ்ப்பாணம், டிசெ.11.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் வருகை தந்திருந்தபோது காணாமல் போனோரின் பெற்றோர்கள் அவரின் கைகளைப்பற்றிப் பிடித்துக் கதறியழுதனர். இந்தக் காட்சியைக் கண்ணுற்றவர்களின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடிய உருக்கமான சம்பவம் நேற்று யாழ். வீரசிங்கம் மண்டப முன்றலில் இடம்பெற்றது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## காற்றுடன் கூடிய கடும்மழை இன்று பெய்யலாம்

யாழ்ப்பாணம்.டிசெ,11

வடக்கு, கிழக்கில் அடுத்த 24 மணி நேரத்தில் இடிமின்னலுடன் கூடிய மழை பெய்யும் என்று வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

நேற்று மாலை 4.30 மணிக்கு வெளியிடப்பட்ட காலைநிலை தொடர்பான அறிவித்தலில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

கிழக்கில் தொடர்ந்து மழை பெய்துவருகிறது. அதன் தாக்கம் வடக்கு, கிழக்கு, வடமத்தி, ஊவா ஆகிய மாகாணங்களிலும், அம்பாந்தோட்டையிலும் இடிமின்னலுடன் கூடிய மழை பெய்யும் என்றும் கடும் காற்றும் வீசும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் சகல பகுதிகளிலும் மழை பெய்யும் அறிகுறி காணப்படுகிறது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் அரசியல் தீர்வுக்கு உடன் நடவடிக்கை

### இந்தியாவிடம் பஸில் ராஜபக்ஷ உறுதியளிப்பு

புதுடில்லி, டிசெ.11

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததும் உடனடியாகத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷ இந்தியாவிற்கு உறுதியளித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி நேற்று வவுனியாவில் அமைதிப் பேரணி

வவுனியா, டிசெ.11

விசாரணைகளின்றி நீண்ட நாள்களாகச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி, வவுனியாவில் அமைதிப் பேரணி ஒன்று நேற்று மனித உரிமைகள் தினத்தன்று நடைபெற்றது.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர். தம்மை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி வவுனியா, அநுராதபுரம்

(19ஆம் பக்கம் பார்க்க)

## வலி. வடக்கில் படைமுகாம்களை அகற்றி மக்களை குடியேற்றாவிடில் போராட்டமே ஒரே வழி

### அதற்கு அமைச்சர் டக்ளஸையும் அழைக்கிறார் மாவை

யாழ்ப்பாணம், டிசெ.11.

வலி.வடக்கில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள படை முகாம்கள் அகற்றப்பட்டு, அப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை ஜனவரிக்குள் மீளக் குடியேற்றப்படாது விட்டால், ஜனநாயக வழியில் போராட்டங்களை நடத்துவோம்.

அந்தப் போராட்டங்களில் பங்குகொள்ளுமாறு இந்த மேடையில் வைத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் நான் அழைப்பு விடுக்கிறேன்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் நாளை யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், டிசெ.11

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இருநாள் விஜயமாக நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

அவருடன் மக்கள் ஜனநாயக முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன், ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாஆகியோரும் வருகின்றனர்.

சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூ

(20ஆம் பக்கம் பார்க்க)

வேறெங்கும் கிடையாத அளவுக்கு......
நம்ப முடியாத சலுகைகளும்,
அதிரடி விலைக்கழிவும்
VISA MasterCard
கடனட்டை வசதிகளுடன்
MUSIC WORLD
THE LEADING IT SUPPER MARKET IN JAFFNA
தெரிவும், தீர்மானமும் உங்களது வசதிகளுக்கேற்ப
MW System 01 Rs.37,000/=
MW System 02 Rs.42,500/=
MW System 03 Rs.48,500/=
MW System 04 Rs.49,000/=
MW System 05 Rs.55,500/=
MW System 06 Rs.58,000/=
FREE
141B, Palaly Road, Thirunelvely, Jaffna. musicworld@dialognet.lk / musicworld@sltnet.lk - 021 222 6554

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி ம.பிரியம்வதா
அவர்களின் அன்புத் தந்தை

### திலகநாயகம் போல்

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/563094) **ஆசிரியர் கழகம்**
**யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

## கண்ணீர் அஞ்சலி



சுன்னாகம் இலங்கை வங்கி
மேற்தரக்கிளை முகாமையாளர்
திரு.எஸ்.பி.அரசகுமார்
அவர்களின் பாசமிகு சகோதரர்

### சின்னத்துரை பற்றிக் அரசநாதன்

அவர்களின் திடீர் மறைவு அறிந்து மிகுந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சுந்தர்சன்**
யாழ்.வீதி, **உரிமையாளரும்,**
மானிப்பாய். (சி/563045) **ஊழியர்களும்.**

## கூட்டுறவு பனந்தொழில் வல்லுநர்களின் மாபெரும் மகாநாடு சிறப்புற வாழ்த்துகிறோம்

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இன்று (11.12.2009) வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள கூட்டுறவுப் பனந்தொழில் வல்லுநர்களின் மாபெரும் மகாநாடு சிறப்புற அமையவும், அம் மகாநாட்டின் மூலம் வடமாகாணத்திலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் செயற்பாடுகள் விரிவு பெற்று இத்துறை சார்ந்த தொழிலாளர்களின் வாழ்வு ஒளிமயமாக வேண்டும் எனவும் மென்மேலும் இந்நிறுவனங்களின் செயற்பாடுகளினால் வடமாகாணத்தில் பனை தென்னை வள அபிவிருத் திகள் விருத்திபெற வேண்டும் எனவும் அருள் மிகு சித்திரவேலாயுதர் சுவாமிகள் அருள் ஆசிகள் வேண்டி வாழ்த்துகிறோம்.

இ.நித்தியகஜேந்திரன் ஐயர்
அச்சுவேலி வடக்கு, பிரதம பூசகரும், இவ் ஆலய பகுதி மக்களும்,
அச்சுவேலி. (93094) அருள் மிகு சித்திரவேலாயுதர் தேவஸ்தானம்.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் பொன்னுத்துரை வில்வராஜா

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/இந்துக்கல்லூரி)

அன்னையின் மடியில்
16★04★1937
ஆண்டவன் அடியில்
14★12★2006

திதி: தசமி (11.12.2009)



அன்பான அப்பாவாய்
அறிவூட்டும் ஆசிரியனாய்
பண்பான கணவனாய்
பரிவான மாமனாய்
பாசமுள்ள பேரனாய்
அவனியிலே வாழ்ந்து
ஆண்டவன் அடியிணைந்து
ஆண்டுகள் மூன்று ஆனாலும்
ஆறவில்லையே அப்பா எம் துயரம்
காயவில்லையே அப்பா எம் கண்ணின் ஈரம்.

உங்கள் பிரிவால் ஏங்கும்:
6, செல்லர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (93093) **குடும்பத்தினர்.**

## ஐக்கிய தேசிய கட்சியின் விசேட பூசை வழிபாடு





நாளை (12.12.2009) சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் கௌரவ ரணில் விக்கிரமசிங்காவும் நாடாளுமன்ற உறுப்பினர்களான கௌரவ டாக்டர் ஜெயலத் ஜயவர்த்தனாவும், கௌரவ மனோ கணேசனும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் சா.சத்தியேந்திராவின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் விசேட பூசையில் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பொதுமக்களையும் விசேட பூசை நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**சா.சத்தியேந்திரா,**
**யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளர்,**
(93102) **ஐக்கிய தேசியக் கட்சி.**

## கடைகள் வாடகைக்கு

பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட கடைத் தொகுதியில் உள்ள கடைகள் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:- **அம்பாள் மரக்காலை, வீரமாகாளி அம்மன் கோயிலடி.**
**T.P: 0777111147, 222 7354**

## திருத்தம்

நேற்றைய ''கல்விச்சுடர்'' பகுதியில் வெளிவந்த 'தமிழ்மொழியும் இலக்கியமும்' வினாத்தாளில் -

பகுதி I இல், 27 ஆவது வினாவில் 'முற்றியலுகரம்' என்பதற்குப் பதிலாக 'குற்றியலுகரம்' எனவும் -

பகுதி III இல், 03 வினாவில் (அ) பகுதியில் 'காதல் பாடல்களில்...' என்பதற்குப்பதிலாக 'காற்றுப் பாடல்களில்' எனவும், தவறாகப் பிரசுரமாகிவிட்டன.

## மரண அறிவித்தல்

### சண்முகவடிவேலு இரத்தினம்

நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சண்முக வடிவேலு இரத்தினம் நேற்று (10.12.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முக வடிவேலின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2009) வெள்ளிக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சீயாக்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மடத்தடிலேன், தகவல்:
நீர்வேலி மத்தி, நீர்வேலி. குடும்பத்தினர்.

## அமலமரித் தியாகிகளின் மேலாளர் வருகை

குருநகர், டிசெ. 11

அமலமரித் தியாகிகள் சபையின் அதி உயர் மேலாளர் அதி.வண வில்ஜெய்ம் ஸ்ரெக்கிளிங் அடிகளார் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தர உள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதர உள்ள இவர் கோப்பாயில் உள்ள அ.ம.தியாகிகளின் ''சங்கம்'' மடத்தில் அ.ம.தியாகிகளின் வருடாந்த ஞான ஒடுக்கத்தை முன்னெடுக்க உள்ளார் என யாழ். ஆயர் இல்லம் தெரிவித்தது.

(1-51)

**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்.
புதிய கல்வியாண்டு 2010
* Gr1 முதல் O/L வரை
* Eng.med.Gr 6 To 11
* Eng.lit & I.C.T
ஆரம்பமாகியுள்ளன
* A/L 2010 DAY & PAPER
* கலை, வர்த்தகப் பிரிவுகள்,
* சிங்களம், ஆங்கிலம்

பொருளியற் கல்லூரி, யாழ்ப்பாணம்
A/L DAY CLASS
பொருளியல்
எஸ்.வரதராஜன் B.A (Hons)
ஆரம்பம்: 15.12.2009 செவ்வாய் 1-3 p.m
2011-9.30-11.00
2010-11.00-01.00

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 10 ★ 08 ★ 1963



மறைவு 11 ★ 11 ★ 2009

### அமரர் யோகரத்தினம் சகுந்தலா (ராசன்)

அன்போடும் பண்போடும் அகமதை
சிறப்பித்தீர்! கண்போல் எம்மைக்
காலமெல்லாம் காத்தீர்!
இன்று விண்ணகத்தே உன்னகமாய் ஆக்கிவிட்டீர்!

கடந்த (11.11.2009) அன்று சிவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் இல்லத்தில் இன்று (11.12.2009) வெள்ளிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

51/2, நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை, (93113) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஞானம்மா செல்வதுரை



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானம்மா செல்வதுரை நேற்று (10.12.2009) காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (11.12.2009) பி.ப. 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி சேமக் காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16, சோமசுந்தரம் அவனியூ, தகவல்: திருமதி அரியரட்ணம் (மகள்)
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (93116) 021 222 5031

### செல்லையா மகேந்திரன்



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் உசன், மிருசுவிலை வசிப்பிடமாகவும், தற்போது 46/2, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய செல்லையா மகேந்திரன் (09.12.2009) புதன்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - மரியம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வெலிச்சோர் - மாகிறட் மரியம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், புளோறன்ஸ் பற்றிமாவின் பாசமிகு கணவரும், ஜெலீம், ஜெரிக்கோ, மேரிஜோய், டிலக்ஷி ஆகியோரின் அன்புத் தந்தையும் டொறினின் மாமனாரும் எரிக்சனின் பேரனும் அமரர் றீற்றாவின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி தூய மரியன்னை பேராலயத்தில் நாளை (12.12.2009) சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு தூய கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

46/2, மாட்டீன் வீதி, தகவல்:
யாழ்ப்பாணம். (93111) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### அமரர் பாலசிங்கம் நாகநாதன்



மலர்வு 01.05.1960 உதிர்வு 11.11.2009

அன்பிற்கும், பண்பிற்கும் பிறப்பீடமானவரே
தண்ணீரை விட்டகன்ற மீனைப்போலத்
தத்தளித்து தவிக்கின்றோம். உம்மைநாடி
கண்ணீரைச் சிந்திச்சிந்தி கதறுகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்தித்து நிற்கின்றோம்.

கடந்த 11.11.2009 அன்று சிவபதமடைந்த எங்கள் குலவிளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (11.12.2009) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் குரும்பைகட்டி வைரவர் ஆலயமுன்றலில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குரும்பைகட்டி,
புலோலி தென்.மேற்கு, புலோலி. (சி/563084) **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் ஆட்சிக்கு இத்தேர்தலோடு சாவுமணி!

அரசியல் விடயங்கள், அணி சேரல்கள், கட்சி மாறல்கள் போன்றவை போகின்ற போக்கைப் பார்த்தால் பெரும்பாலும் இலங்கை எதிர்கொள்கின்ற - நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கின்ற - கடைசித் தேர்தல் இதுவாகத்தான் இருக்கப் போகின்றது என எண்ணத் தோன்றுகின்றது.

இந்தத் தேர்தலில் போட்டியிடும் பிரதான இரு வேட்பாளர்களில் யார் வென்றாலும், அத்தோடு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமைக்கு சாவுமணி அடிக்கப்படும் என்று இரு தரப்புகளில் இருந்தும் தெளிவாக சைகைகள் காட்டப்பட்டு விட்டன.

ஆனால், அப்படி இரு தரப்புகளும் வெளிப்படுத்திக் காட்டிய பின்னரும், அதே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்தல் என்ற பிரச்சினையை மையப்படுத்தியே இரு பிரதான தரப்புகளும் இத் தேர்தலில் அரசியல் ரீதியாக மோதிக்கொள்ளும் நிலைமை நீடிப்பதும் வியப்புக்குரியது; விந்தையானதுதான்.

கடந்த தடவை ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்ட போதே, இத்தகைய நிறைவேற்று அதிகார ஆட்சி முறையைத் தாம் ஜனாதிபதியாக வந்தால் இல்லாமல் ஒழிப்பார் என்று எழுத்து மூலம் வாக்குறுதி தந்து, அதனை முன்னிலைப்படுத்தியே மஹிந்த ராஜபக்ஷ அத் தேர்தலை எதிர்கொண்டார். அதில் வெற்றியும் பெற்றார். ஆனால், வாக்குறுதியளித்தபடி அந்த முறைமையை ஒழிக்க அவர் நடவடிக்கை எடுக்கவில்லை.மாறாக, இன்னொரு தடவை அப்பதவியில் நீடிப்பதற்கு எல்லாவகையான முயற்சிகளையும் - அவர் முன்னெடுக்க முயல்கின்றார்.

இம்முறை ஆட்சிக்கு வந்தால் அந்த முறைமையை ஒழிப்பேன் என்று அவர் இப்போது கூறுகின்றார். இந்தக் கூற்று, கடந்த தடவைத் தேர்தலின்போது இதுபோன்று அவர் கூறிய ஏமாற்றும் முயற்சியாக இருக்காது என நாம் நம்பமுடியும்.

ஏனெனில், இந்தத் தடவையும் அவரே - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே - இத்தேர்தலில் வெல்வாராயின் அவரது அந்தப் பதவிக் காலத்தோடு அவரது ஆட்சி முற்றுப் பெறவேண்டியதுதான். ஏனெனில், இலங்கை அரசமைப்புப்படி ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதிப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட முடியாது என்பது தெளிவானது; உறுதியானது.

எனவே, வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வென்றால் அதற்கான பதவிக்காலத்தின் பின்னர் அப்பதவியிலே அவர் நீடிப்பது அல்லது அப்பதவிக்கு மீள வருவது என்பது சாத்தியம் குறைந்ததாகவே இருக்கும்.

எனவே, இம்முறை தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வென்று ஜனாதிபதியானால், அந்தப் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னரே, தாம் தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தில் நீடிக்கக் கூடியதாக அந்த ஆட்சி முறைமையை அவர் மாற்றியமைக்க எத்தனிப்பார் என்பது வெளிப்படையானது. அப்படித் தாம் செய்வார் என்பதை அவர் ஏற்கனவே கோடிகாட்டியுமுள்ளார்.

அதாவது, இம்முறை தேர்தலிலும் அவர் வெல்வாராயின் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை அனுபவித்துவிட்டு, அதன் முடிவிலேயே ஆட்சி முறைமை மாற்றத்துக்கு அவர் முயல்வார் என எதிர்பார்க்கலாம்.

ஆனாலும், தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையின் கீழ், ஒரு முழு சர்வாதிகாரி போன்ற அதிகார வலிமை நிலைக்குத் தம்மை உயர்த்திக்கொண்டுள்ள ஜனாதிபதி ராஜபக்ஷ, அந்த ஆட்சி முறைமைக்கு மாற்றாகத் தாம் கொண்டுவர எத்தனிக்கக் கூடிய - உத்தேசிக்கக் கூடிய - புதிய ஆட்சி முறைமையிலும் தமது பதவி நிலையை அத்தகைய சர்வாதிகார ஸ்திர முடையதாக மாற்றிக்கொள்ள மாட்டார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

இந்நிலைக்கு மாறாக, இந்தத் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக நிறுத்தப்படும் சரத் பொன்சேகா, தாம் இத் தேர்தலில் வென்றால் ஆறு மாத காலத்துக்குள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை மாற்றியமைக்கத் தாம் திட்டமிட்டுள்ளார் என்பதை வெளிப்படையாக அறிவித்துள்ளார்.

இதேவேளை, ஜெனரல் சரத் பொன்சேகா இத்தேர்தலில் வென்று ஜனாதிபதியானாலும் நடாளுமன்றில் அவருக்கு எதிரான பெரும்பான்மை நீடிக்கக்கூடிய வாய்ப்புத் தென்படுகின்றது. ஐ.தே.கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவை இரண்டுமே அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் இருக்கும். இந்த இரு கட்சிகளில் எதுவுமே அவரைத் தமது கட்சித் தலைவராக ஏற்கவோ அல்லது நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியில் தொடரவோ அனுமதிக்க மாட்டா. அவருக்கு நெருக்கடி கொடுத்துக் கொண்டே அவை இருக்கும். அதனால் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியில் இருந்துகொண்டும், அந்த அதிகாரங்களை - தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போல் அல்லாமல் - முழு அளவில் பிரயோகிக்க முடியாத இக்கட்டு நிலையில், 'வலது குறைந்தது' போன்ற அதிகாரப் பின்னடைவில் பொன்சேகா தள்ளாட வேண்டியிருக்கும். அத்தகைய சந்தர்ப்பத்தில் அவர் ஓர் இராணுவ ஆட்சிமுறைமையை நாடுவதும் கூட தவிர்க்க முடியாததாகிப் போகக்கூடும்.

அத்தகைய நிலை ஏற்பட்டால் கூட, அதன் பின்னர் ஒரு நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான தேர்தலை நடத்தும் சூழ்நிலை இல்லாமல் போவதற்கே அதிக வாய்ப்புகளுண்டு.

எப்படிப் பார்த்தாலும் இந்த ஜனாதிபதித் தேர்தலுடன் இந்த ஆட்சி முறைமைக்கு சாவுமணி ஒரேயடியாக அடிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் தென்படுகின்றன என்பதே உண்மையாகும்.

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பம்; 5லட்சத்துக்கும் அதிகமானோர் தோற்றுகின்றனர்

அச்சுவேலி.டிசெ.11

இன்று ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சைக்கு 5லட்சத்து 45,132 மாணவர்கள் நாடளாவிய ரீதியில் தோற்றுகின்றனர். புதிய பாடத் திட்டம், பழைய பாடதிட்டம் என்ற வகையில் இரண்டு பாடத்திட்டங்களுக்கும் இம்முறை பரீட்சைகள் நடைபெறுகின்றன. 10 தினங்கள் நடைபெறவுள்ள சாதாரணதரப் பரீட்சைக்கு 4037 பரீட்சை நிலையங்களும் 504 இணைப்பு நிலையங்களும் 30 ஒருங்கிணைப்பு நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் 5,45132 மாணவர்களில் புதிய பாடத்திட்டத்திற்கான பரீட்சைக்கு 410,274 மாணவர்கள் தோற்றுகின்றனர். இதில் பாடாசாலை பரீட்சார்த்திகளாக 405,257 பேரும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக 5,017 பேரும் தோற்றுகின்றனர். இவர்களுக்காக 3215 பரீட்சை நிலையங்கள் செயற்படவுள்ளன.

பழைய பாடத்திட்டதின் பிரகாரம் நடைபெறவுள்ள பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளாக 124,858 பேரும் தோற்றுகின்றனர். இவர்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு 1092 பரீட்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

புதிய, பழைய பாடத்திட்டத்திற்கு நடைபெறவுள்ள பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு செயற்படவுள்ள 4307 பரீட்சை நிலையங்களுக்குமான வளங்களை மேற்கொள்வதற்கு 504 இணைப்பு நிலையங்களும் 30 ஒருங்கிணைப்பு நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான செயற்பாடுகளை திட்டமிட்ட முறையில் சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை பரீட்சைத்திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

நலன்புரி நிலையங்களில் இருந்து மீளக் குடியேறிய மாணவர்கள் தமது வசிப்பிடங்களுக்கு அருகில் உள்ள பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த வருடம் நடைபெறும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை தொடர்பான கடமைகளில் 70 ஆயிரம் ஊழியர்கள் வரையில் பங்கு கொள்ளவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் யாழ்ப்பாணம் 1, யாழ்ப்பாணம் 2 என இரண்டு வலயங்களாக பரீட்சை தொடர்பான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. (04-11)

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 9 பேர் திடீர் சோதனையில் சிக்கினர்

## தலா 18 ஆயிரம் ரூபா அபராதம்

அச்சுவேலி, தோப்பு, இடைக்காடு ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் நடவடிக்கையில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 9 பேர் சிக்கினார்கள்.

அச்சுவேலி பொலிஸாரின் உதவியுடன் சுன்னாகம் மின் அத்தியட்சகர் ஏ.நாகராசா தலைமையிலான குழு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற ஆ.பிரதீபன், ந.ரஜிதா, த.தம்பிப்பிள்ளை, க.செல்லத்துரை, பெ.இராசமணி, சு.நகுலா, சி.சின்னப்பொடியன், ந.பாலகிருஷ்ணன், இ.தேவராசா ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

ஒன்பது பேருக்கும் தலா 18 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

உயிராபத்தை ஏற்படுத்தி வரும் சட்டவிரோத மின் பாவனையைத் தடுக்க கடும் நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது என்று மின்சார சபை தெரிவித்துள்ளது. (ஓ-1)

# காரைநகர்- ஊர்காவற்துறை கடற்பாதைக்கான 'கேபிள்'கள் வவுனியாவிலிருந்து வந்து சேர்ந்தன

## விரைவில் அவற்றைப் பொருத்தும் பணிகள் நடைபெறும்

யாழ்ப்பாணம்,டிசெ.11

காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையே நடைபெற்று வரும் கடற்பாதைக்கான 'கேபிள்'கள் வந்து சேர்ந்துள்ளன.

இந்தப் பாதையின் கேபிள் இணைப்புக்கள் அண்மையில் சேதமடைந்தன.எனினும் ஒருவாறு அவை தற்காலிகமாகப் பொருத்தப்பட்டு பாதைச் சேவை இடம்பெற்று வந்தது.

இதனால் காரைநகர், ஊர்காவற்றுறை பாதைச் சேவையைச் சீராக்கும் வகையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் புதிய கேபிள் இணைப்புக்களை வவுனியாவில் இருந்து எடுத்து வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவற்றை இணைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது. (04-224)

# பொதுமக்களின் பிரச்சினைகள் குறித்து புதன்தோறும் மேயரைச் சந்திக்கலாம்

## உடனுக்குடன் தீர்வுகாண முடியும்

யாழ்ப்பாணம், டிசெ.11

வாரத்தின் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் அலுவலக விடயமாக பொதுமக்கள் யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவைச் சந்திக்கலாம்.

பொதுமக்கள் சந்திப்பு தினமாக அறிவிக்கப்பட்டுள்ள புதன்கிழமைகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை நடமாடும் சேவையை ஒத்ததாக அங்கு பணிகள் இடம்பெறும்.

இந்த 'பொதுமக்கள் தினம்' எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை முதல் நடைமுறைக்கு வருகிறது.

இந்தச் சேவை நாள்களில் மாநகர மேயருடன் மாநகர சபையின் திணைக்களத் தலைவர்கள் மற்றும் பகுதித் தலைவர்கள் சமுகமளிப்பர் என்றும் பொதுமக்கள் தங்களது பிரச்சினைகளுக்கு இயன்றளவு உடனுக்குடன் தீர்வைக் காணமுடியும் என்றும் மேயரின் செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# கடந்த வருடம் விசேட பாடத்துக்குத் தோற்றாத வன்னி மாணவர்கள் இம்முறை பரீட்சை எழுதலாம்

## பரீட்சைத் திணைக்களம் ஏற்பாடு

அச்சுவேலி, டிசெ.11

கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரண தர கணிதபாட விசேட பரீட்சைக்குத் தோற்றாத, வன்னிப் பெருநிலப்பரப்பைச் சேர்ந்த மாணவர்கள் இந்த வருடம் கணித பாடப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட மாணவர்கள் கணித பாடத்துக்கு மட்டும் தோற்றுமிடத்து அவர்கள் ஒரே தடவையில் சித்தியடைந்தவர்கள் எனக் கணிதபாடப் பெறுபேற்றையும் உள்ளடக்கி ஜி.சீ.ஈ சாதாரண தர சான்றிதழ் வழங்குவதற்கான ஏற்பாடுகளைப் பரீட்சைத் திணைக்களம் செய்துள்ளது.

கணிதபாட விசேட பரீட்சைக்குத் தோற்றாதவர்கள் 2008ஆம் ஆண்டு பரீட்சைக்கான சுட்டிலக்கம் மற்றும் பரீட்சை நிலைய இலக்கங்களிலேயே பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். இவர்கள் 2009ஆம் ஆண்டுக்கான சுட்டிலக்கம் மற்றும் வேறு பரீட்சை நிலைய இலக்கங்களில் கணிதபாடம் உட்பட வேறு பாடங்களுக்கும் தோற்றுபவர்களாக இருந்தால் அவர்களின் பரீட்சை பெறுபேறு இந்த வருடத்துக்கு உரியதாகக் கொள்ளப்பட்டு இரண்டு தடவைகளில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தவர்களாக கருதப்படுவார்கள்.

2008ஆம் ஆண்டு கணிதபாட வினாத்தாள் மாணவர்களின் பாடப்பரப்பிலும் கடினமான தன்மை கொண்டதாக இருந்தமையால் பகுதி 2 வினாப்பத்திரம் ரத்துச்செய்யப்பட்டே விசேட பரீட்சை நடத்தப்பட்டது. அதற்கு மட்டுமே மாணவர்கள் தோற்றினர். ஆனால் இந்த வருடம் கணிதம் 1, கணிதம் 11 இரண்டு வினாப் பத்திரத்துக்கும் தோற்றவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (04-11)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை | 26 12.12.2009 சனிக்கிழமை |
| திதி: | ஏகாதசி பி.ப. 05.09 வரை |
| நட்சத்திரம்: | சித்திரை பி.ப. 02.03 வரை |
| சுபநேரம்: | 03.20-04.50 வரை |
| ராகுகாலம்: | 09.20-10.50 வரை |

# வீக்கத்துக்காகச் சிகிச்சை பெறவந்த சிறுமியின் முழங்கையினுள் குண்டுச் சிதறல்!

## யாழ்.ஆஸ்பத்திரியில் கண்டுபிடிக்கப்பட்டது



யாழ்ப்பாணம், டிசெ.11

கையில் சிறு வீக்கத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 11 வயதுச் சிறுமியின் முழங்கையில் குண்டுச் சிதறல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் புற்றி மேலும் தெரிய வருவதாவது:-

வன்னிப்பகுதியில் நடைபெற்ற யுத்தத்தின்போது குறித்த சிறுமிக்கு கையில் காயமொன்று ஏற்பட்டுள்ளது. உரிய மருத்துவ வசதிகள் இல்லாததால் மேலதிக பரிசோதனைகள் எதுவும் மேற்கொள்ளப்படாமல் அந்தக் காயத்துக்கு மருந்து மட்டுமே கட்டப்பட்டது.

பின்னர் யாழ்ப்பாணத்தில் தந்தையுடன் இச்சிறுமி மீளக்குடியேறியுள்ளார். அவரின் கையில் காயப்பட்ட இடத்தில் சிறு வீக்கமொன்று காணப்பட்டதால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வந்தபோதே சிறுமியின் முழங்கைப் பகுதியில் குண்டுச் சிதறல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

மீளக்குடியேறிய பலருக்கும் இதுபோன்று உடலில் குண்டுச் சிதறல்கள் மறைந்திருக்கலாம் எனவும், அவ்வாறிருந்தால் அது எதிர்காலத்தில் அவர்களுக்குப் பல உடலியல் உபாதைகளை உண்டாக்குமென்றும் யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனவே வன்னியிலிருந்து வந்து மீளக்குடியமர்ந்தவர்கள், போரின்போது காயமடைந்திருந்தால் அவர்கள் தமது உடலில் குண்டுச் சிதறல்கள் ஏதாவது உட்புகுந்துள்ளனவா என்பதனைப் பரிசோதனை செய்து கண்டறிந்து உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளமுடியுமெனவும் அதன்மூலம் பாதிப்புக்களைத் தவிர்த்துக்கொள்ளலாம் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் ஆலோசனை தெரிவித்தன. (04)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## இளையதம்பி பொன்னையா



புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி பொன்னையா நேற்று (10.12.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், வாமதேவி, சறோஜினிதேவி, பாலசுப்பிரமணியம், மோகனராஜ், காலஞ் சென்றவர்களான ஞானேஸ்வரி, வாமதேவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜகுமாரி (சிவா), புஸ்பராணி ஆகியோரின் மாமனும் இராஜரட்ணம், துஷ்யந்தினி, விஜயகுமார் (அன்ரன்-ஆசிரியர், நீர்வேலி றோ.த.க பாடசாலை), ரவீந்தினி, மஜித்காந், சதூஸ்காந், சுகனியா, கீர்த்தனா, றஜிதா, முகுந்தன், பிருந்தன், ஸ்ரீவர்ணன் ஆகியோரின் பேரனும், ஸோபிகாந், பகீனா, சாருகாந், அர்ச்சயன், மதுசியாம், அபிநயா, அஸ்வினா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 11.12.2009) வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிழக்கு அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்; நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பேரன்- நா.விஜயகுமார் (அன்ரன் ஆசிரியர்)

புத்தூர் கிழக்கு, புத்தூர். (93106)

## வல்லிபுரம் மனோன்மணி



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லி புரம் மனோன்மணி (09.12.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை-பொன்னு தம்பதியரின் மகளும், வல்லிபுரத்தின் மனைவியும், அமரர் கணபதிப்பிள்ளை, கனகம்மா ஆகியோரின் சகோதரியும், அமரர் தவமணிதேவி மற்றும் விஜேந்திரராணி, புஸ்பமலர், துரைராஜா, ஆகியோரின் அன்புத் தாயாரும், வினாயகம், தங்கவேலு, அமரர் விஜயராசா, மற்றும் றமணி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (10.12.2009) வியாழக்கிழமை பகல் 2 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், சகலரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தங்கவேலு வீஜேந்திரராணி (வவா)

கொழும்புத்துறை. (93105)

## திருமதி சிவசம்பு சின்னத்தங்கம்

மாவை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது சிறுப்பிட்டியில் வசித்து வந்தவருமான திருமதி சிவசம்பு சின்னத்தங்கம் நேற்று (10.12.2009) வியாழக்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சீனிக்குட்டி- சிவசம்புவின் அன்பு மனைவியாரும், இராசலட்சுமி (டென்மார்க்), அன்னலட்சுமி, பாக்கியலட்சுமி, விக்கினேஸ்வரன், சீனிவாசகம் (கனடா), பாலசுப்பிரமணியம், பேபி இராசமலர்தேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் சுவாமிநாதன் மற்றும் கனகசபை, அமரர் பத்மநாதன் மற்றும் நகுலேஸ்வரி, இரத்தினேஸ்வரி, ரதிதேவி, கெங்காதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.12.2009) வியாழக்கிழமை சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலியில் நடைபெற்று பூதவுடல் காலையன்மொன்டி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்

சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி (93110)

## இளையதம்பி கந்தசாமி



நயினாதீவு, 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட இளையதம்பி கந்தசாமி நேற்று (10.12.2009) வியாழக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா -செல்வம் தம்பதியினரின் அன்பு மருமகனும், கண்மணியின் அன்புக் கணவரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2009) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வசந்தன்
யோகராஜா(சின்ராசு)

1 ஆம் வட்டாரம்,
கந்தசாமி கோயிலடி, புங்குடுதீவு. (93100)

## திருமதி சுப்பிரமணியம் திலகவதி



நுணச்சை, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், நெல்லோடை அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் திலகவதி நேற்று (10.12.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கிளாக்கர் வேலுப்பிள்ளையின் அன்பு மகளும்,காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் அருந்ததியின் (ஜேர்மனி) அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2009) வெள்ளிக்கிழமை மு.ப10.30 மணிக்கு சதானந்தா வீதி, அளவெட்டி மத்தியில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் 'தகனஞ்செய்யப்படும்.

தகவல்:
இராமச்சந்திரன் ஸ்ரீலவன் (பெறாமகன்)
செல்வா (யுனிசெவ், யாழ்)

சதானந்தா வீதி,
அளவெட்டி மத்தி. (93115)


# மக்கள் வங்கி

யாழ்ப்பாணப் பிரதேச விளையாட்டுக் கழகம்நடத்தும்

**விளையாட்டு விழா-2009**

**இடம்**
யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானம்

**காலம்**
நாளை (12.12.2009) சனிக்கிழமை
காலை 8.30

**பிரதமவிருந்தினர்**
திரு.பி.வி பத்திரண
பிரதம நிறைவேற்று அதிகாரி /
பொதுமுகாமையாளர், மக்கள் வங்கி

**கௌரவ விருந்தினர்**
திரு.என்.வசந்தகுமார்
சிரேஷ்ட பிரதிப் பொதுமுகாமையாளர்
[திறைசேரி, சர்வதேச வர்த்தகம்]
மக்கள் வங்கி

அனைவரையும் அன்புடன் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

# COLLEGE OF CHEMISTRY
Palam Road, Kantharmadam

இரசாயனவியல்
★ மீள் பரீட்சார்த்திகளுக்கான முழு அலகு உள்ளடக்கலக துரித மீட்டல்
வினா விடை வகுப்பு
Pass Papers (1990-2009)

sat, sunday 9.30 a.m-11 a.m,
Tues, Thrusday 3.00.4.30 p.m

(93108) BY: DIAS, BSc (Hons) spl chem


## மாற்றப்பட்ட பரீட்சை நிலையங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.11.

இன்று ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. (சாதாரணதர) பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை நிலையங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பான விபரங்களை வலயக் கல்விப்பணிப் பாளர்கள் அறிவித்துள்ளனர்.

**தென்மராட்சி - மீசாலை**

பழைய பாடத்திட்டத்தில் மீசாலை வீரசிங்கம் ம.வி. மண்டப இலக்கம் - 3 இல் தோற்றும் பரீட்சார்த்திகளுக்குரிய மண்டபம் மாற்றப்பட்டு மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் இடம் பெறும். பரீட்சார்த்திகள் மாற்றப்பட்ட புதிய மண்டபத்திற்கு சமுகம் அளிக்க வேண்டும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கே. பிரேமகாந்தன் கேட்டுள்ளார்.

**யாழ்ப்பாணம்.**

கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த பரீட்சை மண்டபம் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளது என்று யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

**வலிகாமம்**

பழைய பாடத்திட்ட அனுமதி அட்டையில் பரீட்சை நிலையம் உடுவில் மகளிர் கல்லூரி மண்டப இலக்கம் II எனக் குறிப் பிட்டுள்ள பரீட்சார்த் திகளுக்கான பரீட்சை இராமநாதன் கல்லூரி மண்டப இலக்கம் III இல் நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது என்று வலயக் கல்விப் பணிப்பாளர் பா.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

(ஓ-1)

## புலமைப் பரீட்சைக்கான மாணவர்தெரிவு

அரியாலை அபிவிருத்திச் சங்கம், தரம்-5 புலமைப் பரிசில்பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கு உதவும் நோக்குடன் மாணவர் தெரிவுக்கான பதிவுகளை நாளையும் மறுதினமும் முற்பகல் 10.00 மணி முதல் மேற் கொள்ளவிருக்கிறது.

அரியாலை கனகரத்தினம் சந்தியருகில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் இந்தப்பதிவு இடம்பெறவுள்ளது.

(ஓ-1)

# மரண அறிவித்தல்கள்

## இளையதம்பி கணேசபிள்ளை



காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட, காலஞ்சென்ற இளையதம்பி-சீதேவிப்பிள்ளை தம்பதிகளின் மகன் கணேசபிள்ளை நேற்று (10.12.2009) காலமாகிவிட்டார்.

இவர் தவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, செல்லம்மா, தில்லையம்பலம், சரசம்மா, கந்தசாமி, காலஞ்சென்ற மனோன்மணி, மற்றும் சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவலிங்கம், தவமலர், தங்கமலர், சந்திரலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சுசிலாதேவி, லோகராசா, இரத்தினராசா, பிறேமா, விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மணிக்குமரன், குலச்செல்வன், கோபிறமணன், தவலோகனா, லோகிதன், கீர்த்தனா, ரஞ்சிதமலர், தனுஷாந், பத்மலோஜன், ஜலக்சிகா, ஜலக்சிகன், வேதாரணி, அனோசன், குகதீசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (13.12.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

ஆலடி, காரைநகர்.
0777 205330, 077 6857760 (சி/563095)

## ஐயம்பிள்ளை பத்மநாதன்

[யாழ்ப்பாணம் பாரவூர்திச் சங்க உறுப்பினர், லொறி உரிமையாளர்]



சரசாலை தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.ஐயம்பிள்ளை பத்மநாதன் நேற்று (10.12.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வநாயகி-ஐயம்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பூரணம்- அப்பாக்குட்டி அவர்களின் மருமகனும், செல்வமலரின் அன்புக் கணவரும், சுரேஸ், ரமேஸ், நந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், கீதாம்பிகை, பிறேமலா, றமணன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவலோகநாயகி,வேதநாயகி, பூமலர், யோகலிங்கம், இராசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கீர்த்தனா, சாதனா, சாருஜன், மாதுஜன், அபிநயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.12.2009) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

சரசாலை தெற்கு
சாவகச்சேரி. (C/563088)

## மாரிமுத்து சந்திரராசா (சந்திரன்)



சுழிபுரம் கிழக்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மசரிமுத்து சந்திரராசா நேற்று (10.12.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து -சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், கமலாதேவி, அருந்தவம், கலாறஞ்சினி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2009) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
மருமகன்

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம். (93114)

# மரண அறிவித்தல்

## திருமதி இந்திரகுமார் பங்கயச்செல்வி



சிலம்புப்புளியடி வீதி, சங்கானையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இந்திரகுமார் பங்கயச் செல்வி கடந்த (08.12.2009) செவ்வாய்கிழமை அகால மரணமாகி விட்டார்.

அன்னார் ஸ்ரீகணநாதன் (ஆயுள்வேத வைத்தியர்) - செல்வமலர் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், கந்தசாமி (கந்தசாமி அன் சன்ஸ்)- தவமணிதேவி தம்பதியரின் அன்பு மருமகளும், இந்திரகுமாரின் (கந்தசாமி அன் சன்ஸ்) அன்பு மனைவியும், பேரருட்செல்வி, திருவருட்செல்வி, குகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவகுமார் (ஜேர்மனி), இராசகுமார் (ஜேர்மனி), சித்திரா (சுவிஸ்), செல்வறஞ்சன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மாலா, சிவந்தினி, கிருஷ்ண குமார் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், பிரவீணன் (ஜேர்மனி), பிரித்தா (ஜேர்மனி), பிரவீணா (ஜேர்மனி) ஆகியோரின் சித்தியும், முருககுமார் (சுவிஸ்), யுதிஷா (சுவிஸ்), ஆகியோரின் மாமியாரும், கஜதாஸின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2009) சனிக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இந்திரகுமார் (கணவர்- கந்தசாமி அன் சன்ஸ்)

சிலம்புப்புளியடி,
சங்கானை. (93104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாண்டுக்கான பளு தூக்கும் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணி நான்காம் இடம்


## நீண்டகாலத்தின் பின்னர் கிடைத்த வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.11

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான 2009 ஆம் ஆண்டுக்கான பளுதூக்கும் போட்டி கடந்தமாதம் 22 ஆம் திகதி விளையாட்டு அமைச்சின் பளு தூக்கும் சம்மேளனத்தின் மைதானத்தில் இடம்பெற்றது. இதில் 10 பல்கலைக் கழகங்கள் பங்குபற்றியிருந்தன.

இதில் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக பளுதூக்கும் அணி எட்டுப் புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இப்போட்டியில் மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் றுகுண பல்கலைக்கழகம் 18 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் பேராதனைப் பல்கலைக்கழகம் 16 புள்ளிகளைப்பெற்று இரண்டாம் இடத்தையும், வயம்ப பல்கலைக்கழகம் 14 புள்ளிகளைப்பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. இப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து 10 வீரர்கள் பங்குபற்றியிருந்தனர்.



யாழ்.பல்கலைக்கழக அணியின் பயிற்றுவிப்பாளர்களாக சிரேஷ்ட பயிற்றுவிப்பாளர் ம.இளம்பிறையன், எஸ்.கிரிதரன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

ஒவ்வொரு நிறைப் பிரிவிலும் யாழ். பல்கலைக்கழக அணி வீரர்கள் பெற்ற நிலை வருமாறு:-

* 62 கிலோகிராம் நிறைப் பிரிவில் என்.பாலநாதன் மொத்தம் 127 கிலோ கிராம் நிறையைத் தூக்கி நான்காவது இடம்பெற்றார்.
* 69 கிலோகிராம் நிறைப் பிரிவில் எஸ்.சுபகஜன் மொத்தமாக 155 கிலோ கிராம் நிறை தூக்கி முதல் இடத்தையும் மொத்தமாக 131 கிலோ கிராம் நிறையைத் தூக்கி கே.விஜயராஜ் எட்டாவது இடத்தையும் பெற்றனர்.
* 77 கிலோகிராம் நிறைப் பிரிவில் எஸ்.சிவசொருபன் மொத்தமாக 147 கிலோ கிராம் நிறையைத் தூக்கி ஆறாவது இடத்தைப் பெற்றார்.
* 85 கிலோ கிராம் நிறைப் பிரிவில் எஸ்.பிரசாத் மொத்தமாக 165 கிலோ கிராம் நிறையைத் தூக்கி நான்காவது இடத்தையும் எஸ்.பாஸ்கரன் மொத்தமாக 133 கிலோ கிராம் நிறையைத் தூக்கி ஆறாவது இடத்தையும் பெற்றனர்.
* 105 கிலோ கிராம் நிறைப் பிரிவில் எ. அருட்செல்வன் மொத்தமாக 140 கிலோ கிராம் நிறையைத் தூக்கி 2 ஆம் இடத்தைப் பெற்றார்.

(50-23)

## விளையாட்டு அலுவலர்களுக்கான பயிற்சிமுகாம் திருமலையில்

வலி.வடக்கு, டிசெ.11

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்ட விளையாட்டு அலுவலர்கள், பிரதேச செயலக விளையாட்டு அலுவலர்களுக்கான 5 நாள் பயிற்சி முகாம் திருகோணமலையில் கடந்த 8 ஆம் திகதி ஆரம்பமாகியது.

இப்பயிற்சி முகாமில் கலந்து கொள்வதற்காக யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலர்கள் திருகோணமலைக்குச் சென்றுள்ளார்கள்.

இப்பயிற்சி முகாமில் நிதி, நிர்வாகம் சம்பந்தமான பயிற்சிகளுடன் விளையாட்டு சம்பந்தமான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

இப்பயிற்சி முகாமில் கலந்து கொள்வதற்காக யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலர்கள் கடந்த 7 ஆம் திகதி பயணமானார்கள்.

நாளை சனிக்கிழமை வரை இப்பயிற்சி முகாம் நடைபெறும்.

(50-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# யங் பைற்றர் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி; இளம்புயல், கலைவாணி 'பி', வொடாபோன் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.11

யங் பைற்றர் விளையாட்டுக்கழகத்தின் 5ஆவது வருட நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் 6 பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குருநகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:

### இளம்புயல் வெற்றி

இளம்புயல் வெற்றி விளையாட்டுக் கழகத்துக்கும் எஸ்.ஜி.எஸ்.சி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் இளம்புயல் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இளம்புயல் விளையாட்டுக்கழக அணி 4.2 ஓவர்களில் சகல விக்கெட்டினையும் இழந்து 36 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய எஸ்.ஜி.எஸ்.சி விளையாட்டுக்கழக அணி சகல விக்கெட்டினையும் இழந்து 28 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது. இதனால் இளம்புயல் விளையாட்டுக் கழகம் 8 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

### கலைவாணி 'பி' வெற்றி

கலைவாணி 'பி' அணிக்கும் ஸ்ரார் போய்ஸ் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் கலைவாணி 'பி' வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரார் போய்ஸ் விளையாட்டுக்கழக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 30 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கலைவாணி 'பி' விளையாட்டுக்கழக அணி 2.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 33 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.


### வொடாபோன் வெற்றி

வொடாபோன் விளையாட்டுக்கழக அணிக்கும் யூனியன் அஸ்ஷுரன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் வொடாபோன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் அஸ்ஷுரன்ஸ் விளையாட்டுக்கழக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 31 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வொடாபோன். விளையாட்டுக்கழக அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 32 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

(50-23)



இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணி முதலாம் இடத்தைப் பெற்றது. முதலாம் இடத்தை வென்ற அணி வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களைப் படத்தில் காணலாம். *(படம்: தமிழினியன்)*

# 16 வயதுப் பிரிவினருக்கான உதை பந்தாட்டம்; தீவக வலயத்தில் புங்குடுதீவு ம.வி. சம்பியன்

வலி.வடக்கு, டிசெ.11

தீவகக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 16 வயதுப்பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் புங்குடுதீவு மகாவித்தியாலயம் சம்பியனாகியது.

ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் நாரந்தனை றோமன் கத்தோலிக்க அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் புங்குடுதீவு மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் கோல்கள் பெறுவதற்காகத் தமது திறமைகளை முழுமையாகப் பயன்படுத்திய போதிலும் கோல்கள் எதுவும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து புங்குடுதீவு மகா வித்தியாலயம் 4:1 என்ற கோல்கள் அடிப்படையில் நாரந்தனை றோமன் கத்தோலிக்க அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை வென்று சம்பியனாகியது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் புங்குடுதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயமும் ஊர்காவற்றுறை தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் மோதிக் கொண்டன.

ஆட்ட நிறைவில் புங்குடுதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயம் 5:0 என்ற கோல் கணக்கில் தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை வென்று 3 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

(50-86)



யாழ்.மாவட்டப் பெண்கள் கிரிக்கெட் அணியைத் தெரிவு செய்வதற்கான பயிற்சி முகாம் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
வீராங்கனைகள் பயிற்சியில் ஈடுபட்டிருப்பதைப் படங்களில் காணலாம். *(படங்கள்: நேசன், தமிழினியன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறி விட்டது

ஆவரங்கல், புத்தூர் எனும் முகவரியுடைய தங்கராசா செல்வலட்சுமி என்பவரது தேசிய அடையாள அட்டை (465252103V) யாழ்ப்பாணத் திற்கும் இருபாலைக்கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் பேச்சி அம்மன் கோவிலடி, கோப்பாய் தெற்கு எனும் முகவரியுடன் அல்லது பின்வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

T.P 0779004429 (சி/563066)

## செயலமர்வில் பங்குபற்றாத கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம், டிசெ.11

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தால் கணித, விஞ்ஞான பாடங்களுக்கு ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற பரிகாரக் கற்பித்தல் செயலமர்வில் பங்குபற்றாத சகல கணித, விஞ்ஞான பாட ஆசிரியர்களையும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வலயக் கல்விப் பணிமனை முகாமைத்துவ மண்டபத்திற்கு வருகை தருமாறு கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (50)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
### வெளிவாரிப் பரீட்சைகள் - 2008

1. பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி - II - 2006 & 2007
2. சிறப்புக் கலைமாணி பகுதி - III - 2006

மேற்படி பரீட்சைகளை 28.12.2009 (திங்கட்கிழமை) தொடக்கம் 12.01.2010 (செவ்வாய்க்கிழமை, வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கோப்பாய் மற்றும் வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 21.12.2009 (திங்கட்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.


*பதிவாளர்*
*10.12.2009* (சி/563081)

## கவிதை நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், டிசெ.11

ஜோ. ஜெஸ்ரினின் ''வெற்றிலை நினைவுகள்'' கவிதை நூல் அறிமுகவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் திருமறைக்கலா மன்றத்தின் கலைத்தூது மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (50-9)

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



உயர்திரு.
**பத்திநாதர் டேவிட் சற்குணராசா**
வேலைகள்
அத்தியட்சகர் தரம் - I
(திட்டமிடற் பிரிவு - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

பல்கலைக்கழக சேவைதனில் சீரிய தொழில் நுட்பப் பட்டறிவுடன் 29 ஆண்டுகள் பல்கலைக்கழக சமூகத்தினரின் பெருமதிப்பிற்குரியவராய்ப் பணியாற்றி 06.12.2009 ஆம் திகதியுடன் ஓய்வுபெற்றுச் சென்ற தங்களை, நீடித்த ஆயுளுடன் நோய்நொடிகளணுகா வண்ணம் சகல வளங்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

*'' பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் அவர் தம் கருமமே கட்டளைக் கல்''*

அன்புடன் பல்கலைக்கழக நண்பர்கள் :

திரு.திருமதி இ. ஜெகதீசன்
திரு. ஜோ. ஜெயக்குமார்
திருமதி த. தேவகி
திரு. நீ. மயில்வாகனம்
திரு. சி. மகாராஜா
எந்திரி சி.தயாபரன்
திரு. ஐ. கோ. சந்திரசேகரம்
திரு.க.ஞானபாஸ்கரான்
திரு. அ. ம. கொண்ஸ்ரன்ரைன்
திரு. க. இரத்தினசபாபதி

(93091)

# மரண அறிவித்தல்கள்

## இரத்தினம் தங்கவேலாயுதம் (காந்தி)

*(இலங்கைப் போக்குவரத்துச் சபை கோண்டாவில்)*



371/10, ஆடியபாதம் வீதி, நல்லூர் மாக்கற் கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் தங்கவேலாயுதம் நேற்று (10.12.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-கண்ணம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் பூலோகசிங்கம் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), காசிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுசீலன் (ஜேர்மனி), சுரேந்திரன், சுகந்தன் (கனடா), சுதர்சினி, சுகந்தினி, சுதாகரன் (பிரான்ஸ்), தர்ஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் றஜனி (ஜேர்மனி), சுபத்திரா, ஜெயரூபி, குணசீலன் (சுதர்சினி ஸ்ரோர்ஸ், கொடிகாமம்), சூரியகுமார் (சவுதிஅரேபியா), பாலதேவன் (சுதன் - லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஸ்வேதா, கருணி, நிதில் (ஜேர்மன்), சரண்ஜன், சனோஜன், சுஜீபன் (யா/பரியோவான் கல்லூரி), சுலோஜினி, நிஜோயன், நிலக்ஷன், மிதர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் இராசரத்தினம், காலஞ்சென்ற விநாசித்தம்பி மற்றும் நல்லம்மா, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.12.2009) வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*371/10, ஆடியபாதம் வீதி,*
*நல்லூர் மாக்கற், கல்வியங்காடு,*
*யாழ்ப்பாணம்.* (93099)

*தகவல்:*
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
T.P:0771742428

## திருமதி சிவபாக்கியம் ஐயாத்துரை

*(கலைச்சோலை ரீச்சர்)*



யாழ்ப்பாணம், G.P.S. வீதி, கல்வியங்காட்டைச் சேர்ந்தவரும் தற்போது அமெரிக்காவில் வசித்து வந்தவருமான திருமதி சிவபாக்கியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) 04.12.2009 வெள்ளி மாலை அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம் - செல்லமுத்து தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற சி.வை.ஐயாத்துரையின் (முன்னாள் அதிபர் கிளி/கண்டாவளை ம.வி., கிளி/நாகேஸ்வரா வித்தியாலயம்) அன்பு மனைவியும் ஜெயரட்ணம் (ஜெயம் - கனடா), ஜெயந்தா (பவா - நியூசிலாந்து), வசந்தா (பேபி - அமெரிக்கா), ஜெயக்குமார் (பவா - அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயும் சந்திரலேகா (லேகா - கனடா), தவீந்திரன் (Doctor, ஓமான்), சுந்தரேஸ்வரன் (Doctor, அமெரிக்கா), அனுசியா (Doctor, அமெ ரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற சந்துரு (கனடா) மற்றும் கவிதா (கனடா), சுஜாதா (கனடா), டிலக் (கனடா), தற்சுதன் (Doctor, நியூசிலாந்து), பிரசாந்தன் (Enginear நியூசி லாந்து), ஆர்த்தி (University, அமெரிக்கா), அருண் (University, அமெரிக்கா) ஆகியோரின் பேர்த்தியும் பூபதி (கனடா), காலஞ்சென்ற பரமேஸ்வரி, லோகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர், கல்வியங்காடு), ஜெகதீஸ்வரி (கனடா), நகுலேஸ்வரி (கல்வியங்காடு), பேபி சரோஜா (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரட்ணசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 05.12.2009 சனிக்கிழமை அமெரிக்காவில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பேபி (அமெரிக்கா),**
*0016096582847.*

(93095)


நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு
எமது இனிய நத்தார் வாழ்த்துக்கள்...

BRIGHT
ELECTRICAL HOME APPLIANCES

KANCHAN

உலகப் புகழ்பெற்ற BRIGHT மற்றும் KANCHAN வீட்டுப் பாவனைப் பொருட்களுக்கு ஏக முகவரான
BRIGHT HOME APPLIANCES (PVT) LTD.
நிறுவனம் தமது யாழ்மாவட்டத்திற்கான ஏக விநியோகஸ்தராக
**Karan Electrical**
நிறுவனத்தைப் பெருமையுடன் நியமனம் செய்துள்ளது



யாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் ஓர் பங்களிப்பு



KARAN ELECTRICAL
யாழ் மாவட்டத்திற்கான ஏகவிநியோகஸ்தர்
**கரன் எலெக்ரிக்கல்**
இல: 100, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 8772
021 222 4505
தொலை நகல் : 021 222 4505


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**16.02.1986**

★ இலங்கையில் மனித உரிமை மீறல் குறித்து விசாரிக்க ஐ.நா.சபை தனிக்குழு ஒன்றை நியமிக்கவேண்டுமென ஆலோசனை.

★ இந்திய வெளியுறவுச் செயலாளர் ரொமேஸ் பண்டாரியும் இலங்கைத் தூதர் பேர்னாட் திலகரட்னவும் இலங்கை அரசியல் நிலைவரம் குறித்து பேசுவர்.

★ இராணுவம் சுட்டதில் யாழ்.கோட்டை முகாமுக்கு ஒய்வூதியம் பெறச் சென்ற மூவர் பலி.

**17.02.1986**

★ இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியா இனி ஜனாதிபதி ஜே.ஆருடன் மட்டுந்தான் பேசவேண்டுமென 'இந்து' நாளிதழ் கருத்து

★ அமைச்சர் தொண்டமான் மீது நாடாளு மன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர சுதந்திரக்கட்சி தீர்மானம்.

★ ஈரோஸ் அமைப்பினால் கடத்தப்பட்ட பிரிட்டிஸ் பெண்மணி வில்லிஸ் பெனிலோப்பை ஈரோஸ் அமைப்பு விடுவிக்கும்.

**18.02.1986**

★ சமஷ்டியோ, ஈழமோ வழங்க இயலாதென ஐ.தே.கட்சி மாநாட்டில் ஜனாதிபதி ஜே.ஆர் தெரிவிப்பு.

★ யாழ்.மாவட்ட பொலிஸ் அதிபராக உடுகம்பொல பதவியேற்பு.

★ உலகப் பிரசித்திபெற்ற தத்துவமேதை ஜே.கிருஸ்ணமூர்த்தி காலமானார்.

**19.02.1986**

★ இலங்கையில் வன்செயல்கள் தொடர்வது குறித்து இலங்கைத் தூதுவர் பேர்னாட் திலகரத்தினவிடம் பிரதமர் ராஜீவ்காந்தி கவலை தெரிவிப்பு

★ இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான அரசின் புதிய திட்டத்தை ஜனாதிபதி நாளை வெளியிடுவார்.

★ கொழும்பிலும் 'முகமூடி'யின் உதவியுடன் தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கைது.

**20.02.1986**

★ திருமலை மாவட்டம்-தெஹிவத்தையில் கண்ணிவெடித் தாக்குதலில் 35 பெரும்பான்மையின மக்கள் பலி.

★ கொட்டாஞ்சேனை, பொரளை, புறக்கோட்டையில் 85 தமிழர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது.

★ தாவடியில் நவீனரக யுத்த விமானங்கள் குண்டு வீசித்தாக்கியதில் 3 பொதுமக்கள் பலி: பலர் காயம்.

**21.02.1986**

★ திம்புத் திட்ட அடிப்படையிலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வு அமையுமென ஜனாதிபதி ஜே.ஆர்.தெரிவிப்பு

★ இலங்கையில் இப்போதைய இராணுவப் பலத்துக்கு இந்திய வெளியுறவுச் செயலர் ரொமேஸ்பண்டாரி விட்ட தவறே காரணம் என 'இந்து' நாளிதழ் விமர்சிப்பு.

★ ஆகாயத் தாக்குதல், இராணுவ நிலையங்களிலிருந்து குண்டுகள் பொழிவது ஆகியவற்றை தடுத்து நிறுத்துமாறு யாழ்.சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பிவைப்பு

**22.02.1986**

★ மதவாச்சியில் மனைவியின் பிரிவு தாங்காது அவரது கணவரும் மனைவியின் சிதையில் குதித்து மரணம்.

★ அக்கரைப்பற்றில் 106 தமிழ்விவசாயிகள் ஆயுதப் படையினரின் துப்பாக்கிச்சூட்டில் பலி.

★ தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ்மொழி மாநில யோசனைக்கு இந்திய அரசு வட்டாரங்கள் முழு ஆதரவு வழங்கும் என எதிர்பார்ப்பு

**23.02.1986**

★ அக்கரைப்பற்று தங்கவேலாயுதபுர சம்பவம் குறித்து பகிரங்க விசாரணை நடத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைப்பு

★ பூசாமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் ஆயிரம் தமிழ் இளைஞர்களை தென்னிலங்கையில் குடியேற்ற அரசு முடிவுசெய்திருப்பதாக நம்பப்படுகிறது.

★ தங்கவேலாயுதபுர படுகொலைச் சம்பவம் குறித்து வெளிநாட்டு ராஜதந்திரிகள் அதிர்ச்சியும் கவலையும் வெளியிட்டதாக பி.பி.சி வானொலி தெரிவிப்பு.

**24.02.1986**

★ இலங்கைத் தமிழர் படுகொலைகளை இனியும் பொறுக்கமுடியாதென தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., பிரதமர் ராஜீவ்காந்தியிடம் முறைப்பாடு.

★ நான் இன்று ஆட்சியில் இருந்தால் அமைச்சர் தொண்டமான் வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்திருப்பார் என சுதந்திரக்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ தெரிவிப்பு

★ தமிழர்கள் மீதான தாக்குதலை அரசு நிறுத்தினால் மட்டுமே நாம்பேச்சுவார்த்தைக்குப்போவோம் என த.வி.கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் லண்டனில் தெரிவிப்பு

**25.02.1986**

★ இந்தியாவிலும் மேல் நாடுகளிலும் தஞ்சம் கோரிய இலங்கைத் தமிழர் நிலையை ஐ.நா.ஆராய்வுள்ளது.

★ தங்கவேலாயுதபுர படுகொலைச் சம்பவம் குறித்து விசாரிக்க அரசு ஆயுதப் படையைச் சேர்ந்த மூவர் கொண்ட குழுவை அரசு நியமிப்பு.

★ தெஹிவத்தை கண்ணிவெடித் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் உரிமை கோருகிறது.

**26.02.1986**

★ பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதியாக 20 வருடங்களாகப் பதவிவகித்த பேர்டினன்ட் மார்க்கோஸ் நாட்டைவிட்டுத் தப்பி ஓட்டம்.

★ வடக்கு கிழக்கு பகுதிகளில் இடம்பெறும் அசம்பாவிதங்கள் குறித்து இந்தியத்தூதுவர் டிக்ஸிற் ஜனாதிபதி ஜே.ஆரிடம் பேச்சு.

★ இலங்கை சம்பந்தமான தனது வெளியுறவுக் கொள்கையை இந்தியா மீளாய்வு செய்யக்கூடுமென ஊகம் வெளியீடு.

**27.02.1986**

★ இனப்பிரச்சினைக்கு ஒரு மாதத்துக்குள் தீர்வு கண்டாக வேண்டும் என இலங்கை அரசுக்கு இந்தியா காலக்கெடு

★ இலங்கைக்கான கனேடிய தூதுவர் ஜி.எம்.கொலகொட் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்.

★ உரியவேளையில் நாட்டில் பொதுத்தேர்தல் நடாத்தப்படுமென ஜனாதிபதி ஜே.ஆர்.தெரிவிப்பு

**28.02.1986**

★ வடபகுதி கடலில் மீன்பிடிப்பதை அரசு முற்றாக தடைசெய்யக்கூடுமென ஊகம் வெளியீடு

★ யாழ்.குடாநாட்டில் நான்கு இடங்களில் ஒரே நேரத்தில் யுத்த விமானங்கள் குண்டுவீச்சு; மூவர் மரணம்; பலர் காயம்.

**முச்சந்தி முரளியின் விமர்சன் இது:**

'பேச்சுவார்த்தை எண்டு காலத்தை கடத்தி வீழவாங்கள் உந்த வீழுந்து எழும்பிற யுத்த விமானங்களைத்தான் வாங்கிச் சேகரித்தவங்களாக்கும். ஆத்தாக் [illegible] அப்பாவி மக்களையெல்லே பலி எடுக்கிறாங்கள்'.

# இலங்கை வங்கியின் தொழில் முயற்சியாளர் பயிற்சிப் பட்டறைக்குத் தெரிவானோர்

யாழ்ப்பாணம், டிசெ.10

இலங்கை வங்கியினால் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் நடத்தப்படவுள்ள மேற்படி பயிற்சிப் பட்டறைக்குப் பங்குபற்றுவதற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளன.

இப்பட்டறை இருநாள்களும் காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது. நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் அங்குரார்ப்பண விழா நடைபெறும். பின்பு ஆஸ்பத்திரியிலுள்ள இலங்கை வங்கி வடபிராந்திய காரியாலயத்தில் கருத்தரங்கு நடைபெறும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும். பங்குபற்றும் பயிற்சியாளர்களுக்கு மதிய உணவு சிற்றுண்டிகளும் வழங்கப்படும் என வட பிராந்திய பொதுமுகாமையாளர் என்.சிவரட்ணம் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:

க.அலைமகள்(இளவாலை), அ.டினோஷா (பாசையூர்-யாழ்ப்பாணம்), ப.அமிர்தா (கொக்குவில்), சி.அனுஷா (கரவெட்டி), தி.அனுசுயா (கோண்டாவில் கிழக்கு), அ.ஜீவாகரன் (உடுப்பிட்டி), ஆ.நிஷாந்தி (வரணி), பா.பேரின்பன் (மீசாலை), பா.பிரசாந்தன்(சுன்னாகம்), த.சஜனி (இளவாலை).

ச.ஹன்ஸ்ராஜ் (ஓட்டுமடம்), த.டயானா (யாழ்ப்பாணம்), க.பிரசாந் (கொக்குவில்), க.அஜந்தன் (பருத்தித்துறை), லோ.காயத்திரி (யாழ்ப்பாணம்), ஞா.சிறிதரன் (கோப்பாய்), தி.ஞானதர்ஷினி (ஆறுகால்மடம்), பி.கௌசல்யா (கொக்குவில்),

இ.ராஜா (பருத்தித்துறை), த.ஜசிக்கா (பருத்தித்துறை), ஜெ.சதீஸ்குமார் (கோப்பாய்), ர.ஜெயகலா (வல்வெட்டித்துறை), ஜெ.பவரூபன் (பருத்தித்துறை), கி.ஜெயராணி (சண்டிலிப்பாய்), யோ.பீற்றர் கொல்வின் (கொக்குவில்), பொ.யூடி நிரோஷா (யாழ்ப்பாணம்), அ.யூலியா (சூரியவெளி).

க.கயதாரணி (சுன்னாகம்), சு.கலைவாணி (வல்வெட்டித்துறை), வ.சுலக் ஷனா (கைதடி), சு.கமலினி (சுன்னாகம்), க.பாவேந்தன் (கொக்குவில்), க.விஜோஜிதா (வரணி), க.சக்திவேல் (மாதகல்), க.பவின் (சுழிபுரம்), க.விக்னேஸ்வரன் (காரைநகர்).

க.கமல் (பருத்தித்துறை), ஈ.கார்த்திகா (யாழ்ப்பாணம்),ந.கவிரேகா (பருத்தித்துறை), பா.கவிதா (வல்வெட்டித்துறை), பி.கிருஷ்ணரஜனி (கொக்குவில்), கி.கொயின்ஸ் (சுன்னாகம்), கு.வசந் (யாழ்ப்பாணம்), கு.அனுஷியா (வரணி), கு.அருட்கண்ணன் (திருநெல்வேலி).

கு.குகரதன் (வல்வெட்டித்துறை), கு.தயாளினி (சண்டிலிப்பாய்), ப.லபிதா (யாழ்ப்பாணம்), லோ.மயூரன் (கோப்பாய்), தி.லோஜினி (வட்டுக்கோட்டை), லோ.லவாண்ஜா வி.சி. (யாழ்ப்பாணம்), ம.தர்யூன் (சுன்னாகம்), ம.ரகுரமணன் (மாதகல்).

ம.செந்தில்ரூபன் (பண்டத்தரிப்பு), ம.கேதீஸ்வரன் (பருத்தித்துறை), ம.நாகமௌலி (கந்தர்மடம்), ம.மோகனதாஸ் (கொக்குவில்),ம.எல்லாளன் (யாழ்ப் பாணம்), மே.நாகமௌலி (யாழ்ப்பாணம்), ப.மதுரா (புற்றளை), வே.மேகலா (காரை நகர்).

தே.மிதுலா (அச்சுவேலி), மு.ரவிவர்மன் (உடுப்பிட்டி), மு.உதயகுமார் (யாழ்ப்பாணம்), ந.கனிவாசன் (மல்லாகம்), ந.இரத்தினவேணி (புற்றளை), ந.நவகாந்தன் (பருத்தித்துறை), ப.நிரோஜினி (சண்டிலிப்பாய்), ச.நிஷாயினி (நல்லூர்).

அ.நொவிநிஷியா (யாழ்ப்பாணம்), ப.குகதாசன் (மானிப்பாய்), ப.சூரியகுமார் (சுழிபுரம்), ப.நதீஷ் (மானிப்பாய்), ரா.பருவநிலா (மல்லாகம்), ப.கஜந்தன் (நயினாதீவு), பே.பிரேம்குமார் (பருத்தித்துறை), பு.ஜெனார்த்தனி (சுன்னாகம்), த.பிரவீனா (பருத்தித்துறை).

பி.யதுஷன் (அளவெட்டி), இ.சிவராம் (பருத்தித்துறை), நா.ரமேஷ்குமார் (வண்ணார்பண்ணை), இ.சரிந்தன் (யாழ்ப்பாணம்), தி.றஜீதா (பருத்தித்துறை), ம.றஜிதா (அளவெட்டி), ரா.வகிர்தன் (சித்தங்கேணி), ர.செந்தூரன் (வேலணை).

ஆர்.விஜயரஞ்சன் (பருத்தித்துறை), ஆர்.சுதர்ஷன் (பருத்தித்துறை), றெறினா கிரிஷாயினி (திருநெல்வேலி) எஸ்.கௌரிசங்கர் (பருத்தித்துறை), எஸ்.ஜெயசோதி (வல்வெட்டித்துறை), எஸ்.துஷ்யந்தினி (கரவெட்டி), எஸ்.வாகீசன் (கரவெட்டி).

ச.அர்ச்சுதன் (நீர்வேலி), ச.சலஷலோசனன் (தெல்லிப்பளை), ச.திலீப்காந் (சங்கானை), ச.நிசாந் (சுன்னாகம்), ச.அருளகன் (மானிப்பாய்), சஞ்ஜீவன் (நல்லூர்), செ.சிவசங்கர் (திருநெல்வேலி), செ.நிஷாந்தன் (மாதகல்), வெ.ஷாமினி (யாழ்ப்பாணம்).

ச.நஜீதன் (சுன்னாகம்), செ.சர்மினி (மானிப்பாய்), சி.பிரகலாதன் (நாவலர் வீதி-யாழ்ப்பாணம்), சி.விமலேஸ்வரன் (மூளாய்), சி.சிந்துஜா (பருத்தித்துறை), சி.பிரசாந் (கொக்குவில்), சி.டெக்ஷி (சுன்னாகம்).

தா.சிவதர்ஷினி (மந்திகை), சி.சிவவானதி (பருத்தித்துறை), சி.சிவரூபன் (கல்வியங்காடு), க.சியனி (மல்லாகம்), த.ஷோகிதா (வல்வெட்டித்துறை), சோ.சாந்தரூபன் (வேலணை), சூ.கஜீரன் (கோண்டாவில்), சூ.சுகுமார் (நீர்வேலி).

சௌ.எழிதரன் (கொக்குவில்), பு.சுவாசினி (சாவகச்சேரி), சு.உதயசங்கர் (திருநெல்வேலி), சி.சுயதர்ஷினி (கோப்பாய்), ப.சுமதா (தொண்டைமானாறு), சு.கணேஷ்குமார் (பருத்தித்துறை), ப.சுரேகா (தொண்டைமானாறு), ரி.நிவேதினி (வல்வெட்டித்துறை), ரி.சிவரூபன் (யாழ்ப்பாணம்).

ரி.தர்ஷினி (வல்வெட்டித்துறை), தி.திலீபன் (யாழ்ப்பாணம்), த.அர்ச்சுனராஜா (பருத்தித்துறை),ச.தனலட்சுமி (பருத்தித்துறை), த.தயாளினி (வல்வெட்டித்துறை), ப.தயாளினி (வல்வெட்டித்துறை), த.தர்ஷிகா (வல்வெட்டித்துறை), க.தாரணி (கொக்குவில்), த.தவமணி (வண்ணார்பண்ணை).

த.சிவகரன் (பருத்தித்துறை), ந.தயாநிதி (யாழ்ப்பாணம்), ச.தயாநிதி (யாழ்ப்பாணம்), தீபிகா (புற்றளை), தெ.பன்னீர்ச்செல்வம் (மானிப்பாய்).

மா.திலானி (யாழ்ப்பாணம்), தி.கோபிநாத் (மானிப்பாய்), து.ஆபிரகாம்லிங்கன் (சுன்னாகம்), து.மகேந்திரன் (மல்லாகம்), கு.உஷாநந்தினி (சண்டிலிப்பாய்).

உ.கருணன் (பருத்தித்துறை), வி.தர்ஷிகா (வண்ணார்பண்ணை மேற்கு), தே.வக்சலா (வல்வெட்டித்துறை), தி.வானதி (கைதடி), அ.வவுனா (வேலணை), வீ.முகிலன் (கொடிகாமம்), வி.அரவிந்தன் (சுழிபுரம்), வெ.குணசீலன் (பருத்தித்துறை).

வி.யசிந்தன் (பருத்தித்துறை), த.விஜோதினி (கைதடி), வி.சுவிகரன் (திருநெல்வேலி), யோ.செந்தூரன் (கொக்குவில்).

(சி)

# 'ஞானதீபம்' நூல் வெளியீட்டு விழா ஞானசம்பந்தர் ஆதீன மண்ட_பத்தில்

யாழ்ப்பாணம், டிசெ.11

சிவ.மகாலிங்கத்தால் தொகுக்கப்பட்ட ஞானதீபம் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் கலாநிதி சி.சிவன்சுதனும், சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட செயலகத் திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபனும் கலந்துகொள்ே:ர்.

இந்த நிகழ்வில் ஆசியுரையை கீரிமலை ஆதீனகர்த்தா இராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள், நல்லைஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆகியோர் வழங்குவர்.

வெளியீட்டுரையை சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் நிகழ்த்தவுள்ளார்.

இந்நூலினை நீர்வேலி கந்தசுவாமி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ இ.சுவாமிநாதக் குருக்கள் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை ஈ.எஸ்.பி நிறுவன உரிமையாளர் நாகரட்ணம் பெறவுள்ளார். (04-204)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதியோர் சங்கங்களுக்கான கூட்டம் இன்று

நவாலி, டிசெ.11

வலி.தென்மேற்குச் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதியோர் சங்கங்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு அனைத்து அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா அறிவித்துள்ளார். (50-204-100)

# இரத்தவங்கிப் பொறுப்பதிகாரி நியமனம்

வடமராட்சி, டிசெ.11

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை இரத்தவங்கிக்கு பொறுப்பான வைத்திய அதிகாரியாக வைத்திய கலாநிதி ஜே.ஆர்.பாஸ்கரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ் வைத்தியசாலையில் இரத்த வங்கி ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்களாகியும், இதற்கெனத் தனியான வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவில்லை.

வைத்திய அதிகாரி நியமனத்தையடுத்து இரத்தவங்கி சிறப்பாக இயங்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (50-236)


## சர்வதேச அங்கீகாரம் பெற்ற
## சுகாதாரத்துறை பாட நெறிகள்

**Diplomas in Nursing, Physiotherapy & Pharmacy**

வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளை இலகுவான முறையில் பெற்றுக் கொள்ள சிறந்த வழி
மாத வருமானம் ரூபா 300,000 - 400,000

எமது மேற்குறிப்பிட்ட பாடநெறிகள் உங்களுக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற, சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேலை வாய்ப்புக்களை வழங்குகின்றன. எமது நன்கு பயிற்றப்பட்ட அனுபவமுடைய விரிவுரையாளர்கள் சிறந்த சர்வதேச அரங்கிற்கு தேவையான கல்வியை போதிப்பார்கள். எமது சகல பாடத்திட்டங்களும் உள்நாட்டு அமைப்புகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை.

## அடுத்த பதிவுகள் January 2010



இ. ஸ்ரீகிருஸ்ணன்
"இயல் மருத்துவ மாணவன்" "IIHS"
இது ஒரு இலகுவான கற்கை நெறி. ஆசிரியர் வளம். கற்றாடல் வசதிகள் வகுப்பறை வசதிகள் மிகவும் நன்று.



க. நிரோஜினி
"தாதியர் மாணவி" "IIHS"
மிகவும் இலகுவான வழியில் எமது இலக்கை நாம் எய்த இக் கல்லூரி வழிசமைத்துள்ளது. வழிசமைத்து தரும் மிகவும் இயற்கையான சூழலில் சகல வசதிகளுடனும் அமைந்துள்ளது.



கு. கோபிகா
"மருந்துக் கலவையாளர்" "IIHS"
சுகாதாரத் துறையினுடான எமது இலக்கை இலகுவில் அடைவதற்கு இக் கல்லூரி மிகவும் உதவுகிறது. இக் கல்லூரியானது சிறந்த வளங்களையும், வசதிகளை அமைத்துக் கொடுத்துள்ளது.

தகைமைகள் :
க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞானம் மற்றும் கணிதத்துறையில் பயின்றவர்கள்

மாதாந்தக்கட்டணம் 5000/=
(வங்கிகடன் வசதிகள் செய்து தரப்படும்)
தங்குமிடவசதிகள் உண்டு

மேலதிக விவரங்கள்:
**Call Prathab (Jaffna)**
**077 8885906 / 021 2264705**
**Nishani 0773 114391 or**
**Thivanka 0774 142398**
704, Negombo Rd, Welisara.
www.iihsciences.com

ECU · OPEN UNIVERSITY MALAYSIA · tafe South Australia · City & Guilds · nodes · IIHS INTERNATIONAL INSTITUTE OF HEALTH SCIENCES

(93072)



Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Federal Department of Foreign Affairs FDFA
Swiss Agency for Development and Cooperation SDC
Humanitarian Aid and SHA

## Swiss Agency for Development and Cooperation (SDC)

## FIELD OFFICE – JAFFNA

SDC, the representing Agency of the Swiss Government is implementing several post conflict projects in the district of Jaffna. Therefore SDC is inviting applications from qualified candidates for the following position.

### SECRETARY/ RECEPTIONIST

The ideal candidate should have completed G. C. E A/L with three passes with minimum three years experience preferably in an International environment.

**We expect from you:**

- Diploma in Secretarial Studies or similar
- Proficiency in use of MS office packages, e-mail, Internet
- Ability to work independently and as a member of a team
- Strong organisational skills
- Providing welcome service
- Excellent command of English and Taimil, Sinhala is an advantage

**You are going to:**

- Operate the telephone system
- Handle petty cash
- Handle incoming and outgoing mails
- Manage and update office records and data base
- Responsible for travel arrangements, hotel reservations
- Handle routine secretarial duties
- interact effectively with international and national personnel

Application containing a motivation letter along with

- Your home address and contact number
- Expected Salary
- First possible date you could assume duties

Together with your complete CV and copies of certificates should be mailed to reach our office on or before 15th Dec' 09 to the following address.

Head of Field Office
Swiss Agency for Development and Cooperation
521/11 Point Pedro Road,
Nallur, Jaffna.
**Only short listed candidates will be contacted**

SDC Field Office Jaffna
521/11 Point Pedro Road
Nallur, Jaffna
Tel. +94 21 222 3928, Fax +94 21 222 6
E-Mail. jaffna@sdc.net

(92999)



## நீங்கள் A/L இல் BIO / MATHS பிரிவில் கல்வி கற்றவரா???

உங்களின் வாழ்க்கையை வழிப்படுத்துவதற்கான இத் துறை சார்ந்த வல்லுனர்களின் இலவச வழிகாட்டல் கருத்தரங்கு !!!

✱ விடயம் :- **Higher National Diploma in Pharmacy (HND in Pharmacy)**
✱ இடம் :- **UNI ICT Campus & Nottingham College of London, No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna.**
✱ காலம் :- **13/12/2009** ஞாயிற்றுக்கிழமை காலை **11.30** மணிக்கு

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் (அரச/தனியார்) அதிக வேலை வாய்ப்பையும் வரையறை அற்ற வருமானத்தையும் பெற்றுத்தரும் இக் கற்கை நெறிபற்றிய இவ் இலவச வழிகாட்டல் கருத்தரங்கில் தவறாது ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்றி பயன் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!!!

☎ முக்கிய குறிப்பு :- எமது இக் கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புவோர் இன்றே உங்கள் கைத்தொலை பேசியில் உங்கள் முழுப் பெயர் , வதிவிட முகவரி ஆகியவற்றை சரியாக ரைப்செய்து **0777 - 110 862** என்னும் எமது கைத்தொலைபேசி இலக்கத்திற்கு **12/12/2009**ற்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும். இவ்வாறு **SMS** அனுப்பும் அனைவரும், தவறாது இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுதல் அவசியம்.

அன்றைய தினம் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு இக் கற்கை நெறிக்கு விண்ணப்பம் செய்வோருக்கு கட்டணச் சலுகைகள் வழங்கப்படும்!!! இன்றே உடன் **SMS** அனுப்புங்கள்!!!



## 40%
வரையான விலைக்கழிவு

## 30 வருட நிறைவையொட்டி

## சுந்தர்சன்
மானிப்பாய்

## உத்தரவாதத்துடனான மாபெரும் மலிவு விற்பனை

**12.12.2009 சனிக்கிழமை தொடக்கம்...**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடதுசாரித் தத்துவம் இனவாதமான கதை!


எஸ்.ஜே.வி.செல்வநாயகம்


எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா


பிலிப் குணவர்த்தன


விக்கிரமபாகு கருணாரட்ன


றோகண விஜயவீர

'இந்து சமுத்திரத்தின் முத்து' என வர்ணிக்கப்படும் இலங்கைத்தீவு இரத்தக் குழம்பில் முழ்கியிருப்பதற்கான காரணங்களை ஆழமாக ஆராய்ந்து, அறிய வேண்டியது அவசியம். தெற்கு, தென்கிழக்காசியாவில் மிகவும் பலம் பொருந்திய இடதுசாரி அரசியல் தோன்றி உருப்பெற்ற நாடு இலங்கைத் தீவாகும். ஆனால் அங்கே அந்த இடதுசாரி இயக்கங்கள் முற்றிலும் படுதோல்வி அடைந்துள்ளன. இனப்பிரச்சினையைப் கையாள் வதில் அவர்கள் கைக்கொண்ட நிலைபாடுகள் வரலாற்று வளர்ச்சிக்கு எதிர்க்கணியமாய் அமைந்து விட்டன. இத்தகைய நிலை எவ்வாறு ஏற்பட்டது என்பதை இங்கு நாம் ஆராய வேண்டியது அவசியமாகும்.

சிங்கள மக்கள் மத்தியிலும், தமிழ் மக்கள் மத்தியிலும் இருந்து மிகப்பெயர் பெற்ற இடதுசாரிகள் தோன்றினர். காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த இலங்கைத்தீவை விடுதலை பெற்ற ஒரு நாடாக்குவதில் முன்னின்றவர்களாகவும் ஜனநாயகம், சோசலிஸம், இன ஐக்கியம் போன்ற கொள்கைகளை இலட்சியபூர்வமாய் முன்வைத்த தலைவர்களாயும் மேற்படி இடதுசாரிகள் முதலிற் காணப்பட்டனர். அவர்களைக் 'காலனித்துவ ஆட்சிக்கால இடதுசாரிகள்' எனவும், 'காலனித்துவத்தின் பின்னான கால இடதுசாரிகள்' எனவும் இருபெரும் பிரிவுகளாகப் பிரிப்பதுடன், தனிச்சிங்கள சட்டத்திற்கு முன் தோன்றிய தலைமுறையினர், தனிச்சிங்கள சட்டத்தின் பின் தோன்றிய இடதுசாரித் தலைமுறையினர் என தெளிவாக இனம் பிரிக்கவும் முடியும்.

காலனித்துவ காலத்தில் தோன்றிய தலைவர்கள் மேலைத்தேச கல்வி முறைகளைக் கொண்டவர்களாயும் உலகளாவிய இடதுசாரி இலட்சியத்தை உடையவர்களாயும் காணப்பட்டதினால், அவர்களிடம் இனக் குரோத சிந்தனை தலை எடுத்திருக்கவில்லை. ஆனால் தனிச்சிங்கள சட்டத்தின் பின் தோன்றிய சிங்கள இடதுசாரித் தலைமுறையினரோ இனக்குரோத உணர்வு கொண்டவர்களாய் காணப்பட்டனர். இது பாரம்பரியமாக காணப்பட்ட சிங்கள நிலப்பிரபுத்துவ சிந்தனையின் தொடர்ச்சியாய் ரோகண விஜயவீர உட்பட்ட அனைத்து சிங்கள இளம் தலைமுறையினரிடமும் கலாச்சார அடிப்படையில் அப்படியே அமைந்திருந்ததைக் காணலாம்.

### யாழ். இளைஞர் காங்கிரஸ்

முழு இலங்கைக்குமான பூரண சுதந்திரம் வேண்டும் என்ற கருத்தை முதல் முறையாக ஸ்தாபன ரீதியில் முன்வைத்து அதற்கான நேரடிப் போராட்டத்தில் ஈடுபட்ட பெருமை யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸைச் சாரும். 1924 ஆம் ஆண்டு தோன்றிய யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ், பின்பு 1926 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் என பெயர் மாற்றம் செய்து கொண்டது. நவீன கல்வியைப் பெற்ற தமிழ் மத்தியதர வர்க்கத்தில் இருந்து இவ்வமைப்பு தோன்றியது. காந்தியம், பாபியன் சோஷலிஸம் , சிங்கள மக்கள் மத்தியில் தோன்றிய ரொஸ்கிவாத இடதுசாரியுறவு என்பனவற்றைத் தன்னகத்தே இணைத்துக் கொண்ட ஓர் அமைப்பாய் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் எழுந்தது.

இந்திய தேசிய விடுதலைக்குத் தலைமை தாங்கிய மகாத்மா காந்தியை 1927 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு வரவழைத்தமையும், காங்கிரஸ் சோஷலிஸக் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான திருமதி கமலாதேவி சட்டோபாத்தியாய என்ற பாபியன் சோஷலிஸ வாதியுடனான தொடர்பும் சிங்கள மக்கள் மத்தியில் தோன்றியிருந்த சூரியமல் மற்றும் ரொஸ்கிவாத சிங்களத் தலைவருடனான உறவும் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸினரை மிகவும் முற்போக்கான ஒரு சக்தியாய் சந்தேகத்திற்கிடமின்றி இனம் காட்டியது. பூரண விடுதலை, சாதி சமூக சீர்திருத்தம், பெண்கள் உரிமை, ஜனநாயகம், பாபியன் சோசலிஸம், இன ஐக்கியம், ரொக்ஸிவாத சிங்கள இடது சாரிகளுடனான நெருக்கமான உறவு என்பனவற்றால் இவர்கள் பெரிதும் அடையாளம் காணப்பட்ட ஒரு முக்கிய முற்போக்கு இயக்கத்தினர் ஆவர்.

இலங்கையின் வரலாற்றில் மாக்ஸிஸ இடதுசாரிகளின் வருகையை பிலிப் குணவர்த்தன, என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டீ சில்வா, எஸ்.ஏ.விக்கிரமசிங்க போன்ற தலைவர்களின் வருகையோடு அடையாளம் காணலாம். குறிப்பாக 1930 களின் முற்பகுயில் தோன்றிய சூரிய மல் இயக்கம் இவர்களின் வருகையை பெரிதும் பறைசாற்றத் தொடங்கிய ஓர் அமைப்பாய் அமைந்தது.

### சிங்கள மக்கள் மத்தியில் இடதுசாரித் தலைவர்கள்

தெற்கு, தென்கிழக்கு ஆசியாவில் மிகவும் பெயர்பெற்ற இடதுசாரித் தலைவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் 1930 களின் ஆரம்பத்தில் இருந்து எழுச்சிபெறத் தொடங்கினர். பிலிப் குணவர்த்தன, கலாநிதி என்.எம்.பெரேரா, கலாநிதி. கொல்வின் ஆர்.டீ சில்வா, டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க, லெஸ்லி குணவர்த்தன, ரொபேட் குணவர்த்தன, எட்மன் சமரக்கொடி போன்ற சிங்களத் தலைவர்களுடன் கூடவே வி.காராளசிங்கம், ஏ.வைத்திலிங்கம் போன்ற தமிழ் தரப்பில் எழுந்த இடதுசாரிகளும் குறிபிட்டுக் கூறக்கூடிய இடதுசாரித் தலைவர்களாய்க் காணப்பட்டனர். இவ்வாறான தலைவர்களுள் பெரும்பாலானோர் லண்டனில் உயர் கல்வி பெற்று நாடு திரும்பியோராவர். குறிப்பாக ரொஸ்கி வாதியான பேராசிரியர் கரோல் லஸ்க்கி என்பவரால் இவர்களில் பெரும்பாலானோரின் கருத்துலகமும், இலட்சியமும் வடிவமைக்கப் பட்டது எனலாம்.

1919 ஆம் ஆண்டு எனப்படும் மூன்றாம் அகிலம் லெனினால் தோற்றுவிக்கப்பட்டது. அந்த கொமின்ரேனில் பிலிப் குணவர்த்தனவும் இணைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சர்வதேச தரம் வாய்ந்த மாக்ஸிஸ வாதிகளாய் இந்த இடதுசாரித் தலைவர்கள் காணப்பட்டனர். பிலிப் குணவர்த்தனவிடம் காணப்பட்ட ரொஸ்கிஸ சிந்தனையின் பெயரால் அவர் கொமின்ரேனில் இருந்து பின்பு விலக்கப்பட்டார். நவீன அரசியற்கட்சி முறைக்குரிய அமைப்பை கொண்ட முதலாவது கட்சியாக 1935 ஆம் ஆண்டு லங்கா சமசமமாஜ கட்சி எனும் இடதுசாரிக் கட்சி இலங்கையில் தோற்றுவிக்கப்பட்டது. பிலிப் குணவர்த்தன, என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர். டீ சில்வா, எஸ்.ஏ.விக்கிரமசிங்க போன்றோர் ஆரம்பத்தில் இதன் முக்கிய தலைவர்களாகக் காணப்பட்டனர். இக்கட்சியானது ரொஸ்கியால் ஆரம்பிக்கப்பட்ட நான்காம் அகிலத்தில் தன்னை ஓர் அங்கமாக்கிக் கொண்டது. சர்வதேச தரத்திலான மாக்ஸிஸ கோட்பாட்டாளர்களாயும் காலனித்துவத்திற்கு எதிரான விடுதலை வீரர்களாயும் இவர்கள் காணப்பட்டனர். குறிப்பாக இலங்கையில் பிரித்தானிய காலனிய ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடி சிறை சென்ற வீரர்களாயும் இவர்களில் பலர் காணப்பட்டனர்.

### ஊறியிருந்த இனவாதம்

இத்தகைய தரம் வாய்ந்த இடதுசாரிகளாக இவர்கள் காணப்பட்ட போதிலும் 1931 ஆம் ஆண்டு ஒரு துக்ககரமான முன்னுதாரணமும் இனவிவகாரத்தில் இடம்பெற்றதை நாம் பதிவு செய்ய வேண்டியுள்ளது. அதாவது டொனமூர் அரசியல் யாப்பு இலங்கைக்கு பூரண சுயாட்சியை வழங்கவில்லை என கூறி யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் அதன் முதலாவது தேர்தலை பகிஷ்கரிக்கும் நேரடிப் போராட்டத்தில் ஈடுபட்டது. அப்போது "யாழ்ப்பாணம் தலைமை தாங்குகிறது" என அப்பகிஷ்கரிப்பைப் பாராட்டி இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் தந்தையான பிலிப் குணவர்த்தன யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸுக்கு தந்தி அனுப்பியிருந்தார். பகிஷ்கரிப்பைத் தாங்களும் ஆதரிக்கின்றார்கள் எனப் பல சிங்களத் தலைவர்கள் கூறியிருந்த போதிலும் முன்னணி இடதுசாரித்தலைவரான டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க உட்பட சிங்களத் தலைவர்கள் வர்க்க வேறுபாடின்றி தேர்தலில் பங்குபற்றினர். அதேவேளை அவர்களால் பாராட்டப்பட்ட பகிஷ்கரிப்பாளர்கள் பின்பு வகுப்பு வாதிகளென முத்திரை குத்தப்பட்டமை மிகவும் மோசமான செயலாகும். எவ்வளவுதான் இடதுசாரித் தத்துவம் பேசிய போதிலும் கலாசார ரீதியாக அவர்களை அறியாமலே அவர்களிடம் உள்ளொடுங்கியிருந்த இனவாதம் மெல்லத் தலையெடுத்ததை இச்சம்பவம் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. இவர்களின் பிற்கால நடவடிக்கைகள் இவற்றை பின்பு தெளிவாக வெளிப்படுத்தின.

1937 ஆம் ஆண்டு லங்கா சமசமாஜக் கட்சியால் வெளியிடப்பட்ட அரசியல் அறிக்கையில் சிங்களம், தமிழ் ஆகிய சுதேச மொழிகளில் பொலிஸ் பதிவுகள் - கிராமிய நீதிமன்ற விசாரணைகள் இடம்பெற வேண்டுமென்ற சிறப்பான கோரிக்கை இன வேறுபாடுகளைக் கடந்து முன்வைக்கப்பட்டது. இவ்விடதுசாரிகளிடம் தேச விடுதலை, சோஷலிஸம், பரந்த உலகக் கண்ணோட்டம் என்பன காணப்பட்டமையால் தெளிவான இனப் பாகுபாட்டிற்கு அவர்கள் போகாது ஒருவகை குழப்பம் அவர்களிடம் காணப்பட்டது. ஆதலால் சிங்கள - தமிழ் மக்களிடம் காணப்பட்ட இனப்பிரச்சினையை சமசமாஜிஸ்ட்டுக்கள் வெறுமனே மொழிப் பிரச்சினையாகப் பார்த்தார்களே தவிர ஒரு தேசிய இனப் பிரச்சினையாக அதனை ஆரம்பத்தில் இருந்தே பார்க்கத் தவறினர்.

### சுயநிர்ணய உரிமை பற்றிய தீர்மானம்

எஸ்.ஏ.விக்கிரமசிங்கவிடம் காணப்பட்ட ரொஸ்கி வாதத்திற்கு மாறான மொஸ்கோ சார்புப் போக்கைக் கண்டித்து 1940 ஆம் ஆண்டு அவர் சமசமாஜக் கடசியிலிருந்து வெளியேற்றப்பட்டார். இவர் பின்பு 1943 ஆம் ஆண்டு மொஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியை ஆரம்பித்தார். பீற்றர் கெனமன், ஏ.வைத்திலிங்கம் போன்றோர் கூடவே இதில் முன்னணிப் பாத்திரம் வகித்தனர். இக்கட்சி முதல் முறையாக சிங்கள - தமிழ் இனப்பிரச்சினையை தேசிய இனக்கண்ணோட்டத்தில் அணுகி இலங்கைத் தமிழர் பிரிந்து சென்று தனியரசு அமைக்கக் கூடிய சுயநிர்ணய உரிமையுடையவர்கள் என்ற தீர்மானத்தை 1944 ஆம் ஆண்டு நிறைவேற்றியது. இனப்பிரச்சினையில் இடதுசாரிகளான சமசமாஜிஸ்ட்டுக்களுக்கும், இலங்கை கம்யூனிஸ்ட்களுக்கும் இடையில் உள்ள பிரதான வேறுபாடு என்னவெனில் சமசமாஜிஸ்ட்டுக்கள் இனப்பிரச்சினையை ஒரு மொழிப் பிரச்சினையாக மட்டும் பார்த்தனர். ஆனால் கம்யுனிஸ்ட்டுகளோ அதனை ஒரு தேசிய இனப்பிரச்சினையாகப் பார்த்தனர்.

மொழிப்பிரச்சினை விவகாரத்தில் லங்கா சமசமாஜிஸ்ட்டுகளும், கம்யூனிஸ்ட்டுகளும் சம அந்தஸ்தைத் தெளிவாக வற்புறுத்தினர். அதேவேளை சமசமாஜக்கட்சியிலிருந்து பிரிந்து பிலிப் குணவர்த்தன தலைமையில் உருவான விப்பிலவகாரி [புரட்சிகர] லங்கா சமசமாஜக் கட்சி இனப்பிரச்சினை விவகாரத்தில் தறுக்கணித்த இடது சாரிகளாக மாறித் தனிச்சிங்கள சட்டத்தை ஆதரிக்கும் நிலைப் பாட்டை பின்பு எடுத்தது.

### இடதுசாரி இயக்கத்தை பிடித்த பெரும் புற்றுநோய்

இனப் பாகுபா[illegible] இடது சாரி பாரம்பரியத்தை ஆரம்பித்த சிங்கள இடதுசாரிகள் மத்தியில், அதன் [illegible] இயக்கத் தந்தையான பிலிப் குணவர்த்தன தறுக்கணித்த இடதுசாரியாக மாறியதிலிருந்து இலங்கையின் இடதுசாரி வரலாற்றிற்கு புற்று நோய் பிடிக்க ஆரம்பித்தது. இதைத்தொடர்ந்து சிங்கள இடதுசாரிகள் படிப்படியாக இனவாத இடதுசாரிகளாக இரட்டைப் பரிணாமம் பெறத்தொடங்கினர். அதாவது சோஷலிச முகமும் இனவாத உள்ளடக்கமும் என அது அமையத் தொடங்கியது. இவ்விரு பிரதான இடதுசாரிக் கட்சிகளையும்விட இடையிடையே இடதுசாரிகள் மத்தியில் பிளவுகளும் இணைவுகளும் கூட்டமைப்புகளும் எனப் பல வழிப்போக்குகள் காணப்பட்டன என்பதும் இங்கு கவனிக்கத் தக்கது.

1947 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் மூலம் இடதுசாரிகள் வரலாற்றில் முக்கிய சக்தியாக எழுச்சி பெற்றிருந்தனர். எதிர்கட்சித்தலைமை இடதுசாரிகளின் கைவசமானது. டிஎஸ்.சேனாநாயக்கா மிகவும் வெளிப்படையான, தெளிவான வலதுசாரித் தலைவராவார். இன அடிப்படையில் சிங்கள மக்களின் தலைவராக டி.எஸ்.சேனநாயக்கா காணப்பட்டார். தமிழ்த் தலைவராக ஜீ.ஜீ.பொன்னம்பலம் காணப்பட்டார். அதேவேளை இனவாத உள்ளடக்கம் மிக்க தலைவராகவும் பாதிச் சோஷலிஸ முகம் காட்டும் தலைவராகவும் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா காணப்பட்டார். சோசலிஷ முகாமிற்கு என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டீ சில்வா, பிலிப் குணவர்தன போன்றோர் முன்னணித் தலைவர்களாகக் காணப்பட்டனர்.

### ஜீ.ஜீயை வளைத்த டி.எஸ்.

இன அடிப்படையில் ஐம்பதுக்கு ஐம்பது கோரிய பொன்னம்பலத்தின் மீது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா கோபம் கொண்டு காணப்பட்டார். ஆனால் பதவிக்கு வரக்கூடிய பலத்துடன் இடதுசாரிகள் எதிர்க்கட்சியாக அமைந்திருப்பதை மிகவும் ஆபத்தென வலதுசாரிகள் பார்த்தனர். இந்நிலையில் தமிழ்த் தலைவரான பொன்னம்பலத்தின் மீதான கோபத்தைக் கைவிட்டு அவரை அணைத்து இடதுசாரிகளை தோற்கடிக்க வேண்டுமென்று ஜே.ஆர். ஜெயவர்த்தனா, பிரதமரான டி.எஸ்.சேனநாயக்காவிற்கு ஆலோசனை வழங்கினார். இதன் பின்பு ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்க் காங்கிரஸை டி.எஸ்.சேனநாயக்கா அரசில் சேர்த்து பொன்னம்பலத்தை அமைச்சராக்கினார். இத்தகைய மந்திர ஆலோசனை பற்றிய விவரங்களை பத்திரிகையாளரான ஜே.எல்.பெர்னாண்டோ ஆங்கிலத்தில் எழுதிய நூலில் காணலாம். இடதுசாரிகளை தோற்கடிப்பதற்கு பாதிச் சோஷலிச முகம் கொண்ட பண்டாரநாயக்காவையும் தமிழ் தரப்பில் பொன்னம்பலத்தையும் பயன்படுத்தும் கொள்கையை டி.எஸ். சேனநாயக்கா வகுத்திருந்தார்.

நடேச ஐயர் தலைமையிலான இலங்கை இந்திய காங்கிரஸ் [பின்பு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என பெயர் மாற்றப்பட்டது மலையகத்தில் ஆறு நாடாளுமன்ற ஆசனங்களை 1947 ஆம் ஆண்டு தேர்தலில் கைப்பற்றியிருந்தது. இக்கட்சி இடதுசாரிகளோடு கூட்டிணைந்து இருந்ததுடன் ஏனைய இடதுசாரிக்கட்சிகளின் வளர்ச்சிக்கு மலையக தோட்டத்தொழிலாளர்களமாக அமைந்திருந்தனர் என்பதும் கவனிக்கத்தக்கது. இப்பின்னணியில் இனரீதியாகத் தமிழரின் பலத்தை இழக்கச் செய்யவும் வர்க்கரீதியாக இடதுசாரிகளை வீழ்த்தவும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமை, வாக்குரிமை என்பனவற்றைப் பறிப்பதற்கான சட்டங்களை - பண்டாரநாயக்காவையும், பொன்னம்பலத்தையும் டி.எஸ்.சேனநாயக்கா அரவணைத்து மந்திரி சபையில் வைத்திருந்த வண்ணமே - 1948, 1949 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றினார்.

இங்கு டி.எஸ்.சேனநாயக்கா இவ்வாறு பண்டாரநாயக்காவுடனும் பொன்னம்பலத்துடனும் கூட்டுச் சேர்ந்து இடதுசாரிகளை எதிர் கொண்டபோதிலும் இடதுசாரிகளின் கோபம் பொன்னம்பலம் மீது மட்டும் இருந்ததே தவிர பண்டாரநாயக்கா மீது இருக்கவில்லை. மாறாக, இடதுசாரிகள் பண்டாரநாயக்காவை ஒரு முற்போக்கு வாதியாக கருதி அவருடன் கூட்டுச்சேரும் கொள்கைகளை பின்பற்றி வந்தனர்.

### மொழிச் சமத்துவத்தை வலியுறுத்திய தலைவர்கள்

1955 ஆம் ஆண்டு சிங்களமும் தமிழும் உத்தியோக மொழிகளாக வேண்டுமென்ற மசோதாவை சமசமாஜக் கட்சித் தலைவரான என்.எம்.பெரேரா நாடாளுமன்றத்தில் சமர்பித்து தீவிரமாகவும் திறந்த மனத்துடனும் அதற்காக வாதிட்டார். தமிழ் தலைவர்களை விடவும் மொழிச்சமத்துவம் கோரி மிகப்

**செ.தனபாலசிங்கம்**

புகழ்பெற்ற விவாதங்களை மேற்படி 1955ஆம் மற்றும் 1956 ஆம் ஆண்டுகளில் லங்கா சமசமாசஜிஸ்ட்டுகளும் இலங்கை கம்னியூஸ்ட்களும் நிகழ்த்தியுள்ளனர். பண்டாரநாயக்காவின் இனவாத நிலைப்பாட்டைக் கண்டித்து தனிப்பட்ட ஓர் உரையாடலின் போது பண்டாரநாயக்காவைப் பார்த்து "ஒரு சாண் கயிற்றில் நீ தூங்கித் தற்கொலை செய்தால் அதற்காக அந்தக் கயிறு தனது பெறுமானத்தை இழந்துவிடும்" என்று என்.எம்.பெரேரா கண்டித்தார் எனவும் கூறப்படுகிறது.

இலங்கையில் மாக்ஸிய இடதுசாரித் தத்துவத்தின் தந்தையான பிலிப் குணவர்த்தன 1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்காவின் மகாஜன எக்ஸத் பெரமுன என்ற கூட்டணியில் தனது விப்பிலவகாரி சமசமாஜக் கட்சியைக் கூட்டுச் சேர்த்ததோடு தனது இனவாத - இடதுசாரிச் சந்தர்ப்ப வாதத்தை தெளிவாக இனம் காட்டினார். அத்துடன் ஏனைய இடதுசாரிகளும் பண்டார நாயக்காவுடன் கூட்டணியில் இடம் பெறாது விட்டாலும் அவருடனான போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தத்தின் மூலம் தமது நிறம் மாறலை அறிவிக்கத் தவறவில்லை.

### தமிழர்கள் மத்தியில் தோன்றிய இடதுசாரிகள்

தமிழ் மக்கள் மத்தியில் இருந்து ஹண்டி பேரின்பநாயகம் போன்ற பாபியன் சோசலிஸ்ட்டுக்களும் வி.காராளசிங்கம், ஏ.வைத்திலிங்கம், நாகலிங்கம், பி.கந்தையா, என்.சண்முகதாசன் வி.பொன்னம்பலம் போன்ற பெயர் பெற்ற இடதுசாரித் தலைவர்களும் தோன்றினர். இவர்களுள் வி.காராளசிங்கம், என்.சண்முகதாசன் போன்றோர் சர்வதேசத் தரத்திலான மாக்ஸிஸக் கோட்பாட்டாளர்களாகவும் விளங்கினர். குறிப்பாக உயர்கல்வி பெற்ற கல்லூரி அதிபர்கள், முன்னணி ஆசிரியர்கள் பலர் இடதுசாரிக் கோட்பாட்டைத் தழுவியவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் மிகுந்த சமூகச் செல்வாக்கு மிக்கவர்களாகவும் மதிப்புக்கு உரியவர்களாகவும் மாணவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தக் கூடியவர்களாகவும் காணப்பட்டனர். ஆனால் அடிமனங் களில் பதிந்திருந்த இன ஒடுக்கு முறைகளினதும் இன அணுகுமுறையினதும் தாக்கம் கலாசார ரீதியாக அனைவரின் மனதிலும் ஆழப்பதிந்திருந்தது எனக் கூறலாம். எவ்வளவு தான் இடது சாரித்தத்துவம் தமிழ் மக்களின் மத்தியில் காணப்பட்ட போதிலும் 1956 ஆம் ஆண்டு பி.கந்தையா எனும் ஒரே ஒரு கம்யூனிஸ்ட் பருத்தித்துறை தொகுதியில் வெற்றி பெற்றதைத் தவிர, வேறு யாரும் வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் இருந்து நாடாளுமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்றதில்லை.

ஏறக்குறைய பெரும்பான்மையான தமிழ் உத்தியோகத்தர்கள் இடதுசாரித் தொழிற்சங்க உறுப்பினர்களாகவும் தொழிற்சங்க வாதிகளாகவும் காணப்பட்டனர். தமிழ் மண்ணில் இடதுசாரிகளினது பிரச்சாரப் பொதுக்கூட்டங்கள் மக்கள் நிறைந்தவையாக, குழப்பங்கள் இன்றி அமைதியாக நிகழ்ந்த வரலாறு போதியளவு உண்டு. ஆயினும் மக்கள் இடதுசாரிக் கட்சிகளை தெளிவாக சிங்கள கட்சிகளாகவே அடையாளம் கண்டு பெரிதும் புறம் தள்ளினர்.இவ்வாறு தமிழ்த் தரப்பிலும் சிங்களத் தரப்பிலும் ஒரு பிளவுபட்ட போக்கு இடதுசாரி கொள்கையிலும் காணப்பட்டது. பின்பு சிங்கள இடதுசாரிகள் சிங்கள நிலைப்பாட்டையும் தமிழ் இடதுசாரிகள் தமிழ் நிலைப்பாட்டையும் எடுக்கத் தொடங்கியமையைக் காணலாம்.

### இனவாதத்தில் மூழ்கிய சிங்கள இடதுசாரிகள்

1956 ஆம் ஆண்டு தனிச் சிங்கள சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து சிங்கள இடதுசாரிகள் இனவாத நிலைப்பாட்டை எடுக்கும் போக்கு வளரத் தொடங்கியது. 1965 ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்கா தலைமையிலான ஐக்கய தேசிய கட்சியுடன் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சி [இலங்கை சமஷ்டிக் கட்சி] பங்கெடுத்து கூட்டரசாங்கம் அமைத்துக் கொண்டது. இக்காலகட்டத்தில் சிங்கள இடதுசாரிகள் தமிழரசுக் கட்சி மீதான தமது கோபத்தைத் தமிழ் மக்களுக்கு எதிரான ஓர் இனவாதமாக உருத்திரட்டினர்.

1965 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இரு பெரும் சிங்களக் கட்சிகளும் அறுதிப் பெரும்பான்மை எட்டாத நிலையில் ஸ்ரீலங்கா சுகந்திரக் கட்சியுடன் இடது சாரிகளும் தமிழரசுக் கட்சியும் இணைந்த ஒரு கூட்டரசாங்கத்தை உருவாக்க கலாநிதி என்.எம்.பெரேரா முயற்சித்தார். அதற்காக அவர் தமிழரசுக் கட்சியின் உதவியை நாடினார். தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த சூழலில் அப்போது யாழ்ப்பாணத்தில் நின்ற தமிழரசுக் கட்சித் தலைவர் தந்தை செல்வாவுடன் என்.எம். பெரேரா தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அப்போது கூட்டரசாங்கம் அமைப் பது பற்றிய விடயங் களை கொழும்பில் உள்ள தனது நண்பரான திரு. மு.திருச்செல்வத்துடன் பேசுமாறு செல்வநாயகம் கூறினார். ஆனால் திருச்செல்வம் ஐ.தே.க.வுடன் உடன்பாட்டுக்கு வருவதற்கான மனச்சாய்வை கொண்டிருந்த நிலையில் டட்லி சேனநாயக்காவுடன் உடன்பாட்டுக்கு வந் தார். இதில் என்.எம். பெரேராவை திருச் செல்வம் பேசாமலே புறம்தள்ளினார் என் பது உண்மை.


டி.எஸ்.சேனநாயக்க


என்.எம்.பெரேரா

பண்டா செல்வா ஒப்பந்தத்தை ஒரு தலைப்பட்சமாகக் கிழித்தெறிந்த சுதந்திரக் கட்சியுடன் மீண்டும் கூட்டுச்சேர முடியாது, அவர்களை நம்ப முடியாது என்ற வாதத்தை திருச்செல்வம் முன்வைத்தார். ஆனால் அதுவரை தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காக குறிப்பிடக் கூடிய அளவுக்கு குரல் கொடுத்து வந்த இடதுசாரிகளை சாட்சியாகவும் பொறுப்பாகவும் வைத்து ஒரு பரிசோதனையை செய்து பார்த்திருக்கக் கூடிய வாய்ப்பொன்று தமிழரசுக் கட்சிக்கு இருந்ததாக இன்னொரு கருத்து சில விமர்சகர்களால் முன்வைக்கப் படுவதும் கவனத்துக்கு உரியது.


கொல்வின் ஆர்.டி.சில்வா


சண்முகதாசன்


வாசுதேவநாணயக்கார

தமிழரசுக் கட்சி எப் படி ஒரு கொள்கையின் கீழ் உள்ள ஒரு தனிக்கட்சியோ அவ்வாறே இடதுசாரிக் கட்சிகளும்தனிவிசேடமான கொள்கையைக் கொண்ட தனித் தனிக் கட்சிகள் ஆகும். எனவே ஒரு கட்சியான தமிழரசுக் கட்சி ஐ.தே.க.வுடன் கூட்டுச் சேர்ந்ததற்காக இடதுசாரிகள் தமது கொள்கையைக் கைவிட்டு இனவாதப் பக்கம் தெளிவாக நிலைப்பாடு எடுத்தமையை நியாயப்படுத்த முடியாது. [12ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்களுக்கு இனிய நத்தார் வாழ்த்துக்கள்

இல: 22, யாழ்ப்பாணம் பெரியகடை வீதியில்

# மாங்கலகரமான திறப்புவிழா

# DSI

இலங்கையின் முதல்தர பாதணி

## இரண்டாவது காட்சியறை

காலம்: 11.12.2009 வெள்ளிக்கிழமை

நேரம் பி.ப 12.30 மணியளவில்

நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனை புரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களது கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்த உள்ளான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## நிரோஷா நாகேந்திரராசா

**வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

கலைப்பிரிவு-3ஏ மாவட்ட நிலை-101

நான் எனது ஆரம்பக் கல்வியை நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வி மற்றும் உயர் கல்வி என்பவற்றை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியிலும் கற்றேன்.

உயர்கல்விக்காக கலைத்துறையினைத் தெரிவு செய்து தமிழ், அளவையியல், இந்துநாகரிகம் ஆகிய பாடங்களை எனது தேர்வுகளாகக் கொண்டேன்.

பரீட்சைக்கு முன்னர் கடந்தகால வினாத்தாள்களைச் செய்து பார்த்து அதில் ஏற்பட்ட சந்தேகங்களை ஆசிரியர்களிடம் கேட்டுத் தெளிவுபடுத்தினேன்.

நண்பிகளுடன் சேர்ந்து கற்றேன். அவ்வாறு கற்ற போதும் ஏற்பட்ட சந்தேகங்களையும் தெளிவுபடுத்திக் கொண்டேன். பரீட்சைக்கு முன்னர் அதிகளவான மாதிரிப் பரீட்சைகளுக்கும் முகம்கொடுத்தேன்.

அப்பரீட்சைகள் கற்றதை ஞாபகப்படுத்துவதற்கு ஒரு சிறந்த பயிற்சியாக அமைந்தது. இவ்வாறு கற்றதன் மூலம் எனது மனப்பயம் நீங்கி நம்பிக்கை உண்டாகியது.

நான் இவ்வாறு நம்பிக்கையுடன் கற்றதன் மூலம் இப்பெறுபேற்றினை எதிர்பார்த்தேன். எனது பெறுபேற்றை அறிந்ததும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

எனது இத்தகைய பெறுபேற்றிற்குக் காரணமாக இருந்து என்னை ஊக்குவித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், எனது பெற்றோர், சகோதரர்கள் , நண்பிகள் என்போருக்கும் இறைவனுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சந்திப்பு :
ஓங்காரன், வடநம்பி, தயான், அனுஷ்மன்.



## அருமைராசா கயுந்தன்

**யாழ். மத்திய கல்லூரி**

வர்த்தகத்துறை- 3ஏ மாவட்டநிலை - 10

நான் எனது ஆரம்பக் கல்வியை கைதடி கலைவாணி வித்தியாலயத்தில் கற்றேன். ஆரம்பக்கல்வியே எனது பல்கலைக்கழக கனவுக்கு அடித்தளமாகியது. அதற்கு அப்பாடசாலையின் அதிபர்.ப. செல்லத்துரை அவர்களும் ஏனைய ஆசிரியர்களுமே காரணகர்த்தாக்களாக விளங்கினார்கள்.

தரம் 6 இல் இருந்து யாழ். மத்திய கல்லூரியில் கல்வி கற்க இணைந்தேன். அங்கு நான் அதிக நேரம் படிப்பதை விட படித்ததை மீளக் கிரகித்தலுக்கே முக்கியத்துவம் கொடுப்பேன்.

இதனால் எனது கல்விச் செயற்பாடுகள் மிக இலகுவாக இருந்தது. இதேவேளை நான் உயர்தரத்தில் கற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் அதாவது கடந்த வருடத்தில் வீதிகள் அடிக்கடி மூடப்படுவதனால் கற்றல் நேரம் குறைந்து பயணத்துக்கான நேரமே கூடியது.

ஆனாலும் நான் துவண்டு விடவில்லை. எனது வீடு கற்றலுக்கான நல்ல இடமாகும். பாடசாலையால் வந்து வீட்டிலிருந்து கற்றதை மீட்பேன். இதுவே எனது வெற்றிக்குக் காரணமாகும்.

இதேவேளை நான் புத்தகப் பூச்சியாக நிற்காது எமது சனசமூக நிலையத்தில் கல்வி கற்கும் காலத்தில் செயலாளர் என்ற பொறுப்பையும் கையிலெடுத்து மக்களுக்கான சேவையை மேற்கொண்டவாறு எனது கல்வியையும் கவனித்தேன்.

அதுவே எனக்கு இன்று வெற்றியையும் சமூகப்பற்றையும் தந்தது. இன்று இந்த வெற்றியை நான் மட்டுமல்லாது எனது கிராமமும் சனசமூக நிலையமும் சந்தோசத்துடன் அனுபவிக்கின்றது.

எனது பல்கலைக்கழக பயணத்திற்கு கலைவாணி அதிபர், மத்தியகல்லூரி அதிபர், ஆசிரியர்கள், எனது பெற்றோர்கள், சகோதரர்கள், சனசமூக நிலைய உறவுகள் மற்றும் குறிப்பாக நிஷாகரன், துமிலன், ஜெயானந்தன் ஆகியோரும் பங்காளிகளாக உள்ளார்கள்.



## குணசிங்கம் யசோதரன்

**யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி**

வர்த்தகத்துறை- 2ஏபி மாவட்டநிலை - 35

நான் ஆரம்பக் கல்வியை கொட்டடி நவசிவாய வித்தி யாலத்திலும் , உயர்தரக் கல்வியை வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் பயின்றேன். உயர் தரக்கல்வியை பல சிரமத்தின் மத்தியிலேயே தொடர்ந்தேன். எனது பிரதேசம் கல்வியில் பின் தங்கியிருப்பதனால் பல சவால்களையும் எதிர்கொள்ளவேண்டிவந்தது.

சாதாரண தரம் படிக்கும் போதே எனது மனதில் எப்படியாவது பல்கலைக்கழகம் செல்லவேண்டும் என்ற ஆசை உண்டாகியது. சாதாரணதரப் பரீட் சையில் குறைந்த பெறுபேறுகளைப் பெற்று உயர்தரக் கல்வியைத் தொடர்ந்தேன்.

உயர்தரப் பரீட்சை நெருங்கும் காலத்தில் ''உதயனின் கல்விச்சுடர்'' என்ற இதழில் பல வினாத்தாள்கள் வெளிவந்தன. அவை எனக்கு பயிற்சிகளை மேலும் மேலும் செய்யத் தூண்டியது. அத்துடன் நான் பல வினாத்தாள்களை திரும்பத்திரும்ப செய்து பார்ப்பேன்.

உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற எனக்கு உதவிய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ''உதயன்'' கல்விச் சுடர் ஆகியோருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## தங்கராசா நிரஞ்சன்

**யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி**

வர்த்தகத்துறை-3ஏ மாவட்ட நிலை-11

நான் ஆரம்பக் கல்வியை இந்து ஆரம்பப் பாடசாலையிலும் தரம் 6-11 வரை மத்திய கல்லூரியிலும் கற்றேன்.

நான் சாதரணதரப் பரீட்சையை முதலில் எதிர்கொள்ளும் போது கல்வி எனக்குக் கசப்பான ஒன்றாகவே இருந்தது. அதனால் முதல் தடவையில் என்னால் சித்தியடைய முடியாமல் போனது. அத்துடன் சிறிது காலம் கல்வியையும் தொடராமல் விட்டேன்.

அவ்வேளையிலேயே எனது அண்ணனுக்கு மருத்துவபீட அனுமதி கிடைத்தது. அப்போது முதல் எனக்கு சிறிது சிறிதாகக் கல்வி ஆர்வம் ஆரம்பித்தது. அதனை நான் எனது அம்மாவிடம் முதலில் கூற மிகுந்த மகிழ்ச்சியடைந்து என்னை உற்சாகப் படுத்தினார். உடனடியாகவே எனது அப்பாவும் அண்ணாவும் அதற்கான உதவிகளைச் செய்து ஊக்கப்படுத்தினர்.

இரண்டாவது தடவை தோற்றி சாதாரணதர பரீட்சையில் ஆங்கிலம் உட்பட அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்தேன். உயர்படிப்பைத் தொடரும் பொருட்டு எனது குடும்பத்தினரின் விருப்பத்திற்கு இணங்க எனது வீட்டுக்கு அண்மையில் உள்ள வைத்தீஸ்வராக் கல்லூரியில் இணைந்து வர்த்தகத்துறையில் கல்விகற்றேன்.

நான் உயர்தரம் படிக்கும் போது இறைவன் எனக்கு நல்ல நண்பர்கள் பலரை அறிமுகப்படுத்தினார். அவர்கள் மூலம் சிறந்த ஆசிரியர்களிடம் கல்வி கற்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. நான் உயர்தரம் படிக்க ஆரம்பித்த நாள் தொடக்கம் எனது குடும்பத்தார் என்னைத் தினமும் ஊக்குவித்த வண்ணமே இருந்தனர். அத்துடன் உயர்தர பெறுபேற்றின் மூலம் என்னை நிரூபிக்க வேண்டும் என்கின்ற வைராக்கியத்துடனும் கடினமாகப் பாடுபட்டேன்.

எனினும் நான், எனது ஆசிரியர் ஒருவர் அடிக்கடி கூறுவது போன்று நான் படிப்பதைப் பெரிதாக வெளியாருக்குக் காட்டிக்கொள்ளாமல் அதேநேரம் கடும்முயற்சி எடுத்துப் படித்தேன். உதாரணத்துக்கு எல்லா வீட்டிலும் பொதுவாக தூங்காமல் படி என்றே கூறுவார்கள். ஆனால் என் வீட்டில் என்னை நீண்ட நேரம் படிக்காமல் தூங்கு என்றே கூறு வார்கள்.

இறுதியாக என்னை இவ்வளவு தூரம் ஊக்குவித்து வழிநடத்திய எனது குடும்பத்தாருக்கும் இறைவனுக்கும் எனக்கு சிறப்பாக கற்பித்த ஆசிரியத் தெய்வங்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் இந்த நேரத்தில் பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் நிலை அறிந்து பல்வேறு உதவிகளை வழங்கிவரும் யுனிசெவ் நிறுவனத்துக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.



## விதுசாயினி மகேந்திரலிங்கம்

**யாழ்.இந்து மகளிர் கல்லூரி**

விஞ்ஞானப் பிரிவு-2பிசி மாவட்ட நிலை-59

நான் எனது ஆரம்பக் கல்வியை பொஸ்கோ பாடசாலையிலும் தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை இந்து மகளிர் கல்லூரி யிலும் கற்றேன். எனது அப்பா வர்த்தகர். அம்மா வீட்டுப்பணிப் பெண்ணாக இருந்த போதிலும் எனது கல்விக்கும் இப்பெறுபேற்றிற்கும் மிகுந்த பக்கபலமாக இருந்துள்ளனர்.


எனது சகோதரர்களும் பரீட்சை நெருங்கும் நேரத்தில் மிகவும் ஒத்தாசை புரிந்தார்கள். அதிலும் குறிப்பாக ஆரம்பத்திலிருந்து இறுதிவரை எனது அண்ணா துவாரகிஈசன் கொழும்பில் உள்ள பிரபல பாடசாலைகளில் இடம்பெற்ற பற்பல வினாத்தாள்களை எனக்கு இறுதிவரை அனுப்பியிருந்தார். அவரது ஆதரவு நான் இப்பெறுபேற்றை பெற மிகவும் உதவி புரிந்தது. நான் அதிகமாக காலையிலேயே படிப்பேன். அதிகாலையில் எழுந்து படிப்பது மனதில் ஆழப்பதியும் என்ற உண்மையை எனது பெறுபேற்றில் இருந்தே கண்டுகொண் டேன்.

நான் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத காரணத்தினால் எனது ஆரம்பகால நண்பர்களை விட்டு நீண்ட தூரம் விலகியுள்ளேன்.

அந்த வெறியுடன் கல்வி கற்றநான் இன்று மாவட்ட நிலை-59ஐ அடைய வழி சமைத்தது. ஆரம்பத்திலிருந்தே வைத்தியராக வரவேண்டும் என்பதே எனது கனவு. அதற்காக அடுத்த முறையும் முயற்சிப்பேன். என்றாலும் இப்பெறுபேற்றை பெற்றமைக்காக மன மகிழ்ச்சியடைகிறேன்.

எனது தாயின் அரவணைப்பு இறுதிவரை இருந்தமையினாலும் இறைவனின் ஆசியினாலும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் ஊக்கத்தினாலுமே என்னால் இப்பெறுபேற்றை அடைய முடிந்தது. ஆகவே என் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எதிர்வரும் பரீட்சையில் இரண்டாவது தடவை இலக்கை நான் அடைந்தால், எமது மண்ணில் இருந்து எமது நாட்டு மக்களுக்கு சேவை செய்வேன். இவற்றை எல்லாம் விட எனது பெறுபேற்றிற்கு ''உதயனின்'' கல்விச்சுடரினை அதிகமாகச் செய்து பார்த்தமையும் ஒரு காரணமாகும். நான் இப்பெறுபேற்றை அடைய உதவி, ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் நன்றிகள்.



## பாரதி சபாரட்ணம்

**வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

கலைப்பிரிவு-2ஏபி மாவட்ட நிலை-81

எனது ஆரம்பக் கல்வியை நாகர் கோயில் அ.மி.த.க பாடசாலையிலும் இடைநிலை , உயர்தரக் கல்வியை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியிலும் கற்றேன்.

உயர்தரத்தில் எனது சுய விருப்பத்தின் பேரில் கலைப்பிரிவினைத் தெரிவு செய்து கற்றேன். இப் பெறுபேற்றினைப் பெற்றதனையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். கற்றலுக்கு இதமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்த பெற்றோருக்கும், அனைவருக்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்காக விளங்கும் எனது பாடசாலை அதிபருக்கும், சிறுவயது முதல் கல்வி போதித்த நடமாடும் தெய்வங்களான ஆசிரியர்களுக்கும், கற்றலுக்கு உற்றதுணையாக விளங்கிய எனது இனிய நண்பிகளுக்கும், சகோதரர்களுக்கும் எனது வெற்றிக்குப் பக்க பலமாக விளங்கிய அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இச் சந்தர்ப்பத்தை வழங்கிய உதயன் பத்திரிகைக்கும் எனது நன்றிகளைத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்வடைகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடதுசாரித் தத்துவம்....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

### தமிழரை இழிவு படுத்திய மேதின ஊர்வலம்

1968 ஆம் ஆண்டு லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்பன ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து ஐக்கிய முன்னணி ஒன்றை அமைத்தன. இந்த ஐக்கிய முன்னணியானது இலங்கையில் முன்னெப்பொழுதும் வரலாறு கண்டிராத மேதின ஊர்வலத்தை ஒன்றுபட்டு நடாத்தியது. இந்த மேதின ஊர்வலத்தில் சமசமாஜிட்டுக்களும், கம்யூனிஸ்ட்டுகளும் 'தோசே மசாலவடே அப்பிட்ட எப்பா' என்று தமிழ் மக்களை இழிவுபடுத்தும் கோசத்தை எழுப்பினர். இதன் உட்பொருள் மிகவும் ஆழமானதும் ஆபத்தானதும் ஆகும். தமிழர்களை இழிவுபடுத்தும் முறையில் தோசை மசாலவடை ஆகிய தமிழர்கள் எமக்கு வேண்டாம் என்று சிங்களவர்கள் தமிழரைப் பிரித்து ஒதுக்குவதற்கான கோஷமாய் இது அமைந்தது. இது ஒரு சுத்தப் பிரிவினை வாதம் ஆகும். இத்தகைய இடதுசாரி சிங்களவர்களே தமிழர்களைப் பிரிக்கும் பச்சைப் பிரிவினை வாதிகளாகக் காணப்படும் போது பிரிந்து சென்று சுதந்திர அரசு அமைப்பதைத் தவிர வேறு வழி தமிழருக்கு இருக்க முடியாது என்பதை இடதுசாரிகளே இதன் மூலம் உணர்த்தி விட்டனர்.

### கம்யூனிஸ்ட்டுகள் பிரிவு

சீன - சோவியத் உறவு முறிந்ததைத் தொடர்ந்து 1960 களின் ஆரம்பத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவேற்படத் தொடங்கியது. எஸ்.ஏ.விக்கிர சிங்க தலைமையில் மொஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சி எனவும், பிறேமலால் குமாரசிறி தலைமையில் பீக்கிங் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியெனவும் 1962 ஆம் ஆண்டு அவை இரு கட்சிகளாயின. 1964 ஆம் ஆண்டு உட்கட்சி முரண்பாட்டால் பிறேமலால் குமாரசிறியும் அவருடன் மேலும் சிலரும் பிரிந்து செல்லவே என்.சண்முகதாசன் கட்சியின் தலைவரானார்.

இக்கால கட்டத்தில் மொஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியில் முன்னணி உறுப்பினராக இருந்த றோகண விஜய வீராவின் தந்தையினது செல்வாக்கின் பெயரால் றோகண விஜயவீர 1961 ஆம் ஆண்டு லுமும்பா பல்கலைக்கழகத்தில் மருத்துவம் பயில ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்டார். ஆனால் அங்கு அவர் சோவியத்தின் நிலைப்பாட்டை எதிர்த்து சீன சார்பு நிலைப்பாட்டை எடுத்ததைத் தொடர்ந்து அவரது கல்வி இடைநிறுத்தப்பட்டது. இலங்கையில் அவர் சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து கொண்ட போதிலும் சண்முகதாசனின் தலைமையை ஏற்க மறுத்து கட்சியில் இருந்து வெளியேறி 1965 ஆம் ஆண்டு தனிச் சிங்களவர்களைக் கொண்ட ஜனதா விமுத்தி பெரமுன [மக்கள் விடுதலை முன்னணி] என்ற அமைப்பை ஆரம்பித்தார்.

இத்துடன் சண்முகதாசனின் கட்சி சிங்கள இளைஞர்கள் இடமிருந்து முற்றிலும் அன்னியப்பட்டு ஏறக்குறைய ஒரு தமிழ்க் கட்சி என்ற நிலைக்கு மாறத் தொடங்கியது. படிப்படியாக அக்கட்சி செயல் பூர்வம் அற்ற நிலைக்கு உள்ளாகி 1980களின் இறுதியில் அது முற்றிலும் கலைக்கபடும் கட்சியாக மாறியது என்பது வேறுகதை.

### உள்ளீர்ப்பிலும் இனவாதம்

1968 ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சியுடன் சமசமாஜிஸ்ட்டுக்களும் மொஸ்க்கோ சார்பு கம்யூனிஸ்ட்க்களும் அமைத்துக் கொண்ட ஐக்கிய முன்னணி 1970 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் முன்னெப்பொழு தும் காணாத மிகப் பெரும் வெற்றியீட்டி மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை நாடாளுமன் றில் பெற்றுக்கொண்டது. ஸ்ரீமாவோ தலைமை யிலான ஐக்கிய முன்னணி அரசிற்கு எதிராக 1971 ஆம் ஆண்டு றோகண விஜயவீர தலைமையிலான ஜே.வி.பி ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியில் ஈடு பட்டது. இக்கிளர்ச்சியானது இளைஞர் பிரச்சினை களின் அடிப்படையில்- குறிப்பாக கல்வி, வேலை வாய்ப்பு பிரச்சினைகளின் அடிப்படையில் - மையங் கொண்டு எழுந்த போதிலும் தமிழ் இளைஞர்களை இவ்வமைப்பு சிறிதும் உள்வாங்காது விட்டதற்கு ஜே.வி.பி.யின் தமிழின எதிர்ப்பு இனவாதமே பிரதான காரணமாக அமைந்தது.

இவர்களின் ஐந்து வகுப்புகளில் ஒன்றாக ''இந்திய விஸ்தரிப்பு வாதம்'' எனும் வகுப்பு காணப்பட்டது. இலங்கை வாழ் தமிழர்கள் இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் கருவியெனவும் கைக்கூலிகள் எனவும் முற்றிலும் தமிழின எதிர்ப்பு வாதத்தைத் தூண்டும் வகையில் இந்த வகுப்புகள் காணப்பட்டன. எனவே சாதாரண இனவாதத்தைக் கடந்து ஓர் இன அழிப்பு இனவாதச் சிந்தனையைக் கொண்டதாக இந்த ஜே.வி.பி.யின் புரட்சி அமைந்திருந்தது. தனிச்சிங்கள சட்டத்தின் பின் தோன்றிய மேற்படி இடதுசாரிகள் ஆயுதப் பரிமாணத்துடனும் வன்முறைக் கலாச்சாரத்துடனும் பிரபுத்துவ சிந்தனையுடனும் தோன்றிய மிகவும் ஆபத்தான இனவாத எதிர்ப் புரட்சியாளர்களாகக் காணப்பட்டனர். ஆதலால் தமிழரும் சிங்களவரும் ஏனைய இனத்தவர்களும் இணைந்த ஒரு சோசலிஷப் புரட்சி இலங்கையில் சாத்தியமற்றுப் போனத்திற்கு 1971 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஜே.வி.யின் எதிர்ப் புரட்சியும் அதன் எழுச்சியும் இறுதிச்சான்றாக அமைந்தன.

### தமிழின விரோத அரசமைப்பு கொல்வின் உருவாக்கினார்

ஜே.வி.பி தோற்கடிக்கப்பட்டது ஒரு புறம் நிகழ்ந்த அதே வேளையில் ஐக்கிய முன்னணி அரசு தமிழருக்கு எதிரான இனவாத நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றது. இதில் லங்கா சமசமாஸிஸ்ட்டுக்களும் மொஸ்க்கோ சார்பு கம்யூனிஸ்ட்க்களுமான இரு பிரிவினர்களது நிலைப்பாடுகளும் மிகவும் முக்கியமானவை. 'மொழி ஒன்றென்றால் நாடு இரண்டு', 'மொழி இரண்டென்றால் நாடு ஒன்று' என்று அமுதவாக்கியம் கூறிய கொல்வின் ஆர்.டி சில்வா தமிழின விரோத அரசியல் யாப்பை உருவாக்கினார். இதற்கு மொஸ்க்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியும் கூடவே இருந்து இத்தகைய இனவாதத்திற்கு ஆதரவளித்தது. 1972 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த இந்த இனவாத அரசியல் யாப்பை தமிழ் மக்கள் முற்றாக நிராகரித்தனர். இவற்றின் மூலம் இலங்கையில் மருந்துக்கும் இடதுசாரிகள் இல்லை என்ற நிலை தெளிவாகப் புலப்பட்டது.

இப்பின்னணியில் மொஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணித் தலைவர்களுள் ஒருவராக இருந்த தமிழரான வி.பொன்னம்பலம் மேற்படி கட்சியில் இருந்து வெளியேறி 'செந்தமிழர் ஆயிடுவோம்' என்ற தமிழினப் பெயரால் ஆன இடதுசாரி இயக்கத்தை ஆரம்பித்தார். அதாவது சிங்களவரும் தமிழரும் இடதுசாரி அரங்கில் இனியும் ஒன்றல்ல என்ற இறுதி மணியோசையாக அது அமைந்தது.

1921 ஆம் ஆண்டு இலங்கைத் தேசியக் காங்கிரஸ் சிங்களம் - தமிழ் என இரண்டாக உடைந்தது போல, 1956 ஆம் ஆண்டு ஐ.தே.க.வில் இருந்து தமிழ் அமைச்சர்கள், தமிழ் எம்.பி.க்கள், தமிழ் உறுப்பினர்கள் வெளியேறியது போல, 1976 ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து தமிழ் தலைவர்கள் பிரிந்து செந்தமிழர் ஆயிடுவோம் என்ற தமிழ் கம்யூனிஸ்ட் கட்சி உருவானது. இதற்கு முதலே சண்முதாசன் தலைமையிலான பீக்கீங் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து றோகண விஜயவீர அணியினர் 1965 ஆம் ஆண்டு பிரிந்து சென்றதோடு பீக்கீங் கம்யூனிஸ்ட் கட்சி நடைமுறையில் சிங்களம் - தமிழாகப் பிரிந்து விட்டது. சிங்களத் தரப்பால் ஒதுக்கப்பட்டு, இறுதியில் தமிழ் தரப்பாகவே காணப்பட்ட சண்முகதாசன் தலைமையிலான அக்கட்சியை 1980 களின் பிற்பகுதியில் சண்முகதாசன் கலைத்ததோடு அதன் கதை முடிந்து விட்டது.

எனவே வலதுசாரிகளோ அல்லது இடதுசாரிகளோ அல்லது தாராண்மை வாதிகளோ எவையாயினும் அவை இறுதியில் தமிழ் - சிங்களமென இரண்டாக பிளவுபட்டுச் சென்றுள்ளமையே வரலாறாகக் காணமுடிகிறது. இது தனிமனிதரில் இருந்து கட்சிகள் வரை பொருந்தும்.

### இனவாதத்தின் ஆரம்பம்

ஜே.வி.பி.யின் ஆயுதப் போராட்டம் 1970 களின் ஆரம்பத்தில் தனிச்சிங்களப் பரிமாணத்தில் முற்றிலும் இனவாதக் கண்ணோட்டத்தோடு ஆரம்பமானது. அப்படியே தமிழர்கள் தரப்பில் 1970 களின் மத்தியில் தமிழீழப் போராட்டம் என்ற பிரிந்து செல்லும் கொள்கையோடு, கூடிய ஆயுதப் போராட்டம், ஆரம்பமானது. ஆரம்பத்தில் இருந்தே தமிழரும் சிங்களவரும் இன பேதமற்ற இடதுசாரி கொள்கையிற்கூட இரு இன வேறுபாடுகளுக்கான கொள்கைப் போக்கையே கொண்டிருந்தார்கள் என்பதைக் காணலாம்.

1920 களின் பிற்பகுதியிலும் 1930 களின் முற்பகுதிகளிலும் எழுச்சி பெற்ற யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் சிங்கள இடதுசாரிகளுடன் கைகோத்து ஐக்கிய இலங்கைக்கான தேசிய விடுதலைப் போராட்டத்தை நடத்த முற்பட்டபோது அந்த பகிஷ்கரிப்பைப் பாராட்டிய சிங்கள இடதுசாரிகள் அதற்கு வாக்குறுதி அளித்துவிட்டு பின்பு காலை வாரியதோடு தமிழ் - சிங்கள இடதுசாரி ஐக்கியம் சாத்தியம் அற்றது என்ற வரலாறு உதயமாகத் தொடங்கியது. இது பிற்காலத்தில் முழு அளவில் பல்வேறு கட்டங்களுக்கும் பொருத்தமான காரணிகளால் எதிர்நிலை வளர்ச்சியடைந்தது.

சிங்கள வலதுசாரித் தலைவர்கள் மிகவும் தந்திரமாகத் தமிழ் வலதுசாரித் தலைவர்களைக் கால தேவைக்கேற்ப பயன்படுத்தித் தமிழ்த் தரப்பிலும் சிங்களத் தரப்பிலும் இடதுசாரி இயக்கங்களுக்கு சாவு மணியடித்தனர். கூடவே பண்டாரநாயக்கா என்ற பாதி சோஷலிஸ முகம் காட்டிய இனவாதியைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முதலில் தீவிர வலதுசாரிகள் தவறவில்லை. அத்துடன், இலங்கையில் இடதுசாரிகளைத் தோற்கடிப்பதில் பண்டாரநாயக்காவும் அவரால் தோற்றுவிக்கப்பட்ட சுதந்திரக் கட்சியுமே இன்றுவரை பெரும் பங்கு வகித்து வருகின்றது.

### இடதுசாரிகள் கதை முடிவு

1970 ஆம் ஆண்டு இடதுசாரிகள் ஸ்ரீமாவுடன் கூட்டரசாங்கம் அமைத்ததோடு 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஓர் ஆசனம் கூடப் பெறமுடியாது படுதோல்வி அடைந்தனர். எனவே இங்கு நீலத்தூள் கரைந்து போன சிவப்பாக பாரம்பரிய இடதுசாரிகளின் கதை முடிந்தது.

இவ்வாறு 2004ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சியோடும் பின் அதன் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவோடும் கூட்டுச் சேர்ந்த ஜே.வி.பி.யினர் 2004 பொதுத் தேர்தலில் 39 ஆசனங்களைப் பெற்றிருந்த போதிலும், இன்றைய நிலையில் அவர்கள் இரண்டாகப் பிளக்கப்பட்டும் நீலத்தால் விழுங்கப்பட்டும் உள்ளனர். கடந்த ஓரிரு ஆண்டுகளாக நடந்து வரும் பல்வேறு தேர்தல்களிலும் அவர்களுக்கு ஏற்பட்டுவரும் தோல்விகளைப் பார்க்கும் போது அவர்களின் எதிர்காலம் நீலத்தால் விழுங்கி தோற்கடிக்கப்பட்டுச் செல்வதைக் காணலாம். சுதந்திரக் கட்சியின் கையில் பாரம்பரிய இடதுசாரிகளுக்கு ஏற்பட்ட அதேகதி ஆயுதம் தாங்கி புரட்சியில் ஈடுபட்ட நவீன இனவாதிகளான ஜே.வி.பி.யினருக்கும் பொருந்துகிறது என்பதை வரலாறு காட்டுகிறது.

'மஹிந்த சிந்தனை' என்ற தீவிர இனவாத தேர்தல் விஞ்ஞாபனத்தை உருவாக்கிய ஜே.வி.பி.யினர் தாம் பேசிய இனவாதத்தால் ராஜபக்ஷாக்களை வளர்த்துவிட்டுத் தாம் தோல்வி முகம் காண்கின்றனர். எந்த இனவாதத்தை இந்த நவீன பாஸிஸ இடதுசாரிகள் ஆகிய ஜே.வி.பியினர் எதை முன்வைத்துத் தாம் பதவிக்கு வரலாம் என மனப்பால் குடித்தார்களோ அந்த இனவாதத்தையே ராஜபக்ஷ தனது அரசியல் அட்டவணையாக்கியபோது ஜே.வி.பி.யினர் கையறு நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர். அவர்களது இனவாதக் கோளாறுக்கு அவர்களே பலியானார்கள். உன்னதமான இடதுசாரித் தத்துவமானது இவ்வாறு சிங்கள இடதுசாரிகளின் கையில் படுகொலை இனவாதத் தத்துவமாக மாறி இலங்கையில் இடதுசாரி அரசியலுக்கு சாவுமணி அடித்துள்ளது.

இலங்கையில் தோன்றிய இடதுசாரித் தலைவர்களுள் பெரும்பாலானோர் இலங்கையின் மேல்தர, மத்தியதர வர்க்கத்தில் இருந்தும் நிலமானிய செல்வந்த குடும்பங்களில் இருந்தும் தோன்றியவர்களாவர். இவர்களிடம் சிந்தனா பூர்வமாக இடதுசாரிச் சோசலிஷத் தத்துவம் உருப்பெற்ற போதிலும் இவர்களது உயர் வர்க்க வாழ்நிலையின் நிமிர்த்தம் இவர்கள் மனதளவில் கலாச்சார ரீதியான தம் வர்க்க நிலையைக் கடக்காதவர்களாகக் காணப்பட்டனர். ஆதலால் சோஷலிஸம் பேசிய போதிலும் அவர்களது இருப்பு நிலையின் பிரகாரம் ஒரு புறம் அவர்கள் போர்க்குணம் அற்றவர்களாய் காணப்பட்டதுடன் மறுபுறம் கலாச்சாரத் தொடர்ச்சியில் இனவாதம் படிந்தவர்களாகவும் காணப்பட்டனர். ஆதலால் சோஷலிஸம் என்பது இவர்கள் கையில் தோல்வி அடைந்ததோடு அவர்களே இனவாதிகளாகவும் மாறிய துயரம் இலங்கை வரலாற்றில் மறக்கப்பட முடியாத ஒரு அத்தியாயமாக உருவெடுத்தது.

ஜே.வி.பி.யினர் வர்க்க நிலையில் அடிமட்டத்தில் இருந்து தோன்றிய போதிலும் முற்றிலும் இனவாத கலாசாரத்துடன் கூடிய லும்பன் பண்பினராய்க் காணப்பட்டதனால் அவர்கள் மிகவும் ஆபத்தான இனப்படுகொலை இடதுசாரிகள் ஆயினர்.

வலதுசாரிகளாயினும் சரி, இடதுசாரிகளாயினும் சரி அவர்களை சிங்கள பௌத்த இனவாத கலாசாரம் இனவாத புதல்வர்களாகவே கருத்தரிக்கின்றது. இந்த நிலையில் மேற்படி சோஷலிஸம் பேசிய சிங்கள இடதுசாரிகள் இயல்பாகவே ஆபத்தான இனவாதிகளாகும் போது, தமிழீழமக்கள் அவர்களுடன் இணையமுடியாத துயரம் காணப்படும் நிலையில், பிரிந்து செல்வதைத் தவிர வேறு வழியை வரலாறு அவர்களுக்கு விட்டுவைக்கவில்லை.

இறுதியாக இரண்டு இடதுசாரிகளின் உதாரணங்களை இங்கு நோக்குதல் பொருந்தும். தமிழ் மக்களின் பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையையும், அதற்கான போராட்டத்தையும் பெரிதும் வரவேற்று, நியாயப்படுத்தி எழுதிய முன்னணி சிங்களப் புத்திஜீவியாக தயான் ஜெயதிலக அன்று காணப்பட்டார். அவர் ''சின்ரக்கா'' என்ற புனை பெயரில் லங்கா கார்டியனில் எழுதிய கட்டுரைகள் மிகவும் பிரபலமானவையும் பரபரப்பானவையும் ஆகும். ஆனால் அப்படி எழுதிய தயான் ஜெயதிலகதான் தமிழின படுகொலையை ஐ.நா.சபையில் முற்றிலும் நியாயப்படுத்திக் கொண்டிருந்த இலங்கைக்கான ஐ.நா.பிரதிநிதியாக விளங்கினார்.

அவ்வாறே இன்று ஜனாதிபதியின் ஆலோசகராகக் காணப்படும் வாசுதேவ நாணயக்கார ஜனாதிபதிக்கான தமது ஆலோசனையில் யாழ்க் குடாநாட்டு மக்களின் பயண நடமாட்டத்திற்கான 'பாஸ்' வழங்கும் திட்டத்தை நிறுத்தாது தொடர வேண்டுமென அவருக்கு ஆலோசனை கூறியிருந்தார் என்பது வியப்பூட்டக் கூடிய செய்தி ஆகும். இது அவர்களது அடிமன இனவாதத்தை தெளிவாகக் காட்டுகிறது. இவரே தற்போது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற விக்கிரமபாகு கருணாரட்ணவின் குரு ஆவார்.

### விக்கிரமபாகு தொடர்பில் தமிழர்களின் நிலை

தற்போது மிகவும் மதிக்கத்தக்க இடதுசாரியாகக் காணப்படும் விக்கிரமபாகு கருணாரட்ண ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட இருப்பது ஒரு நற்செய்தியே ஆகும். அவர் முன் வைத்திருக்கும் தமிழ் பேசும் மக்கள் சார்ந்த சுயநிர்ணய உரிமைக் கோட்பாடும் பெரிதும் வரவேற்கப்படும் ஒன்றாக உள்ளது. ஆனால் சிங்கள மக்கள் எவ்வளவு தூரம் ஆதரவளிப்பார்கள் என்பதும், சிங்கள தரப்பில் இவர் எவ்வளவு தூரம் பலமானவர் என்பதும் ஆழ்ந்த கவனத்திற்கு உரியதாகும். ஒரு புறம் இவர் ஏனைய கடந்த கால சிங்கள இடதுசாரித் தலைவர்கள் போல சோரம் போகாது விடுவார் என நம்புவோம். ஆனாலும் கொள்கையளவில் ஒரு கேள்விக்கு நாம் பதில் காணவேண்டும்.

ஒடுக்கப்படும் இனத்திற்கு கைகொடுக்க ஒடுக்கும் இனத்தின் மத்தியில் பலமான சக்திகள் இல்லாத இடத்து, ஒடுக்கப்படுவோர் எவ்வாறு ஒடுக்கும் இனத்தைச் சேர்ந்த முற்போக்கு சக்திகளுடன் கைகோக்க முடியும் என்று லெனின் எழுப்பிய கோட்பாட்டு நியாயத்தை நாம் கருத்தில் எடுத்தாக வேண்டும்.

எனவே விக்கிரமபாகு கருணாரட்ண ஓர் இனவாதியல்ல என்று நாம் நம்பினாலும் கூட சிங்கள மக்கள் மத்தியில் பலமற்ற அவருடன் கைகொடுக்க ஏதுக்கள் இருக்க முடியாது. ஆனால் தமிழ் தரப்பில் ஒரு வேட்பாளர் நிறுத்த முடியாதளவிற்கு எமது கையறு நிலையிருக்கினறது என்றால் ஆகக் குறைந்த பட்சம் விக்கிரமபாகு கருணாரட்ணவுக்கு தமது முதலாவது வாக்கை அளிப்பதைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு தெரிவு இருக்க முடியாது.

அதே வேளை இவ்விடத்தில் ஒரு வரலாற்று உண்மையையும் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியம் பருத்தித்துறை தொகுதியில் 1956 ஆம் ஆண்டு பி.கந்தையா எனும் கம்யூனிஸ்ட்டை நாடாளுமன்ற உறுப்பினராய் தெரிவு செய்ததைத் தவிர வேறு எந்தொரு இடதுசாரியையும் தமிழ் மக்கள் தமது நீண்ட வரலாற்றில் தெரிவு செய்திருக்கவில்லை. அந்த அளவிற்கு அவர்களுக்கு இலங்கையின் இடதுசாரிகள் மீது நம்பிக்கை ஏற்படமுடியாத வரலாறே தெளிவாய் உள்ளது.

இந்நிலையில் ஒரு சிங்கள இடதுசாரி வேட்பாளரைத் தமிழ் மக்கள் நம்புவர் என எதிர்பார்ப்பது கடினம். ஆனாலும் ஒரு தமிழ் வேட்பாளரை கொள்கை அடிப்படையில் நிறுத்த முடியாது போனால் 'பசித்திருப்பதில் கஞ்சி மேல்' என்ற அடிப்படையில் விக்கிரமபாகு கருணாரட்ணவை ஆதரிப்பதைத் தவிர மாற்று வழி இருக்காது.

நன்றி:- 'குளோபல் தமிழ் நியூஸ்'

# பாரதியைப் படிக்காதவர் தமிழபிமானியாக இருக்க முடியாது



பாரதி தமிழுக்கும் தமிழ்க்கவிதைக்கும் கிடைத்த ஒரு கொடை. 1882 ஆம் ஆண்டு மார்கழி 11ஆம் திகதி பாரதி பிறந்தான். ''பாரதி'' என்ற பெயர் தமிழ்க்கவிதை மரபில் ஒரு மந்திரம். அவனை உச்சரிக்காமல் நாம் தமிழ்க்கவிதையை நினைத்துவிட முடியாது. தான் வாழ்ந்த சமூக -தேசிய சூழலுடன் தன்னைப் பிணைத்தும் உள்ளீர்த்தபடியும் தன்னைத் தன் படைப்புகளின் மூலம் வெளிப்படுத்தியவன் பாரதி. இலக்கியப் படைப்பாளியாக, பத்திரிகையாளனாக, சமுதாய சிந்தனையாளனாக, நாட்டு விடுதலைப் போராளியாகப் பல நிலைகளில் இவன் செயற்பட்டவன்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி, ''மகாகவி என்பவன் கடந்த காலம் பற்றிய விளக்கத் தெளிவும் நிகழ்காலம் பற்றிய ஆய்வறிவும் எதிர்காலம் பற்றிய கற்பனாதரிசனம் உடையவனாகவும் விளங்குவான்... அதாவது இலக்கியப்பாரம்பரியத்தின் திசை திருப்பியாக மகாகவி இருப்பான்''

என்று கூறியது போலவே மகாகவியாக பாரதி இலங்கினான் - இயங்கினான். தன் 'மனச்சிறு புள்ளினை எங்கணும் ஒட்டி' கவி பாடிய வல்லவன் இவன். அவனின் பிறந்த நாளான இன்று அவனின் கவிதைச் சிந்தனைகளை ஒரு முறை மீட்டிப் பார்ப்பதே சுகம் தரும் ஒரு அனுபவம்தான்.

*ஆடுதல் பாடுதல் கவி ஆதினைய கலைகளில் -*
*ஈடுபட்டென்றும் இருப்பவர் - பிறர்*
*-ஈனநிலை கண்டு துள்ளுவார்'*

என்று பாடிய பாரதி தேசத்துக்காய் - சுதந்திரத்துக்காய் -சமூகவிடுதலைக்காய் பாடினான், பாடுபட்டான். இதனாலேயே,

*'வெள்ளத்தின் பெருக்கைப் போல்*
*கவிப்பெருக்கும்*
*கலைப்பெருக்கும் மேவுமாயின்*
*பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்*
*விழி பெற்று பதவி கொள்வார்'*

என்று நம்பினான் - பாடினான். இதனாலேயே தன்னை 'இருங்கலைப் புலவனாக்குதி' பாஞ்சாலி சபதத்தில் பராசக்தியிடம் அவன் வேண்டினான். 'பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா' என்று வெறுமனே அவன் பாடிவிடவில்லை.

*நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்*
*குழைத்தல்*
*இமைப்பொழுதுஞ் சோராதிருத்தல்*

என்ற தெளிவுடையவனாகவும் உறுதியுடையவனாகவும் இருந்தான். அதே நேரத்தில் தனக்கு முன்னிருந்த கவிமரபை ஆய்ந்து அறிந்த மேதையாக இருந்தான்.

*யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்*
*வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்*
*பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை*
*உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை*

என்று இவன் பாடியதில் கவிமனத்தையும், ஆய்வுமனத்தையும் காண்கின்றோம். இன்னும் மேலும்,

*இறவாத புகழுடைய புது நூல்கள்*
*தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்'*

என்று அவாவி நின்றான். பாடினான், சாதித்தான்.

தான் கவிதை பாடவேண்டிய தேவையை தெய்வம் தன்னை இன்ன இன்ன காரணங்களுக்காக கவிபாடச் சொன்னது என்று பின்வருமாறு பாடுகிறான்.

*நாட்டு மக்கள் பிணியும் வறுமையும்*
*நையப்பாடென் றொரு தெய்வம் கூறுமே*
*கூட்டி மானு டச் சாதியை ஒன்றெனக்*
*கொண்டு வையம் முழுதும் பயனுறப்*
*பாட்டிலே அறம் காட்டெனும் ஓர் தெய்வம்.*
*பண்ணிலின்பமும் கற்பனை விந்தையும்*
*ஊட்டியெங்கும் உவகை பெருகிட*
*ஓங்கும் இன்கவி ஓதெனும் வேறொன்றே*

இதில் இவன் கவிதைச் சிந்தனைகள் சமூகத்தையே சுற்றிச் சுற்றி நிற்பதைக் காணலாம். 'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்' என்பதே இவன் கனவாக இருந்தது.

''தேவாரத்திலும் திருவாசகத்திலும் திருவாய்மொழியிலும் திருக்குறளிலும் கம்பராமாயணத்திலும் அன்பு கொள்ளாதவனுக்கு தமிழபிமானம் உண்மையிலே பிறக்க நியாயமில்லை''

என்று பாரதி தன்னுடைய கட்டுரை ஒன்றிலே எழுதினான். அதே போல பாரதியைப் படிக்காதவர்கள் தமிழனாகவோ தமிழபிமானியாகவோ இருக்க முடியாது, இருப்பதில் அர்த்தமும் இல்லை.

த.அஜந்தகுமார்
(உதவி விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)

## தமிழன்னையும் இளமை பெற்றாள்

நோய் வேண்டாம்
நூறு ஆண்டுகள் வேண்டும்
வாழ்வதற்கு என்றான் பாரதி
ஆனால் -
வறுமை வாட்டியது,
துன்பம் துரத்தியது,
முப்பதுகளிலேயே முடிந்துவிட்டது
அவன் உலக வாழ்க்கை
ஆமாம்,
பாரதி என்ற மானுடன் தான்
மறைந்தான், ஆனால்
பாரதி என்ற பாவலனோ
புத்துயிர் பெற்று எழுந்தான்,
ஞாயிற்றைப் போல்
நடுவு நிலைபயின்று
ஆயிரம் ஆண்டுகாலம்
அழிவின்றி வாழ விரும்பிய
பாரதிக்கு..
தமிழ் மொழி உள்ளளவும்
தமிழர் தம் நெஞ்சம் தோறும்
வாழ்ந்திடும் வரம்
கிடைத்தது.
முறுக்கு மீசை,
அகன்று விரிந்து
ஆழ்கடல் போல்
ஒளி உமிழும் கண்கள்
முடிதரித்த மன்னவன்போல்
கம்பீரம் தருகின்ற
தலைப்பாகை,
அவனே பாரதி.
அவனுக்கு மூப்புமில்லை
முதுமையும் இல்லை
என்றென்றும் இளமை
இளமை மாறாத தோற்றம்
முதியவளாகிய தமிழ்
அன்னையும்
இளமைப் பெற்றாள்
இங்கு அவன் வரவால்.

ரம்யன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டுவில் இலஞ்சாரணியம் அம்பாள் (சோலை அம்பாள் கோவில்)



தென்மராட்சிப் பிரதேசத்தில் பிரபல்யம்மிக்க அம்பாள் ஆலயங்களில் மண்டுவில் இலஞ்சாரணியம் அம்பாள் ஆலயமும் ஒன்றாகும்.

சாவகச்சேரி சந்தையிலிருந்து டச்சு வீதியில் சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்தில் இவ் ஆலயம் காணப்படுகிறது. ஆலயச் சுற்றாடலில் பல்வேறு வகையான மரங்கள் சூழ்ந்த பகுதி யில் நீண்ட காலமாக ஆலயம் அமைந்துள்ளதால் சோலை அம்பாள் ஆலயமென அழைக்கப்பட்டு வருகிறது.

ஆலயத்தின் தலவிருட்சமாக மகிழ மரம் காணப்படுகின்ற போதிலும் ஆல யத்தைச்சுற்றி ஆல், அரசு, அத்தி, இத்தி, கருநாவல், காஞ்ஞா, கிந்ஞா, குரவம், கூகைமா, கொன்றை, கொண்டல், கொக்கட்டி, சவுக்கு, சாளம்பை, சுரவுன்னை, தாழை, நறுவில்லி, துணா, பராய், பாதிரி, பினா, பிங்கு, புரசு, தென்னை, மருது, மாவிலங்கு, வெண்நாவல், வேம்பு, போன்ற மரங்களும் சூழப்பட்டு இவ் ஆலயம் அமைந்துள்ள இடம் திவ்விய சோலையாகக் காணப்படுகிறது.

ஆலயம் ஆரம்பிக்கப்பட்ட காலம் திட்டவட்டமாகக் கூற முடியாத போதிலும் 1711 ஆம் ஆண்டு டச்சுக்காரர் ஆட்சிக் காலத்தில் வனபரிபாலன அதிகாரியாகக் கடமையாற்றிய வான்டி வாட் என்பவர் தனது குதிரையில் வந்தபோது திடீரென குதிரை நோய்வாய்ப்பட்டு படுத்ததாகவும் ஆலய அர்ச்சகர் வந்து குதிரைக்கு திருநீறு பூசியவுடன் எழுந்து பயணத்தைத் தொடர்ந்ததாகவும் அதற்கு நன்றிக் கடனாக ஆலயம் அமைந்துள்ள இடத்தினை மானியமாகக் கொடுத்ததாகவும் திருவான்டி வாட் எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் 400 வருடங்கள் பழைமை வாய்ந்த இவ்வாலயத்தில் நிகழ்ந்த அற்புதங்கள் பற்பல எனச் சொல்லப்படுகிறது.

இவ் ஆலயத்தில் 9 அடி ஆழமுள்ள கிணறு அதிசயங் களில் ஒன்றாக இன்றும் காணப்படுகிறது. கிணற்றை எட்டிப்பார்க்கும் போது ஒரு குன்றினுள் சிறிதளவு நீர் உள்ளது போல தெரி யும். ஆனால் காலை தொடக்கம் மாலை வரை எத்தனைபேர் குளித்தாலும் தண்ணீர் வற்றாமல் அதே அளவில் நிற்பதைக் காணமுடிகிறது.

பங்குனித் திங்கள், வைகாசி விசாகம் ஆகிய காலங்களில் ஆலயம் விழாக் கோலமாகக் காட்சியளிக்கும். ஒவ்வொரு திங்கட் கிழமையும் பொங்கல் செய்யும் அடியார்கள் எண்ணிக்கை அளவிடமுடியாது. அத்துடன் காவடிகள், பாற்செம்புகள், பறவைக் காவடிகள் என நாலாபுற ஆலயங்களிலிருந்தும் தொகை தொகையாக வந்தவண்ணமிருக்கும். ஆனி மாதத்தில் இடம்பெறும் மகோற்சவ காலத்திலும் பக்தர்களின் எண்ணிக்கை அதிக அளவில் காணப்படும். இவ் ஆலயத்தில் சித்திரைக் கஞ்சி வழங்கும் நிகழ்வு தற்போதும் உள்ளது.

இவ் ஆலயத்தின் குருமார், அர்ச்சகர்கள் ஆகியோர் சைவர்களாவர். பரம்பரை பரையாக சைவக் குருமாரே நித்தியபூஜைகளை மேற்கொண்டு வருகின்றனர். கந்தர் என்பவரே ஆலயத்தின் ஆரம்பக் குருவாகச் செயற்பட்டதாகவும் அவரின் பரம்பரையில் வந்தவர்களே இன்றும் பூசைகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறப்பட்டது.

ஆலயத்தைச் சுற்றி நெல்வயல்களும், விளைநிலங்களும், தென்னஞ்சோலைகளும் காணப்படுவதால் நித்திய பூஜைகளுக்குரிய பொருள்கள் அயலில் உள்ள மக்களாலேயே வழங்கப்படுகின்றன.

இவ் ஆலயத்திற்கென பரிபாலன சபை உண்டு. ஆலயக் குருவுடன் பரிபாலன சபையினரும் இணைந்து ஆலய வளர்ச்சியில் அக்கறை செலுத்துகின்றனர்.

முன்னைய காலங்களில் அம்பாளுக்கு அலங்கார உற்சவம் நடைபெற்ற காலங்களில் இரவுத் திருவிழாவில் அம்பாள் வீதியுலா வரும் வேளைகளில் கண்ணைக் கவரும் வாண வேடிக்கைகளை இன்றும் மறக்க முடியாது என ஒரு வயோதிபர் தெரிவித்தார். 1925ஆம் ஆண்டு தனக்கு சிறுவயதாக இருக்கும் போது ஒரு நாள் இரவுத் திருவிழாவுக்கு வாண வேடிக்கைக்குரிய வெடிகள் வீதியின் நாலாபுறமும் பொருத்தப்பட்டிருந்த வேளையில் வாண வேடிக்கை இன்று செய்யவேண்டாமென அம்பாளின் அசரீரி கேட்டதாகக் குருக்கள் சொன்னதாகவும் அவரின் சொல்லை மதிக்காத சிலர் வாண வேடிக்கையில் ஈடுபட்ட வேளையில் நிலத்தில் புதைத்து வைத்திருந்த வெடி வெடித்துச் சிதறியதில் ஆறுபேர் பலியானதாகவும் அந்த வயோதிபர் தெரிவித்தார்.

தான் இளைஞனாக இருந்த காலத்தில் ஆலய தேவைக்காக விறகுகள் வெட்டுவதற்காக ஆலயச் சுற்றாடலில் காணப்பட்ட விறகுகளைப் பொறுக்கி வந்து கொத்தியபோது அவற்றில் ஒரு மரக்குற்றி சந்தன மரத்தின் துண்டாகக் காணப்பட்டதாகவும் அதனை ஆலய தேவைக்கு எடுத்துக் கொண்டு ஆலயச் சுற்றாடலில் அனைத்தும் தேடிய போதும் சந்தனமரம் நின்றதற்கான அறிகுறி இல்லையெனவும் அந்த முதியவர் தெரிவித்தார்.

இங்குள்ள கிணற்று நீர் மருத்துவக் குணம் உள்ளதாகச் சொல்லப்படுகின்றது. ஆயுள்வேதத்தில் சொல்லப்படுகின்ற மருது, மகிழ் போன்ற மரங்களின் நடுவே கிணறு இருப்பதால் நீர் எந்த வேளையிலும் குளிர்ச்சி உடையதாகவும் மருத்துவ குணம் உள்ளதாகவும் விளங்குகின்றது.

சில காலங்களில் இந்தக் கிணற்றில் வர்ண நிற மீன்கள் காணப்படுகின்றது. சில நாள்களில் மறைந்து விடும்.

தீராத நோயாளர்கள் பலர் இந்தக் கிணற்றில் குளித்து நோய்கள் நீங்கப் பெற்றதாகவும் பல மனநோயாளர்கள் குணமாகிச் சென்றதாகவும் கூறப்பட்டது.

இந்த பாவநாசினி தீர்த்தக் கிணறு 300 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் கீற்கட்டிகளைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

# பூங்கன்றுகளை வைத்தும் சுயதொழில் செய்யலாம்



**யாழ்.** மாவட்டத்தில் பழ மரச் செய்கையை விருத்தி செய்யும் விவசாயப் பண்ணை கச்சாயில் உள்ளது. 100 வருடங்களுக்கு மேலாக அப்பகுதியில் மா, பலா, எலுமிச்சை, தோடை, மாதுளை போன்ற பழ மரக்கன்றுகளை உற்பத்தி செய்து அதனை ஒட்டு முறைகள் மூலம் பல்வேறு இனங்களை உற்பத்தி செய்து வருகின்றனர்.

புளி மாங்காய் மரங்களிலிருந்து பெறப்படும் விதைகள் மூலம் அமைக்கப்படும் நாற்று மேடையில் வளர்ந்து வரும் கன்றுகளில் ஏனைய இன மாமரக் கிளைகளில் பெறப்படும் துண்டங்களை ஒட்டு மூலம் பொருத்தி பல்வேறு இன மாங்கன்றுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வதைக் காணமுடிகிறது.

இங்குள்ள விவசாயப் பண்ணையில் பலா, தோடை, எலுமிச்சை போன்ற ஒட்டுமுறை மூலம் உற்பத்தி செய்யப்படும் பழமரக்கன்றுகளை பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப் பிரதேசத்தில் உள்ள மண்வளம் பழ மரக்கன்றுகளின் உற்பத்திக்குப் பெரிதும் உதவுகின்றன. இருவாட்டி மண் வளத்தைக் கொண்ட தரை அமைப்பானது ,பழமரக் கன்றுகள் மட்டுமல்ல பூ மரக்கன்றுகள் கூட சிறப்பாக உற்பத்தி செய்ய ஏதுவாக உள்ளது.

கச்சாய்ப் பகுதியில் 100 வருடங்களுக்கு மேலான பழ மரக்கன்று உற்பத்தியில் ஈடுபட்டுவரும் குடும்பத்தில் தற்போது இப் பணியில் ஈடுபட்டு வரும் திருமதி தாமோதரம்பிள்ளையின் பழமரக் கன்று உற்பத்திப் பண்ணையை பார்வையிடும் சந்தர்ப்பம் அண்மையில் கிடைத்தது.

இவரது குடும்பதினரது காணிகளில் பெரும் இடங்கள் பழமரக் கன்றுகளும், விதம் விதமான பூக்கன்றுகளும் காணப்பட்டன.

வளவுகளில் ஒவ்வொரு இனத்திலும் மாமரக் கன்றுகள் பெருமளவு காணப்பட்டன. அத்துடன் தோடை எலுமிச்சை, மாதுளை போன்ற மரங்களில் புதிய கன்றுக்கான ஒட்டு போட்ட நிலையிலும், இம் மரங்களிருந்து பிரிக்கப்பட்டு பைகளில் வைக்கப்பட்டுள்ள மரக்கன்றுகளும் பெருமளவில் காணப்பட்டன. அத்துடன் விற்பனைக்குத் தயாரான நிலையில் நூற்றுக்கணக்கான பலாமரக் கன்றுகளும் காணப்பட்டன.

இந்த பழமர உற்பத்தியாளரான திருமதி தாமோதரம் பிள்ளை பரமேஸ்வரியைச் சந்தித்து இவற்றின் உற்பத்தி தொடர்பான விவரங்களைக் கேட்டேன்.

எனக்குப் பத்து வயதாக இருக்கும்போது எனது தந்தை மேற்கொண்ட மரக்கன்று வ[illegible]டுமுறைகளைப் பார்த்துப் பழகி அதைத் தொழி[illegible]ாக மேற்கொண்டதில் வெளிநாட்டு வருமானத்தி[illegible]ற்கு இணையான வருமானத்தை ஈட்டக் கூடியதாக உள்ளது.

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து பின்னர் அரச தொழிலில் இணையக் கூடிய வாய்ப்புகள் கிடைத்த போதிலும் அரச பணியில் மாதாந்தம் கிடைக்கக்கூடிய வருமானத்தை விட பல மடங்கு வருமானம் தரக்கூடிய பழமர உற்பத்தி மூலம் பெறலாமென திடமாக நம்பி பழமரக்கன்று பண்ணையினை நடத்த முடிவு செய்தேன். இதற்கு எனது சகோதரர்கள் பெரிதும் உதவி செய்தனர். இதனால் பண்ணையை ஆரம்பித்த முதல் வருடத்திலேயே எனது எண்ணம் ஈடேறியது.

அன்று தொடக்கம் 55 வயதான இவ்வேளையிலும் இந்தத் தொழிலை நான் கைவிடவில்லை. நாட்டுச் சூழ்நிலை காரணமாகவும் வெளிநாட்டு மோகம் காரணமாகவும் எனது சகோதரர்கள் அனைவரும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளபோதிலும் இத்தொழிலைக் கைவிடாமல் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றேன். வருடாந்தம் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை விற்பனை செய்து வருகின்றேன். முன்னைய காலங்களில் சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய சந்தைகளுக்குக் கொண்டுசென்று விற்பனை செய்து வந்தேன். தற்போது திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்தின் சிபார்சின் பேரில் அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் 4 ஆயிரம் மரக்கன்றுகள் (மா, பலா, [illegible] எலுமிச்சை, தென்னம்பிள்ளைகள் போன்றவை) எம்மிடம் கொள்வனவு செய்யப்பட்டு கொண்டு செல்லப்படுகிறது. அத்துடன் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பலர் தமது காணிகளில் நடுவதற்காகவும் மரக்கன்றுகளைக் கொள்வனவு செய்து வருகின்றனர். மேலும் எம்மால் வளர்க்கப்பட்டு ஒட்டுக்கள் மூலம் பிரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள பல நிறங்களிலான பூமரக் கன்றுகளும் மக்களிடையே நல்ல வரவேற்பினைப் பெற்று வருடாந்தம்பெருமளவில் பூக் கன்றுகளும் கொள்வனவு செய்கின்றனர்.

பூமரப் பண்ணை மங்கல நிகழ்வுகளில் வீடியோ படப்பிடிப்புக்கு பயன்படுத்தப்படுகின்றன என்றார்.

கடந்த2005ஆம் ஆண்டு வடக்கு- கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தினர் நடத்திய பழமரச் செய்கைப் போட்டியில்மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றதுடன்சிறந்தபழமரச் செய்கையாளர்களுக்கானவிருதும் வழங்கப்பட்டன.

எனது விவசாயப் பண்ணைக்கு யாழ். மாவட்டவிவசாயத் திணைக்களத்தினர் சிறந்த ஆலோசனைகளையும் ஊக்குவிப்பையும் வழங்கி வருகின்றனர் என்றார்.

எனது நான்கு பிள்ளைகளும்எனது கணவரும் எனது முயற்சிக்கு இன்று வரை உறுதுணையாக உள்ளதால் மாவட்டத்தில் சிறந்த பழமரச் செய்கைப் பண்ணையாளராக நிலைத்து நிற்க முடிகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ நாகர்கோயில்
மகாவித்தியாலய அதிபர்
**திரு.கந்தசாமி கண்ணன்**
(B.Com-Hons, Dip. in Edu.)
அவர்கள் அதிபர் தரம் 2-II பதவி உயர்வு பெற்றதையிட்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தோம்.
வல்லிபுரத்து ஆழ்வார் திருவருளால் மேலும் பல பட்டங்களும், பதவி உயர்வுகளும்பெற்றுப் பல்லாண்டு காலம் வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

புலோலி.
வல்லிபுரம் வாழ் நண்பர்கள்.
(90989)

## ஊம் கொம் கோல்
## CHAM COM GOAL
**COMPUTER ACADEMY, DUTCH ROAD, CHAVAKACHCHERI**
கணனி அக்கடமி, டச்சு வீதி, சாவகச்சேரி. T.P:0776469897

பாடசாலை மாணவர்களுக்கான விடுமுறைக்கால வகுப்புகள்
★ புதிய பிரிவுகள் ஆரம்பம்
ஆண்டு 05 தொடக்கம்....
12.12.2009 (சனிக்கிழமை) முற்பகல் 10 மணி
Inter net & Email அறிமுக வகுப்புகள்
★ புதிய பிரிவுகள் ஆரம்பம்
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்கும்....
14.12.2009 (திங்கட்கிழமை) முற்பகல் 11 மணி
★ Diploma in Micro Soft Office
★ PC Hart ware அறிமுக வகுப்புகள்.
★ Inter net & Email அறிமுக வகுப்புகள்.
மேலதிக விபரங்களுக்கு சாவகச்சேரி வலயக் கல்விப் பணிமனைக்கு அருகில் உள்ள எமது காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.
(சி/563062)

## கலாலயா
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்
மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

### விடுமுறைக் கால 12 நாள் வகுப்புக்கள்
- கூந்தல் அலங்காரம் : 50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் பண்ணுதல், முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், முடி வெட்டுதல்.
- Facials மற்றும் மணப்பெண்கள் அலங்காரம், வித்தியாசமான முறைகளில் சேலை அணிதல், கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் (Pedicure, Manicure.)
- ப்ப்றிக் வர்ணம் தீட்டுதல் (Fabric Painting)
- Saree Work (சேலையில் அலங்காரவேலை செய்தல்)



மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts தைத்தல்

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது
**ஆரம்பம் - 14-12-2009 காலை 9.00 மணி**
மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

## நெஞ்சம் நெகிழ்ந்த நினைவலைகள்

முதலாம் ஆண்டு — 3ஆம் ஆண்டு





வேலுப்பிள்ளை சிவநாதன் — வேலுப்பிள்ளை முத்துப்பிள்ளை
22.06.1949 → மண்ணில் → 16.01.1928
21.11.2008 → விண்ணில் → 10.01.2007
அபரபக்க தசமி (11.12.2009) ← திதி → அபரபக்க ஸப்தமி (07.01.2010)

பூவுலகு நீத்து மேலுலகில்
பூத்துவிட்ட குல விளக்குகளே- நீவீர்
விட்டுச் சென்ற தடயங்கள்- எமை
விட்டுச் செல்ல மறுத்து- இன்றும்
மாறாத வடுக்களாக -எம்
நினைவலைகளில் தவழ்கின்றனவே.

பெரியநாவலடி,
கொடிகாமம்.
(92937)
குடும்பத்தினர்.

## விற்பனைக்கு
மேசைகள், கதிரைகள், இறாக்கை, தையல் மெஷின், சைக்கிள் ஆகியன உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0778737257 (92927)

## தொடர்பு கொள்ளவும்
யாழ்ப்பாணத்திலும் பின்னர் இரணைமடு, கிளிநொச்சியிலும் வசித்துவந்த மயில்வாகனம் வசந்தராஜா என்பவரை அல்லது அவரது குடும்ப அங்கத்தவர்கள் எவரையாவது கனடாவில் வசிக்கும் கந்தையா ஸ்ரீந்தரன் என்பவர் தொடர்புகொள்ள விரும்புகின்றார். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம். 0014252562100.
(92955)

## Aradhana Audio Video Vision



புதிய,பழைய பக்தி திரைப்படங்கள் DVD
ஒரு DVDஇல் பல திரைப்படங்கள்
புதிய பழைய பக்தி DVD Mp3
புதிய பழைய பக்தி திரைப்படங்கள் VCD
புதிய பழைய பக்தி VCD CD Mp3
உங்கள் தெரிவுக்கு ஏராளம்
மொத்தவியாபாரிகளுக்கு DVD விலை 40/=
VCD MP3 DVD PHOTOS விற்பனைக்கு உண்டு
உங்கள் அவசரத்தேவைகளுக்கு உடன் அனுப்பிவைக்கப்படும்
11.1/17.SEA STREET COLOMBO.11
T.P 0112 544501

## பொதுசன மாதாந்த உதவிப் பணம் வழங்கல்
வவுனியா நலன்புரி முகாமில் இருந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருக்கும் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களின் 3 மாதத்துக்குரிய கொடுப்பனவுகள் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு சமூகசேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா அறிவித்துள்ளார். (50-204-100)

## ஏல விற்பனை
நீதிவான் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்ட உரிமை கோரப்படாத சான்றுப்பொருள்கள்நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

இந்த ஏல விற்பனையில் பொருள்களைக் கொள்வனவு செய்பவர்கள்கொடுப்பனவாகப் பணத்தை மட்டும் கொடுக்க வேண்டும் எனவும் காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.
(50-201)

## மறுப்பு அறிவித்தல்
07.12.2009 இல் உதயன் பத்திரிகையில் 4 ஆம் பக்கத்தில் யாழ்ப்பாணம், இல.262, பிரதான வீதியைச் சேர்ந்த சின்னையா கமலாதேவி என்பவரால் வெளியிடப்பட்ட அறிவித்தலில் விவரிக்கப்பட்ட ஆதனம் குறித்த சின்னையா கமலாதேவிக்குச் சொந்தமானதல்லவென்றும், அவ்வாதனம் 1980 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 24 ஆம் திகதி நொத்தாரிஸ் மு.க.இரத்தினசிங்கத்தால் 9022 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதிப்படி எனது தம்பி ஸ்ரீ கிருஷ்ணபாலன் ஸ்ரீ வேணுபாலனுக்குச் சொந்தமானதென அறியத்தருகின்றேன். எவரும் இவ் ஆதனத்தை வாங்கி ஏமாற்றப்பட வேண்டாம்.
(92060) சி.புஸ்பலீலா.

## விசேட பொதுச்சபைக் கூட்டம்
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் நாளை (12.12.2009) சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் சகல பொதுச்சபை உறுப்பினர்களையும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

செயலாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
(சி/563067)

## மரண அறிவித்தல்
### கந்தையா தேவராசா
(தேவன் மெக்கானிக்)



இல.10 பலாலி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தேவராசா 08.12.2009 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற துரைராசா மற்றும் தவமணி (கனடா), கமலாதேவி (கனடா), கருணராசா (சந்திரன்), காலஞ்சென்ற சந்திரராசா (சீனன்) மற்றும் சறோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தம்பித்துரை மற்றும் துரையம்மா (வவுனியா), கமலபாதம் (கனடா), துரைராசா (குஞ்சுக்கிளி- யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் கனடாவில் வசிக்கும் றஸ்கின், றகீம், றாதா, ராஜினி, சாந்தினி, வினோஜினி, நிவேதிகா, டினேஸ்கோபி (பிரான்ஸ்), ஜெயதீபன் (கட்டார்), ஜெயகோபி (மாணவன், 2010 உயர்தரம் கலைப்பிரிவு, யாழ்.மத்திய கல்லூரி), ரூபாஜினி ஆகியோரின் மாமனும் றெஜினகுமார் (பிரான்ஸ்), றெஜினகுமாரி ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2009) வெள்ளிக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் தகனக் கிரியைக்காக கொட்டடி, வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
சி.துரைராசா (மைத்துனர்),
சந்திரன் (சகோதரன்),
சறோ (சகோதரி).

இல.10, பலாலி வீதி,
இலுப்பையடிச் சந்தி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 0212229084
0775019068
(93075)

## சாவகச்சேரி நகரசபை
### 01.01.2010 முதல் 31.12.2010 வரை
### குத்தகைகளுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

1. கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 17.12.2009 நண்பகல் 12 மணி வரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 18.12.2009 முற்பகல்10 மணி வரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி : 18.12.2009 முற்பகல் 11 மணி

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இ.ல. | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த் கேள்வித் தொகை (வற் வரி தவிர) | கேள்விப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 1 | சாவகச்சேரி பொதுச்சந்தை, மீன் சந்தை, துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம், வாகனத் தரிப்பிடம் முதலானவை | 3,960,000,00 | 39,600,00 | 1000.00 |

குறிப்பு:-
- ★ கேள்விப் பத்திரக் கட்டணம், கேள்வித் தொகை, மாதாந்த குத்தகைப்பணம் என்பவற்றுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி VAT (12%) மேலதிகமாகச் செலுத்தப்பட வேண்டும்.
- ★ கேள்விப் பத்திரங்கள் கோருபவர்கள் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையைக் கொண்டுவர வேண்டும். நிழற்படப் பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- ★ மேலதிக விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- ★ போதிய காரணங்களால் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் விசேட ஆணையாளருக்கு உண்டு.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
09.12.2009
(சி/563061)

திருமதி ம.வசந்தகுமார்
விசேட ஆணையாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுப் பனம்தொழில் வல்லுநர் மாநாடு வீரசிங்கம் மண்டபத்தில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.11

யாழ்.மாவட்டப் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் ஏற்பாட்டில் வடமாகாணப் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினூடாக நடத்தப்படும் கூட்டுறவுப் பனம் தொழில் வல்லுநர் மாநாடு இன்று வெள்ளிக்கிழமை யாழ்.நகரில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இன்று காலை ஆரம்பமாகவுள்ளது. இந்த மாநாட்டில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களும் இந்த மாநாட்டில் பங்குபற்றவுள்ளனர்.

இந்த மாநாட்டைச் சிறப்பாக நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதேசமயம் - மாநாட்டில் ஏனைய சங்கங்களின் பிரதிநிதிகளும் பேராளர்களாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (04-224)

## ஆலயங்களுக்கு நிதி ஒதுக்கீடு

நவாலி, டிசெ.11

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இரண்டு இந்து ஆலயங்களுக்கு இந்து கலாசார அமைச்சினால் நான்கு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்துக்கு இரண்டு லட்சம் ரூபாவும் மானிப்பாய் சித்தி விநாயகர் ஆலயத்திற்கு இரண்டு லட்சம் ரூபாவும் திருத்த வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. (04-100)

## நெல் குற்றும் ஆலையை அமைக்க மானிப்பாய் கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கை

சண்டிலிப்பாய், டிசெ.11

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மக்களின் நலன் கருதியும், வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடனும் நெல் குற்றும் ஆலையொன்றை ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை சங்க நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

பல மாதங்களுக்கு முன் சங்க மண்டபத்தில் நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாகவே இந்த அரிசி ஆலை நிறுவப்படவுள்ளது.

இதேவேளை, சங்கத்திற்கு வருமானங்களை ஈட்டக் கூடிய பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வரும் சங்க நிர்வாகம், சமுர்த்தி முத்திரைக்கு வழங்கப்படும் அரிசியை குடாநாட்டிலுள்ள 24 சங்கங்களுக்கும் வழங்கிவருகிறது. அரசாங்க அதிபரின் அனுமதியுடன் இவ்வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்திவரும் மேற்படி சங்கம் சமுர்த்திப் பயனாளிகளுக்கான கோதுமை மாவையும் வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகிறது.

இதேவேளை - பல லட்சம் ரூபா நஷ்டத்தில் இயங்கிவந்த மேற்படி சங்கம் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுவரும் புதிய வேலைத் திட்டங்கள் மூலம் நஷ்டத்தின் தொகையை வெகுவாகக் குறைத்துக் கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (04-115)

## கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் விற்பனைப்பிரிவு யாழ்.மத்திய கல்லூரியில்

### கல்வியமைச்சர் திறந்து வைத்தார்

யாழ்ப்பாணம்.டிசெ.11

இலங்கைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் விற்பனைப் பிரிவு ஒன்று நேற்று முன்தினம் யாழ்.மத்திய கல்லூரி வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ள இலங்கைக் கல்வி வெளியீட்டுத் திணைக்கள முதலாவது விற்பனைப் பிரிவு இதுவாகும்.

இதை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் ஊடகத்துறை அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த விற்பனைப் பிரிவில் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் பயன்படக்கூடிய பெறுமதியான அரச வெளியீட்டுப் புத்தகங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அத்துடன் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட பழைய பாடநூல்களை மிகக்குறைவான விலைகளில் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த விற்பனை நிலையத்தில் ஆசிரியர்களும், மாணவர்களும் தமக்கான புத்தகங்களைக் கொள்வனவு செய்வதில் அதிகம் அக்கறை காட்டுவதையும் காணக் கூடியதாகவுள்ளது.

ஆசிரியர்கள், மாணவர்களின் ஆர்வத்திற்கு ஏற்ப கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் மேலும் பல வெளியீடுகளை தென்னிலங்கையில் இருந்து எடுத்துவரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (04-16)

## நிவாரணம் வழங்கப்படுகிறது

நவாலி, டிசெ.11

மானிப்பாய் ப.நோ.கூ. சங்க கிளைகளில் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களுக்குரிய இரு கட்ட நிவாரணம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. (04-100)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்தோருக்கு 20 ஆயிரம் ரூபா

### அகதிகளுக்கான ஐ.நா.நிறுவனம் வழங்கியது

நவாலீ,டிசெ.11

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள ஜே/129, ஜே/130, ஜே/131, ஜே/132, ஜே/134, ஜே/135 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா.நிறுவனம் 20ஆயிரம் ரூபா பெறுமதியான வவுச்சர்களை நேற்று முன்தினம் உயரப்புலம் கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கியுள்ளது.

இதில் பிரதேச செயலாளர் மரியதாசன் ஜெகூ, அகதிகளுக்கான ஐ.நா. நிறுவன அதிகாரிகள் உட்பட ஊழியர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் பதிவுகளை மேற்கொண்டனர்.

காலையிலிருந்து மாலை வரை இங்கு திரண்டிருந்த நூற்றுக் கணக்கான மக்கள் இவற்றைப் பெற்றுச் சென்றதையும் காண முடிந்தது. ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக் குடியேறியவர்களுக்கு வவுச்சர் வழங்கும் விவரம் பின்னர் அறிவிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04-100)

## காரைநகர் பிரதேசசபை உருவாக்கப்பட்டும் உரிய வசதிகள் இதுவரை கிடைக்கவில்லை

### பிரதேச சபைச் செயலாளர் கவலை

யாழ்ப்பாணம்,டிசெ.11

காரைநகர் பிரதேச சபை உருவாக்கப்பட்டு தற்போது நான்கு வருடங்கள் நிறைவடைகின்றபோதும் பிரதேச சபைக்குரிய வசதிகள் எதுவும் இன்னமும் செய்யப்படவில்லை. இதனால் மக்களுக்கு வினைத்திறனானதும் உயர்வானதுமாக உரிய சேவையை எம்மால் வழங்கவும் முடியாதுள்ளது அதே நேரம் மக்களாலும் முழுமையான சேவையைப் பெறமுடியாதுள்ளது என காரைநகர் பிரதேசசபை செயலாளர் இரா. யோகநாதன் கவலை வெளியிட்டுள்ளார்.

காரைநகர் கசூரினா கடற்கரை சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்வது தொடர்பான நினைவுக் கல்லைத் திரைநீக்கம் செய்து வைக்கும் நிகழ்வில் தலைமையுரை ஆற்றும்போதே பிரதேசசபை செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர் ஜீ. ஏ.சந்திரசிறி, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளர் விஜயலட்சுமி ரமேஷ், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரதேச சபைச் செயலாளர், - இந்த அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் யாழ்.மாவட்டத்தில் காரைநகர் பிரதேசசபை நிர்வாக ரீதியால் உருவாக்கப்பட்டது. ஆனாலும் இன்று வரை உரிய வசதிகள் செய்யப்படவில்லை. எமக்கு ஆளணிப்பற்றாக்குறை உள்ளது. தலைமைக் காரியாலயம் கட்டப்பட்டு அரைகுறையாக உள்ளது. இவற்றையெல்லாம் நிறைவு செய்வதற்கு ஆவண செய்யப்பட வேண்டும். இச்சுற்றுலா மையம் புனரமைப்புச் செய்யப்பட்டு, ஆளுநரும் அமைச்சரும் திறந்து வைப்பதில் பெருமையடைகின்றோம் - என்றார். (04-93)

## மோசமான நிலையில் கந்தர்மடம் பழம்வீதி; உடன் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

கந்தர்மடம் பழம்வீதி மிகவும் சேதமடைந்து மக்களது போக்குவரத்துக்கு பெரும் அசௌகரியமானதாக மாறியுள்ளது. இவ்வாறான நிலை நீடிக்கும் பட்சத்தில் இவ் வீதியூடான போக்குவரத்து தடைப்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இவ் வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுவதுடன் வீதிக் கற்களும் சிறு சிறு குவியல்களாக வெளிக்கிளம்பி ஆங்காங்கே காணப்படுகின்றன. தற்போது மழைக் காலமாகையால் வெள்ளமும், குழிகளுக்குள் நிரம்பி நிற்கின்றன. இதனால் சைக்கிள், மோட்டார் சைக்கிள் உட்பட அனைத்து வாகன ஓட்டுநர்களும் கடுமையான சிரமத்தை எதிர்கொள்வதுடன் விபத்துகள் ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர். இதேவேளை மழைநீர் தேங்கி நிற்கும் வேளையில் பாதசாரிகள் கூடப் பயணம் செய்ய முடியாத நிலையும் தோன்றியுள்ளது.

உரிய அதிகாரிகள் இந்த விடயத்தை உடன் கவனத்தில் எடுத்து வீதியைத் திருத்தம் செய்வது சௌகரியமான போக்குவரத்துக்கு ஆவண செய்யும்படி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (04-93)

## அஞ்சல் அடையாள அட்டையைப் பெறுவதற்காக பிரதம தபாலகத்துக்குப் படையெடுக்கும் மாணவர்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.11

யாழ்.பிரதம தபாலகத்தில் அஞ்சல் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து அதனைப் பெறுவதற்கு பாடசாலை மாணவர்கள் தினமும் பெரும் எண்ணிக்கையில் படையெடுத்து வருவதைக் காணமுடிகிறது.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களே இவ்வாறு அதிகளவில் அஞ்சல் அடையாள அட்டையைப் பெறுவதற்காக தபாலகத்திற்கு திரண்டு வருகின்றனர்.

இதே சமயம் - அஞ்சல் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் விண்ணப்பங்களை நேர காலத்துடனேயே தபாலகத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும் எனவும்,

இவ்வாறு விண்ணப்பிக்கும் மாணவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, துரித கதியில் அடையாள அட்டை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (04-224)







524ஆவது படையணி, 52ஆவது படையணி ஆகியவற்றின் ஏற்பாட்டில் ஜி.சீ.ஈ சாதாரதரப் பரீட்சைக்கு தோற்றும் வடமராட்சி மாணவர்களுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட 52ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரர் மகேஸ் சேனநாயக்கா, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட நெலலியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். தர்மதாஷ ஆகியோர் மாணவர்களுக்கு உபகரணங்களை வழங்குவதை முதல் இரண்டு படங்களில் காணலாம். மாணவிகளின் நடன நிகழ்வை மூன்றாவது படத்திலும் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவைப் பாட்டு என்பது யாது?


திருப்பாவையை ஸ்ரீஆண்டாளும், திருவெம்பாவையை ஸ்ரீமாணிக்கவாசகரும் இயற்றியுள்ளனர். திருப்பாவை ஸ்ரீவில்லிப்புத்தூரிலும், திருவெம்பாவை திருவண்ணாமலையிலும் இயற்றப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் சிலர் திருவெம்பாவை திருப்பெருந்துறை என்ற தலத்தில் தோன்றியதாகக் கூறு வதற்குச் சான்றுகள் இல்லை. திருவண்ணாமலையில் இயற்றப்பட்டதற்குச் சான்றாக திருவெம்பாவை 18ஆம் பாட்டு அமைந்துள்ளது.

**வேறு சில பாவைப்பாட்டுகள்:**

திருப்பாவை, திருவெம்பாவையைத் தவிர வேறு இருபாவைப் பாட்டுகள் இருந்ததாகத் தெரிகிறது. ஒன்று சமண முனிவர் ஒருவரால் இயற்றப்பட்ட பாவைப்பாட்டு அழிந்துபோய் தற்சமயம் கிடைக்கவில்லை. மற்றது திருதத்துவராய சுவாமிகளால் இயற்றப்பட்டது. இது முற்றிலும், மற்ற இருபாவைப் பாட்டினின்று மாறுபட்டு, முற்றிலும் வேதாந்த பரமாக உள்ளது என்பர்.

**ஆண்டாள், மணிவாசகர் காலம்:**

பொதுவாக ஆழ்வார்கள், நாயன்மார்களின் காலம் கி.பி 4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 11ஆம் நூற்றாண்டு வரை என்பது அறிஞர்களின் கருத்து. இவர்களின் காலம் பற்றி அபிப்பிராய பேதங்களும் உண்டு. ஆண்டாளின் காலம் கி.பி 8ஆம் நூற்றாண்டு என்பர். ஆண்டாளும், மணிவாசகரும் சமகாலத்தவர்கள் என்று கருதுவோரும் உண்டு. ஆனால் ஆண்டாளின் காலத்தை ஆராய்ச்சிப் பேரறிஞரும், மகாவித்துவானுமான காலஞ்சென்ற உயர்திரு.மு.இராகவய்யங்கார், வானசாஸ்திர ஆராய்ச்சியாளர்களின் உதவியுடனும், திருப்பாவை 13ஆம் பாசுரத்தில் 4ஆவது அடியில் வரும் ''வெள்ளியெழுந்து, வியாழன் உறங்கிற்று'' என்ற அதிவிசேஷமான சம்பவத்தை வைத்து ஆராய்ந்துள்ளார். இதன்படி சுக்ரன் (வெள்ளி) ஒருபுறம் உதயமாகுதலும், மறுபுறம் வியாழன் (குரு) அஸ்த்தமனம் (மறைவதும்) ஆயிற்று என்பதும் ஒரேசமயத்தில் நடந்த விசேஷ சம்பவமாகும். இந்த விசேஷ சம்பவத்தை வைத்து வானசாஸ்திர ஆராய்ச்சி நிபுணர்களின் உதவியுடன், எட்டாம் நூற்றாண்டில் எந்த எந்த ஆண்டுகளில் இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெற்று இருக்க வேண்டும் என்பதை ஆராய்ந்து, எட்டாம் நூற்றாண்டில் ஒரே தடவையாக கி.பி 731ஆம் வருடம் டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி அதிகாலை 3.30 முதல் 4 மணிக்குள் ஏற்பட்டிருக்கவேண்டும் என்று முடிவுகட்டியிருப்பதாக உயர்திரு மு.இராகவய்யங்கர் கருதுவதாக, மறைந்த பிரபல தமிழ் அறிஞரும், பிரபல எழுத்தாளருமான உயர்திரு.பி.ஸ்ரீஆசார்யா அவர்கள் எழுதியுள்ளார். அன்று மார்கழிப் பௌர்ணமி அன்றே திருப்பாவை தோன்றியிருக்க வேண்டும் என்பது முடிவு. ஆண்டாள் ஸ்ரீரங்கத்தில அழகிய மணவாளனுடன் கலந்தபோது ஆண்டாளுக்கு 15 வயது என்றும், எனவே ஸ்ரீஆண்டாள் கி.பி 716ஆம் ஆண்டு திருவாடிப் பூரத்தன்று தோன்றியிருக்க வேண்டும் என்பது ஆராய்ச்சியின் முடிவாகும் என்று ஆராய்ச்சிப் பேரறிஞரான ராகவய்யங்கார் கருதுவதாகவும் பி.ஸ்ரீ. எழுதியுள்ளார்.




**பாவைப்பாட்டு என்பது யாது?**

பாவை என்ற சொல்லுக்குப் பெண், கண்ணின் பாவை, பதுமை (பிரதிமை) சித்திரம் என்ற பல பொருள்களுண்டு. மிகப் பழங்காலத்தில் நாட்டின் மழையின்மையால், வறட்சி ஏற்பட்டால் 5 வயது முதல் 9 வயது வரை உள்ள சிறுமியர்கள், ஆற்றங்கரைகளில் அதிகாலை நீராடி ஆற்றங்கரைகளிலோ குளக்கரைகளிலோ மணலில் பதுமை பிடித்து, மழை பெய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு பாடும் பாட்டிற்குப் பாவைப்பாட்டு என்று பெயர். நாடு செழித்து வளர வேண்டும். மக்கள் வாழும் வகையாக நிறைய மழை பெய்ய வேண்டும். தவிர தங்களுக்கு நல்ல கணவன்மார்கள் அமையப்பெற்று, நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதே பாவைப்பாட்டின் முக்கிய கருத்தும் நோக்கமுமாகும். சங்ககால நூல்களான பரிபாடல், கலித்தொகை, நற்றிணை ஆகிய நூல்களிலும் பாவைப்பாடல்கள் பற்றியும், மார்கழி நீராடல் பற்றியும் சான்றுகள் உள்ளன. தவிர இரு பாவைப் பாடல்களும் ஏலோர் எம்பாவாய் என்று முடிவுறுவதாலும் இதற்கு பாவைப்பாட்டு என்று வரலாயிற்று.

நன்றி: ஆன்மீகம்

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் -வ.து

வெற்றுப் பொருள்களுக்கான கூறுவிலை கோரல்

| வெற்றுப் பொருள்கள் | | எண்ணிக்கை |
|---|---|---|
| மா | (பை) | 11450 |
| அரிசி | (பை) | 12700 |
| பருப்பு | (பை) | 2800 |
| சீனி | (பை) | 6675 |
| 25 கி.பை | சில்லறை | 140 |
| 25 கி.மா | (பை) | 700 |
| மா கழிவு | (பை) | 1700 |
| அரிசி கழிவு | (பை) | 3125 |
| சாக்கு மிளகாய் | | 235 |

மேற்படி வெற்றுப் பொருள்களுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலை விண்ணப்பங்கள் 2009.12.15 ஆம் திகதிக்கு முன்னதாக

பொது முகாமையாளர்

*யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ.து*

*127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்*

என்னும் முகவரிக்கு வெற்று பொருள்களுக்கான கூறுவிலை விண்ணப்பம் என கடித உறையில் எழுதப்பட்டு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ. து

(சீ/563079)

## உற்பத்திப் பொருள்கண்காட்சி

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இந்த ஆண்டுக்கான மகளிர் குழுக்களின் உற்பத்திப் பொருள் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நீர்வேலி தெற்கு மாதர் சங்க மண்டபத்தில் கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் எஸ்.பிறேமினி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன் ராஸ் கலந்து கொள்வார். (50-204)

## விகற்ப மருத்துவம்

எலும்பு அதிகளவு பாதிப்புற்ற வாதம், முட்டு, சிறுநீரகக்கல் நோய்களைக் குணமாக்கும் மருந்தியல் - தினமும் 8.30 A.M - 2 P.M

தொடர்பு :- உயரப்புலம் பிள்ளையார் கோயிலடி., தபால் பெட்டிலேன், ஆனைக்கோட்டை (93079)

## விற்பனையாகிறது

15.12.2009 இல் **வியாழ மாற்றம்**

V.A.சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்கி பலன் அறியுங்கள்

## தேவை

அனுபவமுள்ள கணனி இயக்குநர் உடன் தேவை. அனுபவம், திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். நேரில் உடன்வரவும்.

**பிள்ளையார் அச்சகம்**

676, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(சி/563076)

## சுவசெத

Suwasetha சுவசெத
லொத்தா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 339
சீட்டிழுப்பு திகதி: 09.12.2009

வெற்றி எழுத்து: K வெற்றி இலக்கங்கள்: 04 19 28 41 போனஸ் இலக்கம் 54

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிப் பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து ஒன்றுடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 9,679,885.50 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 3 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 50,000.00 | - |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000.00 | 90 |
| 4 பரிசு | 2 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 500.00 | 139 |
| 5 பரிசு | 2 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40.00 | 3583 |
| 6 பரிசு | 1 இலக்கத்துடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 40.00 | 2325 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20.00 | 45559 |

இந்த முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 1,307,000.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 9,922,015.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சீட்டிழுப்பாளின் முன்னோடி
தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி அவசர : 2470662, 2470663
தேவைக்கு: 2473360, 2433631 இணையத்தளம்:www nlb lk

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**Diploma Courses...** பதிவுகளை 14 12 2009 முன்னர் செய்யுங்கள்

*MS Office *Accounting*MAYA(Graphics 3D)
*Printing & ICDL Typing,Hardware*English
*Web Designing*Video Editing *AutoCAD
* VB.net,LINUX,O/L ICT,A/L GIT,Kids Program

**International Courses...**

MCSE Spl_Network Security, CIMA, IELTS
Cisco-CCNA, ICDL-AutoCAD,BCS
Sun Java programmer,Red Hat Engineer

**Degree Course-University of Colombo**

* Diploma in -IT,Higer Diploma-IT,* Bachelor-IT

Free:Hardware,ICDL AutoCAD,ICDL-International Computer Driving Licence,
50%Off:Java (Awarded by Sun)

324, பலாலி வீதி யாழ்ப்பாணம்
0772395895 Bus Route - 764
MCS Supported By UNDP/JRRP

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*எமது வித்தியாலய அதிபர்*

**திரு. சரவணமுத்து ரூபசிங்கம்**

அவர்கள் அதிபர் சேவை தரம்-3 (S.L.P.S -III)
*பதவியுயர்வு பெற்றதையிட்டு அவரை வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற்று பல்லாண்டு வாழ மனதார வாழ்த்துகின்றோம்.*

யா/நல்லூர் ஆனந்த வித்தியாலயம். (93069) ஆசிரியர்கள்.

## ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 490
சீட்டிழுப்பு திகதி: 09.12.2009

வெற்றி எழுத்து: X வெற்றி இலக்கங்கள்: 16 34 54 60

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ.18,582,745.20 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 11 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 229 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 467 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40/- | 10952 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6381 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 158031 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 25303 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 7,835,000.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தேவைக்கு: 2473360, 2433631
இணையத்தளம்:www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.18,724,062.00

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை

திருமதி கலாநாயகி சோதிதாசன்

அவர்களின் அன்புத் தாய்

**பொன்னுச்சாமி இராசம்மா**

அவர்கள் இறையடி சேர்ந்ததையிட்டு ஆழ்ந்த துயரம் அடைவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயம். (93070) ஆசிரியர் நலன்புரிக் கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது மகாவித்தியாலயத்தின் ஆசிரியை

செல்வி புஸ்பலாதேவி இராசையா

அவர்களின் அன்புத் தாய்

**திருமதி இராசையா பூமணி**

அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம், குருநகர், யாழ்ப்பாணம். (93080) *பாடசாலைச் சமூகம்.*

## மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின்

## கண்ணீர் அஞ்சலி



எங்கள் பாடசாலை அதிபர்

திருமதி செல்வமலர் சுந்தரேசன்

அவர்களின் அன்புச் சகோதரன்

**பரமலிங்கம் சித்திரவேலாயுதம்**

*( இளைப்பாறிய உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர், வவுனியா)*

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை.* (சி/663070) பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு

(ஓய்வு பெற்ற ஆசிரியர், கலட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை)



18/8, கொண்டலடி லேன், நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு 08.12.2009 அன்று காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

18/8, கொண்டலடி லேன், நல்லூர், யாழ்ப்பாணம். (93089) தகவல் : பரமேஸ்வரி திருநாவுக்கரசு (மனைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற மனித உரிமை தின நிகழ்வுகளில் கலந்துகொண்ட தமிழ்க் கட்சித் தலைவர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள் மற்றும் மக்கள் அமர்ந்திருப்பதையும் மேல் வரிசையிலும் -
நிகழ்வில் ஓர் அம்சமான பேரணியில் மதகுருமார் மற்றும் மனித உரிமையாளர், முஸ்லிம் பெண்கள் செல்வதை கீழ் வரிசையிலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே மனித உரிமை மீறல்களும் முடிவுக்கு வரும்

## யாழ்.நகரில் நேற்று மனோகணேசன் கருத்து

கொழும்பு,டிசெ.11.

இன்றைய அரசின் காலத்தில்தான் மனித உரிமை மீறல் சம்பவங்கள் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளன. ஆட்சி மாற்றம் ஒன்றின் மூலம்தான் மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டுவர முடியும்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற மனித உரிமைகள் தின நிகழ்வில் பேசுகையில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

நான் ஒன்றைப் பெரியோர்களிடத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அரசியல் என்றாலே அது உரிமைக்கான தேடல்தான்.

அரசியல் வாதிகளில், நாடாளுமன்ற உறுப்பினர்களில், அமைச்சர்களில், மக்கள் பிரதிநிதிகளில் தனிப்பட்ட முறைகளில் சில கொள்கை வேறுபாடுகள், சில குறைபாடுகள் இருக்கலாம் என்றாலும், அரசியல் அதிகாரம் திட்டவட்டமாக அவசியமானது. அதை எவரும் குறை கூறக்கூடாது.

அரசியல் இல்லை என்றால், ஜனநாயகம் இல்லை என்றால் நாம் கற்காலத்துக்குத்தான் செல்ல வேண்டும். அத்தகைய நோக்கம் எவருக்கும் இருக்காது என்று நினைக்கின்றேன். நான் ஒன்றை இங்கு ஞாபகப்படுத்த வேண்டும். கடந்த 3, 4 வருடங்களாக நாடு முழுவதும் ஏராளமான தமிழர்கள் காணாமல் போய், கடத்தப்பட்டு இருக்கிறார்கள், சட்டவிரோதமாக படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

எனது மாவட்டமான கொழும்பிலும், புறநகர்ப் பகுதியிலும் ஏராளமான தமிழர்கள் கடத்தப்பட்டிருக்கிறார்கள். காணாமல் போயுள்ளார்கள். அவர்களைப் பற்றிய தகவல்கள் எமது மக்கள் கண்காணிப்புக் குழுவிடம் இருக்கின்றன.

அரசியல் ரீதியான கடத்தல்கள், அரசியல் ரீதியான படுகொலைகளை நாம் சந்திக்கும் போது அவற்றிற்கு அரசியல் ரீதியாக முகம் கொடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

நான் ஒரு மனித உரிமைப் போராளி அல்ல. ஆனால் மனித உரிமைகளுக்கு சார்பான போராட்டங்கள், மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் கடத்தல்கள், காணாமல் போதல்கள் என்பன எம்முன் வந்தபோது, நாம் கைகட்டிப் பார்த்திருக்கவில்லை. மாறாக எமது மக்களின் உரிமைகளுக்காக நாம் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தோம். தற்போதும் போராடி வருகின்றோம்.

எமது குரல் சர்வதேச ரீதியாக இன்றும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றது.

ஐ.நா. சபையை எடுத்துக் கொண்டால் மனித உரிமை சாசனத்தில் பல்வேறு உரிமைகள் வரிசையாக அடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்திலும் உயிர் வாழும் உரிமையே முக்கியம் வாய்ந்தது.

வடக்குக் கிழக்கிலே வாழ்கின்ற மக்கள் குறிப்பாகத் தமிழர்கள் கடந்த மூன்று, நான்கு வருடங்களாக உயிர் வாழும் உரிமை பறிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருவதை எவரும் மறுக்க முடியாது.

இந்த நாட்டிலே அரச சார்பான பயங்கரவாதமும் அரச சார்பற்ற பயங்கரவாதமும் இருக்கின்றன என்பதை எவருமே மறுக்க முடியாது. இந்தப் பயங்கரவாதத்திற்கு மத்தியில் சிக்கித் தவிப்பவர்கள் மக்களே.

தற்போது சிறைச்சாலைகளில் உள்ள தமிழ்க் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இந்த சாத்வீக உண்ணாவிரதப் போராட்டங்கள் ஏற்கனவே பல தடவைகள் நடைபெற்றுள்ளன.

• இந்த நாட்டிலே போர் முடிந்துவிட்டது,அமைதி திரும்பிவிட்டது, வசந்தம் வீசுகிறதென்றால் ஏன் இந்தச் சிறைக் கைதிகளுக்கும் கிடைக்கக்கூடாது? அவர்களின் வாழ்கையிலும் ஏன் வசந்தம் வீசக் கூடாது?

நாம் இங்கு ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். இந்த இளைஞர்களுக்கு, யுவதிகளுக்கு பொது மன்னிப்பு கொடுங்கள்.

எனக்குத் தெரியும். தெற்கிலே பல சட்ட விரோதமான முகாம்கள் இருக்கின்றன. அங்கே பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு நாம் கோர வேண்டும்.

நாட்டில் அனைவரும் சுமுகமான முறையில் வாழ வேண்டும் என்று இந்த மனித உரிமைகள் தினத்தில் வேண்டுகோள் விடுக்கின்றேன் - என்றார். (ஒ-16)

# நாடாளுமன்ற ஆட்சியைக் கண்காணிக்கும் அதிகாரத்தைத் தம் வசம் வைத்திருப்பாராம்

## தமது திட்டத்தை வெளிப்படுத்துகின்றார் பொன்சேகா

கொழும்பு, டிசெ. 11

ஜெனரல் சரத் பொன்சேகா தாம் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை இல்லாதொழித்து, நாடாளுமன்றத்திற்கு முழு அதிகாரங்களையும் வழங்கினாலும் நாடாளுமன்றம் உரிய முறையில் நாட்டை ஆட்சி செய்கிறதா என்பதைத் தாம் உன்னிப்பாகக் கண்காணித்துக்கொண்டிருப்பார் என்று தெரிவித்துள்ளார்.

இதற்காக சில அதிகாரங்களைத் தாம் தன்னிடத்தில் வைத்துக் கொள்வார் என்றும் பொன்சேகா மேலும் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே பொன்சேகா இவ்வாறு கூறினார். அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டில் இப்போது ஜனநாயகம் இல்லை. முழுமையான ஜனநாயகத்தை இந்நாட்டில் நிலைநாட்டுவதற்காகவே நான் இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறேன்.

ஊடகங்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் போன்றவை அடக்கி ஒடுக்கப்படுகின்றன. நான் இத் தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகும் பட்சத்தில் இவ்வாறான அடக்குமுறைகளை இல்லாது செய்வேன்.

அத்தோடு கடந்த காலங்களில்அரசியல் பழிவாங்கல்களால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் தகுந்த நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பேன்.

நான் வெற்றிபெற்று ஜனாதிபதியானதும் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து நாடாளுமன்றிற்கு முழு அதிகாரத்தையும் பெற்றுக் கொடுப்பேன். இருப்பினும், நாடாளுமன்றம் உரிய முறையில் நாட்டை நிர்வகிக்கின்றதா என்று நான் மிகவும் உன்னிப்பாகக் கண்காணித்துக் கொண்டிருப்பேன்.

இதற்காக சில அதிகாரங்களை நான் என்னுடன் வைத்துக் கொள்வேன். - என்றார்.

# வாசனா சம்பத சீட்டுழுப்பு முடிவுகள்

கொழும்பு, டிசெ.11

தேசிய லொத்தர் சபையின் '' வாசனா சம்பத'' 797 ஆம் இலக்க நேற்றைய சீட்டுழுப்பில் ''L'' என்ற ஆங்கில எழுத்தும் 24, 44, 45, 68 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இலக்கம் 19 போனஸ் இலக்கமாகத் தெரிவாகியது.

அதன் பிரகாரம் நான்கு இலக்கங்க ளையும் சரியாகக் குறிப்பிட்ட ஒருவருக்கு இரண்டு மில்லியன் ரூபா பரிசாகக் கிடைக்கும்.

போனஸ் இலக்கத்தையும் மற்றும் மூன்று இலக்கங்களையும் சரியாக எழுதிய 4 பேருக்கு ஒரு லட்சம் வீதம் பரிசுகள் வழங்கப்படும்.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாக எழுதிய 309 பேருக்கு தலா இரண்டாயிரம் ரூபா வீதம் பரிசுகள் வழங்கப்படும்.

இரண்டு இலக்கங்களை மட்டும் சரியாக எழுதிய 15,093 பேருக்குத் தலா நூறு ரூபா வழங்கப்படும்.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாக எழுதிய 2 ,11,123 பேருக்குத் தலா இருபது ரூபா வீதம் பரிசில்கள் கிடைக்கும். (அ)

# சுவரொட்டிகளை ஒட்டிய ஜே.வி.பியினர் மீது தாக்குதல்

கொழும்பு, டிசெ. 11

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சரத் பொன்சேகாவின் சுவரொட்டிகளை நேற்றுமுன்தினம் ஒட்டிக் கொண்டிருந்த ஜே.வி.பி. ஆதரவாளர்கள் மீது கம்பஹாவிலும் கொழும்பிலும் நான்கு வெவ்வேறு இடங்களில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என ஜே.வி.பியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வெலிவேரியப் பகுதியில் வெள்ளை வானில் வந்தவர்களால் ஜே.வி.பி. ஆதரவாளர்கள் தாக்கப்பட்டனர். அதில் இருவர் காயமடைந்தனர்.

அத்தனகல்ல பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் மேலும் இரு ஆதரவாளர்கள் காயமடைந்தனர்.

மினுவாங்கொடைப் பகுதியில் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த ஆதரவாளர் குழுவும் தாக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அதேசமயம், மருதானையிலும் சுவரொட்டிகளை ஒட்டிய ஜே.வி.பியின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையின்

அதிபர் ஆசிரியர்



திரு.க.கண்ணன்
[B.Com (Hons), PGDE (OUSL)]
S.L.P.S - 2 II

திரு.சி.சிவகணேசன்
[ Sp.Trd in Sci, B.A. PGDE]
S.L.P.S - 3

ஆகிய இருவரும் இலங்கை அதிபர் சேவைத் தரங்களிற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு மகிழ்வுடன் பாராட்டுவதோடு, எதிர்காலங்களிலும் பல பதவி உயர்வுகளினைப் பெற்று, உன்னதமான சேவையாற்றி சிறப்புடன் வாழ அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருளினை வேண்டுகின்றோம்.

பாடசாலைச் சமூகம் (சி/563057)
யா/நாகர்கோவில் ம.வி, நாகர்கோவில்.

## அந்தியேட்டி அழைப்பு

தோற்றம்
02 ★ 12 ★ 1947



மறைவு
12 ★ 11 ★ 2009

திதி: ஏகாதசி

### அமரர் கிட்டிணபிள்ளை தங்கவேலாயுதம்
(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

அவர்களின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் நாளை (12.12.2009) சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பாக இதனை ஏற்றுக்கொள்ளவும்.

நவிண்டில் வீதி,
பொலிகண்டி. (90990)

இங்ஙனம்:
குடும்பத்தினர்.

## கனரக வாகனங்களின் வருகையினால் அசௌகரியம்; யாழ். நகரில் அடிக்கடி சேதமுறும் தொலைபேசிக் கம்பிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.11

ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்துக்குப் பொருள்களை ஏற்றிவரும் கனரக வாகனங்கள் தொலைபேசி இணைப்பு கம்பிகளை அறுத்துச் சேதப்படுத்துவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ். நகரில் நாவலர் வீதியில் உள்ள தொலைபேசி இணைப்பு கம்பிகள் இவ்வாறு கனரக வாகனங்களினால் அறுக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளதால் பலரின் தொலைபேசி இணைப்புக்கள் செயலிழந்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

இவை உடனடியாகச் சீர்செய்யப்பட்டு துண்டிக்கப்பட்ட தொலைபேசி இணைப்புகளை மீள விநியோகிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதேசமயம் கனரக வாகனங்கள் தொலைபேசி இணைப்பு வயர்களை முட்டி மோதி சேதப்படுத்தாத வகையில் அவற்றை உயரமாக அமைப்பதற்கு ரெலிக்கொம் நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (04-224)

## விற்பனைக்கு

55 நாள்கள் நிரம்பிய ஊசி போடப்பட்ட (ஒரு ஆணும் இரண்டு பெண் குட்டிகளும்) 3 பொம்மேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
இல. 41, சம்பியன் லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

## காணி தேவை

கொடிகாமம் வரணிப்பகுதியில்
5 ஏக்கர் காணி உடன் தேவை.
குறிப்பிட்ட காணி கொடிகாமத்தில்
ஏ - 9 வீதியின் முகப்பிலும்,
வரணியில் பருத்தித்துறை
கொடிகாமம் வீதியின் முகப்பிலும்
உள்ளதாக இருத்தல் வேண்டும்.

தொடர்பு
0215677602 (இ/563093)

## பரிகாரக் கற்பித்தல் செயலமர்வு ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 11

கணித, விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான பரிகாரக் கற்பித்தல் செயலமர்வு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

முன்பு நடைபெற்ற பரிகாரக் கற்பித்தல் செயலமர்வில் கலந்து கொள்ளாத கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (50)

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
12 ★ 07 ★ 1939



விண்ணில்
11 ★ 12 ★ 2003

### அலோசியஸ் ஞானசையம்மா

அன்பாக எம்மை அரவணைத்த அம்மாவே!
அமைதியான சிந்தனையுடனும் பொங்கிடும் நினைவுடனும்
அன்போடு எம்மை வளர்த்த தாயே
ஆலமரமாய் நாம் வளர்ந்து நிற்கையிலே
இமைப்பொழுதில் எம்மை விட்டுப் பிரிந்தீரே!
காலங்கள் மாறலாம் கோலங்கள் மறையலாம்
கடைசிவரை நிலைத்திருக்கும் உங்கள் நினைவுகள்

185/9, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம். (93103) மக்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
06 ★ 04 ★ 1936



உதிர்வு
11 ★ 11 ★ 2009

### திருமதி தருமலிங்கம் பொன்மலர்

கடந்த 11.11.2009 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பவிளக்கு திருமதி பொன்மலர் தருமலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று (11.12.2009) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். மேலும் எமது தாயார் நோயுற்றிருந்தபோது உதவிகள் புரிந்த அனைவருக்கும், அன்னாரின் மரணச் செய்தி அறிந்து எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலமும், நேரிலும் வந்து அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஞானவைரவர் கோயில் வீதி, (93078)
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். குடும்பத்தினர்.

## இதோ மோட்டார் சைக்கிளுக்கான வெற்றியாளர்கள் !



சத்குணநாதம் ரூபநந்தன்
இல. 11/1,
ஏரோன்ஸ் ஒழுங்கை,
தாண்டவன்வேலி,
மட்டக்களப்பு.

பிரின்ஸ் ரொஷானி குணநாயகம்
இல. 69/28,
பொகுன வீதி, ஹெந்தல,
வத்தளை.

வித்யா இராஜேஸ்வரன்
இல. 44,
பாடும் மீன் வீதி,
மட்டக்களப்பு.

NDB வங்கியின் யாழ் மற்றும் மட்டக்களப்பு கிளை திறப்பின் போதான குலுக்கலில் புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்களை வென்ற உங்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.

NDB வங்கி

## இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
### பெருந்தெருக்கள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

வீதி திருத்த வேலைக்கான கற்கள் வழங்குதல்

### யாழ். மாவட்டத்தில் வீதித்திருத்த வேலைகளுக்கான கற்கள் வழங்குவதற்கான கேள்வி கோரல்

1. பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) யாழ்ப்பாணம் வீதி திருத்த வேலைக்கான கற்கள் வழங்குவதற்கான மூடிய கேள்விப் பத்திரங்களை பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம், கேள்விச் சபையின் சார்பாக பெற்றுக்கொள்வார். கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 21.12.2009 அன்று முற்பகல் 10 மணியுடன் முடிவடையும். கேள்விப் பத்திரங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் யாழ்ப்பாண காரியாலயத்தில் கிடைக்கும் கேள்விப் பத்திரப் படிவங்களில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்பத்திர ஆவணங்கள் 11.12.2009 தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

| இல. | கற்களின் அளவு (SIZE) | தொகை (QTY) |
|---|---|---|
| 1. | 50 mm | 250 m 3 |
| 2. | 19 mm | 75 m 3 |
| 3. | 12.5 mm | 200 m 3 |
| 4. | 6.3 mm | 200 m 3 |

2. மூடி ஒட்டப்பட்ட கேள்விப் பத்திர ஆவணங்கள் பிரதம பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல. 761, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் பதிவுத் தாபாலிலோ அல்லது நேரடியாகவோ முடிவுறும் நேரத்திற்கு முன்பாக சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
3. கிடைக்கப்பெற்ற கேள்விப் பத்திர ஆவணங்கள் குறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை. இல. 761, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும். கேள்விப் பத்திரம் திறக்கப்படும் குறித்த நேரத்தில் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

எந்திரி வி. சுதாகர்,
பிரதம பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2968

(சி/563082)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்களின் அங்கத்தவர்களுக்கான வழிகாட்டல் பயிற்சிப் பட்டறை நிகழ்வு நேற்று வியாழக்கிழமை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்நிகழ்வில், வன்னி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் நிமல்லியூகே, யாழ்ப்பாணம் சிரேஷ்ட உதவிப் பொலிஸ்மா அதிபர் தயான் பண்டார, காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் மகேஸ்பெரேரா உள்ளிட்ட அதிகாரிகள் மங்கள வாத்தியம் சகிதம் நிகழ்வு மண்டபத்துக்கு அழைத்து வரப்படுவதனையும், மேடையில் அமர்ந்திருப்பதையும் முதலிரண்டு படங்களிலும் , வன்னி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் நிமல்லியூகே விளக்க உரை வழங்குவதனையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

*படங்கள் (உமா - நேசன்)*

# மஹிந்தவின் வெற்றியைத் தடுக்க கொலை முயற்சிகள் நடக்கலாம்!

## எச்சரிக்கின்றார் அமைச்சர் சம்பிக்க

கொழும்பு, டிசெ. 11

இந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியைத் தடுப்பதற்காக 1993 இல் ஆர்.பிரேமதாஸா, லலித் அத்துலத்முதலி ஆகியோர் கொல்லப்பட்டமை போன்ற கொலைச் சம்பவங்கள் இடம்பெற அதிக வாய்ப்புகள் உள்ளன என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றி எப்போதோ உறுதியாகிவிட்டது. 50 வீதத்திற்கும் அதிகமான ஆதரவு மஹிந்த ராஜபக்ஷவிக்கே உண்டு.

மஹிந்தவின் வெற்றியை எவராலும் தடுக்க முடியாது. அவ்வாறு தடுப்பதற்காக இந்நாட்டில் ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்படுத்தப்படலாம். 1993 இல் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸா, லலித் அத்துலத்முதலி ஆகியோர் கொல்லப்பட்டனர். அவ்வாறான சம்பவங்கள் இத் தேர்தல் காலத்தில் இடம்பெற வாய்ப்புண்டு.

எதைச் செய்தாவது இத் தேர்தலில் மஹிந்தவின் வெற்றியைத் தடுக்க சிலர் நிச்சயம் முயற்சி செய்வர். எதைச் செய்தாலும் மஹிந்தவின் வெற்றியை எவராலும் தடுக்க முடியாது - என்றார்.

# முன்னாள் சிறுவர் போராளிகள் 432 பேர் இன்று பரீட்சைக்கு

## வவுனியாவில் விசேடமாக 3 பரீட்சை நிலையங்கள்

கொழும்பு, டிசெ. 11

இராணுவத்திடம் சரணடைந்த சிறுவர் போராளிகள் 432 பேர் இன்று நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

இவர்களுக்காக மூன்று பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணி மனை தெரிவித்துள்ளது.

இதேவேளை, செட்டிகுளம் நிவாரணக் கிராமத்திலுள்ள இடம்பெயர்ந்தவர்களுக்காக 46 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையங்களில் 4 ஆயிரத்து 432 பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 736 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இதேவேளை, கிளிநொச்சியிலும், முல்லைத்தீவிலும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை நடைபெறும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் முழங்காவில் ஜெயபுர மகாவித்தியாலயத்திலும், கிளிநொச்சி இந்துக் கல்லூரியிலும் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. இங்கு 250 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 380 மாணவர்கள் இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். இவர்களுக்கென மல்லாவி மத்திய மகா வித்தியாலயம், பாலி நகர் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-சி)

## கோப்பாயில் நாளை வருடாந்த ஒன்றுகூடல்

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை முன்னெடுக்கும் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். க.தா. சிவபாதம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## தமிழர் ஆசிரியர் சங்க நிர்வாகக் குழுக் கூட்டம்

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளையின் நிர்வாகக் குழுவின் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் கலந்துகொள்ளும் இக்கூட்டத்தில் கிளைகளின் தலைவர்கள், செயலாளர்கள், மாவட்ட உறுப்பினர்கள், தாய்ச் சங்க உறுப்பினர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-1)

# தருத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் ஆகிய சிறைச்சாலைகளில் தொடர்ச்சியாக உண்ணாவிரதம் இருந்து வருகின்ற தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டத்திற்கு ஆதரவாக இந்தப் பேரணியை அரசியல் கைதிகளின் உறவினர்கள் ஒழுங்கு செய்திருந்தனர்.

மனித உரிமைகள் ஆணையகத்தின் வவுனியா பிராந்திய அலுவலகத்தின் எதிரே கூடிய இவர்கள், சுலோக அட்டைகளைத் தாங்கியிருந்தனர். தமது கோரிக்கையை வெளிப்படுத்தும் மகஜர் ஒன்றை மனித உரிமைகள் ஆணையக அதிகாரிகளிடம் அவர்கள் கையளித்தனர்.

அதன் பின்னர் வவுனியா ரயில் நிலைய வீதி வழியாக குருமண்காட்டுச் சந்தியைச் சென்றடைந்து அங்கிருந்து மன்னார் வீதி வழியாக வவுனியா அரச செயலகத்திற்குச் சென்று பேரணி முடிவடைந்தது. இந்தப் பேரணியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாகச் செயலாளர் வி.சகாதேவனும் கலந்துகொண்டார். விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்குப் பொது மன் னிப்பு வழங்கி விடுதலை செய்யவேண்டும் என அரசைக் கோரும் மகஜர் ஒன்று வவுனியா அரச செயலக அதிகாரிகளிடம் கையளிக் கப் பட்டது.

# ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ, செயலாளர் லலித் வீரதுங்க, இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகிய மூவர் அடங்கிய குழு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவை நேற்றுப் புதுடில்லியில் சந்தித்தது.

யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் குறித்து இக்குழு அங்கு ஆராய்ந்தது எனக் கூறப்பட்டது. இந்தச் சந்திப்பு சிறந்த முறையிலும், சுமுகமான சூழலிலும் இடம்பெற்றதாக பஸில் ராஜபக்ஷ பின்னர் தெரிவித்தார்.

**ஜனவரி இறுதிக்குள் மீள்குடியமர்வு**

யுத்தம் காரணமாக வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த சகலரும் ஜனவரி மாத இறுதிக்குள் அவர்களது சொந்த இடங்க ளில் மீள் குடியமர்த்தப்பட்டு விடுவர் என இலங்கை உயர்மட்டக் குழு இந்தியாவுக்கு உறுதிமொழி வழங்கியுள்ளது.

இலங்கையின் வட பகுதியில் முகாம்களில் வாழும் மக்களுக்கு அனைத்து ஜனநாயக உரிமைகளும் வழங்கப்பட்டிருப் பதாகவும் அவர் இச்சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.

தேர்தல்களுக்கு முன்னதாக இந்த மக்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்கப்படுமா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு, அவர்கள் இம்முறை வாக்களிக்கப் போகின்றனர் என் பஸில் ராஜபக்ஷ பதிலளித்தார்.

அரசியல் தீர்வு குறித்த கேள்விக்குப் பதிலளித்த பஸில் ராஜபக்ஷ, ''இது குறித்து எமக்கு உறுதியான புரிந்துணர்வுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் உடனடியாக அரசியல் தீர்வை முன்வைக்கும் பணியை முன்னெடுப்போம் என உறுதியளிக்கிறோம்.'' - என்றார்.

ஜனாதிபதித் தேர்தலிற்குப் பின்னர் அரசியல் தீர்விற்கு அவசியமான சகல அரசமைப்பு மாற்றங்களையும் மேற்கொள் வோம் - என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய அரசினது அனைத்து நலன்கள் மற்றும் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்களில் அந்த நாட்டுடன் இலங்கை நிற்கும் - எனக் குறிப்பிட்ட பஸில் ராஜபக்ஷ, எனினும் இந்திய வெளிவிவகார அமைச்சருடனான பேச்சின்போது பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயங்கள் குறித்து அவர் கேள்வி எழுப்பவில்லை என்று தெரிவித்தார். (அ-சி)

# வலி.வடக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மனித உரிமைகள் தின நிகழ்வுகளின் போது பொது மக்களின் கேள்விகளுக்கு தமிழ்த்தலைவர்கள் பதில் அளித்தனர்.

ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகிய இருவரும் பொதுமக்களால் எழுதப்பட்ட கேள்விகளுக்குப் பதில் அளித்தனர்.

13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் வலி. வடக்கு மீள்குடியமர்வு ஆகிய விடயங்கள் தொடர்பாக எழுதப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா -

13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் தீர்வு ஒன்றைக் கொண்டுவர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. படிப்படியாக தீர்வை எட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்றார்.

மாவை சேனாதிராசா பதில் அளிக்க எழுந்தபோது, வலி.வடக்குத் தொடர்பான கேள்வி எழுப்பப்பட்டது.

வலி. வடக்கு மீள்குடியமர்வு ஜனவரிக்கு முன் நிறைவேற்றப்படாது விட்டால் என்ன செய்யப் போகிறீர்கள்? என்று அங்கு கேள்வி கேட்கப்பட்டது.

அதற்கு பதில் அளித்த மாவை சேனாதிராசா -

போர் முடிவடைந்துவிட்டதால் பாதுகாப்பு வலயங்கள் தேவையில்லை. இதனை ஜனாதிபதியிடமும் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரிடமும் தெரிவித்துள்ளோம்.

மேலும் இராணுவ முகாம்களை அமைத்து இராணுவ மயமாக்கலை விரிவுபடுத்தாமல், மக்களின் மீள்குடியமர்வைத் துரிதப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

வலி.வடக்கில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றி மக்களின் மீள்குடியமர்வைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதே எமது முக்கிய கோரிக்கை. ஜனவரியில் அந்தக் கோரிக்கை நிறை வேற்றப்படாவிட்டால் ஜனநாயக வழியில் போராட்டங்களை முன்னெடுப்போம் - என்றார்.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக 13 ஆவது சரத்துப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதால் பயன் ஏதுமில்லை. ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையுடன் வாழக்கூடிய வகையில் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அரசமைப்புத் திருத்தம் வேண்டும் என்று கூறினார். (ஒ-1-16)

# தமிழ் வேட்பாளரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்ட கூட்டம் ஒன்று கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

எதிர்வரும் 17 ஆம் திகதி தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யும் தினம் என்பதால் அதற்கு முன்னர், பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது பற்றிய யோசனை குறித்துத் தீர்மானிக்க வேண்டும் எனக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்விடயத்தின் சாதக, பாதகங்களை ஆராய்ந்த கூட்டமைப்பு எம்.பிக்கள் பொதுத் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் திட்டத்தைக் கைவிடுவது என முடிவு செய்தனர்.

எனினும், இந்தத் தேர்தல் தொடர்பில் எவ்வாறு நடந்துகொள்வது என்பது குறித்துத் தமிழ் மக்களுக்கு என்ன ஆலோசனை வழங்குவது என்பதைப் பின்னர் கூடி முடிவுசெய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

இரு பிரதான வேட்பாளர்கள் சார்பிலும் முன்வைக்கப்படும் கருத்துகள், உறுதிமொழிகள் போன்றவற்றை உள்வாங்கி, அதன் பின்னர் அவர்களுள் ஒருவரை ஆதரிப்பது குறித்தோ அல்லது தேர்தலைப் பகிஷ்கரிப்பது குறித்தோ அல்லது பிரதான் வேட்பாளர்கள் இருவர் தவிர்ந்த பிறிதொருவரை ஆதரிப்பது குறித்தோ முடிவு செய்யலாம் என்று கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், ஆஸ்திரியாவின் வியன்னா நகரில் நடைபெறவிருக்கும் ஒரு கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்காகத் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி. மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. போன்றோர் வார இறுதியில் அங்கு செல்லவிருப்பதால் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு - வேட்புமனு தாக்கலாகும் தினத்துக்கு - முன்னர் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் அடுத்த கூட்டம் நடைபெறுவதற்கு வாய்ப்புகள் இல்லை என்று கூறப்படுகின்றது.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களுள் ஒருவரை ஆதரிக்கும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடைசிநேரத்தில் தமிழ் மக்களிடம் கோரிக்கை விடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுராதபுரம் சிறைக் கைதிகளின் உண்ணாவிரதப்போர் தொடர்கிறது

கொழும்பு, டிச. 11

தம்மை விடுதலை செய்யுமாறு அல்லது தம் மீது வழக்குத் தொடுக்குமாறு கோரி அனுராதபுரம் சிறைச்சாலைக் கைதிகள் சிலர் ஆரம்பித்த உண்ணாவிரதம் நேற்றும் தொடர்ந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது.

26 கைதிகள் இந்த உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் ஆணையாளர் கெனத் பெர்னாண்டோ கூறினார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம், மற்றும் அவசரகாலச் சட்டம் என்பவற்றின்கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளில் சிலரே இந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளனர்.

# தேர்தல் சட்டத்தை மீறும் கோத்தபாய மீது ஆணையர் எடுக்கும் நடவடிக்கை என்ன?

## அவதானிப்பதாகக் கூறுகிறார் மங்கள

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படுகிறார். இதுதொடர்பில் தேர்தல் ஆணையாளர் எவ்வாறான நடவடிக்கையை எடுக்கப் போகின்றார் - என்று மங்கள சமரவீர எம்.பி. கேள்வியெழுப்பியுள்ளார்.

இதேநேரம், ஜனவரி 26ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது சொத்து விவரங்களை வெளிப்படுத்த வேண்டும் - என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஜனாதிபதி மற்றும் அவரது குடும்பத்தாரின் சொத்து விவரங்களை முடிந்தால் ஜனவரி 26 ஆம் திகதிக்கு முன்னதாக வெளியிடுமாறு ஜெனரல் சரத் பொன்சேகாவின் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

தேர்தல்களுக்கு முன்னதாக ஜெனரல் சரத் பொன்சேகா தனது சொத்து விவரங்களை வெளியிட உள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் என்ற ரீதியில் ஜனாதிபதியும் தனது சொத்து விவரங்களை வெளியிட வேண்டும். தனியாக ஜனாதிபதி மட்டும் தனது சொத்து விவரங்களை வெளியிடக்கூடாது. அவரது குடும்பத்தாரும் சொத்து விவரங்களை வெளியிட வேண்டும். - என்றார். (அ-சி)

## ரணில் நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கந்தசுவாமி ஆலயத்தில் விசேட பூசைகளின் கலந்துகொள்ளும் ரணில், பின்னர் யாழ். நாகவிகாரையில் விசேட வழிபாட்டில் பங்குகொள்வார். அதைத் தொடர்ந்து யாழ். ஆயர் இல்லத்தில் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகத்துடன் கலந்துரையாடவுள்ளார்.

நண்பகல் 12 மணிக்கு யாழ்.பல்கலைகழகத்துக்குச் செல்லும் ரணில் அங்கு பரமேஸ்வரன் ஆலயத்தில் வழிபாட்டில் பங்குபற்றுவதுடன் தொடர்ந்து பல்கலைக்கழக முக்கியஸ்தர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடுவார்.

பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். வணிகர் கழகப் பிரதிநிதிகளைச் சந்தித்த பின்னர் மாலை 5 மணிக்கு யாழ்பாடி விடுதியில் செய்தியாளர்கள் மாநாட்டை நடத்தவுள்ளார்.

அதைத் தொடர்ந்து மாலை 6 மணிக்கு நல்லை ஆதீனத்துக்குஅவர்செல்வார். மறுநாள் பொது மக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்திக்கவும் ஏற்பாடாகியுள்ளது. (ஒ-1)

# லசந்த விக்கிரமதுங்க கொலை விசாரணை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம்

கொழும்பு, டிச. 11

'த சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என மிரிஹான பொலிஸார் நீதிமன்றத்தில் அறிவித்தனர்.

நேற்று இந்த வழக்கு கல்கிஸை பிரதம நீதிவான் ஹர்ஷ சேதுங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே பொலிஸார் இதனைத் தெரிவித்தனர்.

இதனையடுத்து இம்மாதம் 24 ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டபோது அவரின் கையடக்கத் தொலைபேசியைத் திருடினார் என்ற சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட நபரும் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இச் சந்தேக நபரையும் இம்மாதம் 24 ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

2009 ஜனவ்ரி 8 ஆம் திகதியன்று, லசந்த விக்கிரமதுங்க அத்திடிய பகுதியில் வைத்து படுகொலை செய்யப்பட்டார் என்பது தெரிந்ததே. (அ-சி)

## காற்றுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடிமின்னலால் ஏற்படக்கூடிய சேதங்களைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்ளுமாறு மக்கள் கேட்கப்பட்டுள்ளனர். (அ-1)

## மனோவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமைகள் இல்லம் மனித உரிமைகள் தினத்தையொட்டி ஏற்பாடு செய்த விசேட நிகழ்வுகள் நேற்று வீரசிங்கம் மண் டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொள்வதற்காக மனோகணேசனும் வந்திருந்தார். இதன்போது வீரசிங்கம் மண்டப முன்றலில் அவரைச் சூழ்ந்து கொண்ட காணாமல் போனோரின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் தமது அவல நிலையை எடுத்துரைத்தும், தமது பிள்ளைகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படியும் மனோகணேசனிடம் உருக்கமாகக் கேட்டனர். அவ்வேளை பெற்றோர்கள் சிலர் அவரின் கைகளைப் பற்றிப் பிடித்துக் கதறி அழத்தொடங்கி விட்டனர்.

அவர்களின் கண்ணீரைக் கண்ட மனோகணேசனின் கண்களும் பனித்தன. தான் உரிய நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்டவர்களிடம் அழுத்தம் கொடுப்பதாக அவர்களிடம் உறுதி கூறினார்.

மனோகணேசன் மக்கள் கண்காணிப்பு நிலையத்தின் தலைவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-04-16)




University of Colombo BIT
Call 772395895
Bachelor of Information Technology (UCSC)
Want to Qualify in IT?
3 Pass A' Levels? → Register for BIT
No Pass A' Levels? → Foundation in Information Technology
MCS 324,Palaly Road,Parameswara Junction
Web site : Http://www.mcsitcampus.org

நாவலர்
பட்டப்படிப்புக்கள் கல்லூரி
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
கல்வியாண்டு-2010/2011
G.A.Q/ 1st IN Com
விரிவுரைகள் ஆரம்பம்: 12.12.2009 சனி காலை 8 மணி
தமிழ்: கே. றஜீபன்
இந்துநாகரிகம்: ஆர்.தர்மினி
மெய்யியல்: பி.கமல்
புவியியல்: ஏ.ராஜா
அரசியல்: ஏ.கே.றொபின்சன்
நா.அரங்கியல்: எஸ்.சிவகரன்
சூழற்கல்வி: ஏ.ராஜா
புள்ளிவிவரவியல்: ரி.தவசேகர்
பொருளியல்: எஸ்.தயாபரன்
கணக்கீடு: ஆர்.சபேசன்
வணிகக்கல்வி: எஸ்.யசோ
English: S.Maheswaran
★ பல்கலைக்கழகங்களினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
★ A/L மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
★ பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக செய்து தரப்படும்.
B.A.Final வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
மேலதிக விவரங்களுக்கு:
நாவலர் பட்டப்படிப்புக்கள் கல்லூரி
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (வி/563099)



நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
காவேரியின் மாபெரும்
மலிவு விற்பனை
அனைத்துலக
புடைவைகளையும் மிக
மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள
காவேரி சில்க்ஸ்
48, பெரியகடை, யாழ்ப்பாணம்.
★ ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்.

SPOKEN ENGLISH With GRAMMAR
ஆரம்பம் - 12.12.2009
சனிகாலை 7 மணி
(Sat.,Sun., - 7 - 8 a.m.
BY: S. Jaisan
NEC Clock Tower Road, Jaffna
பெருமாள் கோயிலுக்கு அருகில்

T.E.C. யாழ்.ஸ்ரான்லி வீதி.
(மக்கள் வங்கிக்கு அருகாமை)
A/L இந்து நாகரிகம்
ஆசிரியர்: திரு.செ.சிவஞானம் B.A. HONS
அனைத்து பிரிவுகளும்
அலகு ரீதியான மீட்டல்களும் - பரீட்சையும்
G.A.Q - B.A. வெளிவாரி மாணவர்களுக்கான வகுப்புகளும் நடைபெறுகின்றன.
ஆரம்பம்:- 12.12.2009 சனி 9 மணி

THE SCIENCE CORNER
Clock Tower Road, Jaffna
PHYSICS - 2011 A/L
அலைகளும் அலைவுகளும்
ஆரம்பம்: 12.12.2009 (சனி)
sat, sun 6.30 -7.00 a.m
By: SELVAN (93109)

சிறப்பு விற்பனை
ஆரம்ப வகுப்பு முதல் அனைத்து வகுப்புக்களுக்குமான சகல பாடப் புத்தகங்களையும் சகலவிதமான கொப்பிகள், எழுது கருவிகள், காகிதாதிகள் அனைத்தையும் மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
தரம் 9 புதிய பாடத்திட்டப் புத்தகங்களும் விற்பனையாகிறது.
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்,தொ.பே: 222 9881

உடன் தேவை
பிரபல தனியார் கம்பனி ஒன்றிற்கு
அனுபவமுள்ள விற்பனைப்
பிரதிநிதிகள்
தேவை.
வயதெல்லை (25-35 ஆண்கள்)
தொடர்புகளுக்கு
திருமுருகன் கொம் நெற்
229.கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்

அதிரடி விலைக்கழிவு
எமது ஸ்ருடியோவில் படம்பிடித்திட.....
★ அடையாள அட்டைப்படம் 80/=
★ (4X6) அளவிலான படங்கள் 30/=
★ பிரதியாக்கம் (ஸ்ருடியோமட்டும்) 9/=
★ பனர், ஸ்டிக்கர்கள் 70/= (வி/562927)
மூர்த்தி டிஜிட்டல் கலர்லாப்
யாழ்ப்பாணம்

Presonal and Group Classes
★ Dip in MS Office - 2 months
★ Dip in DTP - 1 ½ months
★ Dip in Graphic Design - 1½ months
★ Dip in Web Design - 2 months
★ Certificate in Internet and E-Mail - 2 weeks
★ கற்கைநெறிகள் அனைத்தும் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
★ குறிப்பு:- கணனி இல்லாதவர்களிற்கு எனது "Laptop" மூலமாக பயிற்சியளிக்கப்படும்.
★ பயிற்சியின் பின் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
T.P.: 0779612038

நிரு ரீயூசன் சென்ரர்
கோண்டாவில்
கல்வியாண்டு-2010
★ ஆண்டு 4 முதல் 11 வரை (வழமையான ஆசிரியர் குழு)
ஆரம்பம்: 12.12.2009
சனி 6 மணி
(93096)

இப்போது யாழ்.மண்ணில்
ஆசிரியர் திரு.இ.சிவகணேசன் B.A (Hons) அவர்களின் 2010 புதிய பாடத்திட்டத்திற்கமைவான
* க.பொ.த (சா/த) மாணவர்களிற்கான கணிதம் (தரம் 9,10 மாணவர்களும் பயன்பெறலாம்)
* தரம் 9,10,11 சுயகற்றல் வழிகாட்டி. ("வரைவுகள் எண் தொடரிகள்") முழுமையான பாடப்பரப்பை உள்ளடக்கியது.
விரிவான விளக்கக் குறிப்புக்கள், பரீட்சைவழி காட்டல்கள், மாதிரி வினாக்கள், விடைகளையும் உள்ளடக்கியது.
அருகில் உள்ள அனைத்து புத்தக நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
மிகவிரைவில் 2010 புதிய பாடத்திட்டத்திற்கு அமைவான தரம்-9 மற்றும் தரம் 10 கணிதம் முழுமையான பாடப்பரப்பையும் உள்ளடக்கி
மேலதிக விவரங்களுக்கு: தொ.பே 024 4903603, 0213212588, mo: 0773787369
email: rsivaganedhan@yahoo.com (93087)

N.S.P Exercise Book
மாணவ மணிகளுக்கோர் நற்செய்தி!
எழுத்துகளுக்கு மேலும் அழகு சேர்க்கும் உங்கள் தோழன் NSP அப்பியாசக் கொப்பிகள். உங்களுக்குத் தேவையான அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள் மற்றும் எழுதுகருவிகள் மிகவும் மலிவான வகையில் பெற்றுக்கொள்ளலாம்.
இடம் - 30 வருட நிறைவையொட்டி மாபெரும் மலிவு விற்பனை நிலையம் "சுந்தர்சன்" மானிப்பாய்.
காலம் - 12.12.2009 சனிக்கிழமை தொடக்கம்.
தோ.பே 0718617918
N.S.P Exercise Book


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.